மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக
வலுப்படுத்துகை அமைச்சு

# பெண்கள், சமாதானம் மற்றும் பாதுகாப்பு

பெண்கள், சமாதானம் மற்றும் பாதுகாப்புத் தொடர்பான ஐக்கிய நாடுகள் பாதுகாப்புப் பேரவைத்
தீர்மானங்களின் அமுலாக்கத்திற்கான இலங்கையின் தேசிய செயற்திட்டம்
2023 - 2027

Supported by

From
the People of Japan

UN WOMEN

© 2022. மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக
வலுப்படுத்துகை அமைச்சு. பதிப்புரிமைக் கொண்டது.

ஆதரவு
ஜப்பான் அரசாங்கம்
மற்றும் பால்நிலை சமத்துவம் மற்றும் பெண்களின்
வலுவூட்டலுக்கான ஐக்கிய நாடுகளின் நிறுவனம்
**(UN Women)**

மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக
வலுப்படுத்துகை அமைச்சு

# பெண்கள், சமாதானம் மற்றும் பாதுகாப்பு

பெண்கள், சமாதானம் மற்றும் பாதுகாப்புத் தொடர்பான ஐக்கிய நாடுகள் பாதுகாப்புப் பேரவைத்
தீர்மானங்களின் அமுலாக்கத்திற்கான இலங்கையின் தேசிய செயற்திட்டம்
2023 - 2027

Supported by

From
the People of Japan

UN WOMEN

# அங்கீகாரங்கள்

பெண்கள் மற்றும் சிறுவர் விவகார மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு 2019ஆம் ஆண்டில் பெண்கள், சமாதானம் மற்றும் பாதுகாப்பு குறித்த இந்தத் தேசிய செயற் திட்டத்தை உருவாக்கும் பயணத்தை ஆரம்பித்தது. அது ஜப்பான் அரசாங்கத்தின் தாராளமான உதவியுடனும், இலங்கை ஐ.நா . பெண்கள் அமைப்பின் தொழில்நுட்ப ஆதரவுடனும் ஆரம்பிக்கப்பட்டது. பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் நீக்குவதற்கான பிரகடனத்தில் கையொப்பமிட்டுள்ள இலங்கை அரசாங்கம், தனிப்பட்ட மற்றும் பொது வாழ்க்கையின் ஒவ்வோர் அம்சத்திலும் அனைத்துத் தரப்புப் பெண்களையும் வலுவூட்டுவதற்கு உறுதிபூண்டுள்ளது. மூன்று தசாப்த கால ஆயுத மோதலினால் பாதிப்படைந்த தீவின் சமூக-அரசியல் வரலாற்றையும் இலங்கை அரசாங்கத்தின் இந்தக் கடப்பாடு கவனத்தில் கொள்கின்றது. இந்தப் பின்னணியில்தான், பெண்கள், சமாதானம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான இந்தத் தேசிய செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

முதலில், இந்தத் தேசிய செயற்திட்டத்திற்கான செயற்பாடுகள் மற்றும் குறிகாட்டிகளை விருத்தி செய்வதற்குத் தேவையான முதன்மையான தரவுகளைச் சேகரிப்பதற்காக இலங்கையின் ஒன்பது மாகாணங்களிலும் நடைபெற்ற பொதுமக்களின் கலந்தாலோசனை அமர்வுகளில் கலந்துகொண்ட அனைவருக்கும் முக்கியமாக எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். அவர்களுடைய பங்களிப்பு இல்லாமல் இந்த தேசிய செயற்திட்டம் சாத்தியமாகியிருக்காது.

இதேபோன்று, சிவில் சமூக அமைப்புக்கள், சமுதாயமட்ட நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், ஐக்கிய நாடுகள் பங்குதாரர் அமைப்புகள், சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் மற்றும் மாகாண கலந்தாலோசனை அமர்வுகள் மற்றும் சரிபார்ப்பு அமர்வுகளில் கலந்துகொண்ட அனைத்து நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். தேசிய செயற் திட்டத்தை செழுமைப்படுத்திய நாங்கள் பெற்ற பரிந்துரைகள் மற்றும் கருத்துகளை நாங்கள் மதிக்கிறோம். இந்தத் தேசிய செயற்திட்டத்தின் அமுலாக்கத்தை வசதிப்படுத்துவதற்குப் பெண்கள் மற்றும் சிறுவர் விவகார மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சுடன் கூட்டாக ஒத்துழைப்பதற்கு ஏற்றுக்கொண்ட அனைத்து அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் எங்கள் ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். அவர்களின் பெருந்தன்மை மிகவும் மதிக்கப்படுவதுடன் பாராட்டப்படுகிறது.

மேலும், முந்தைய நான்கு செயலாளர்களான பெண்கள் மற்றும் சிறுவர் விவகாரங்கள் மற்றும் உலர் வலய அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் திருமதி தர்'னா சேனாநாயக்க, பெண்கள் மற்றும் சிறுவர் விவகாரங்கள் மற்றும் சமூக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் திருமதி ஏ.எஸ்.எம்.எஸ். மஹாநாம, பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாடு, முன்பள்ளிகள் மற்றும் ஆரம்பக் கல்வி, பாடசாலை உட்கட்டமைப்பு மற்றும் கல்வி சேவைகள் இராஜாங்க அமைச்சின் செயலாளர் திருமதி கே.எம்.எஸ்.டி. ஜெயசேகர மற்றும் இந்த தேசிய செயல்திட்டத்தின் அபிவிருத்திக்கு வழிகாட்டிய பெண்கள், சிறுவர் விவகாரங்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் செயலாளரான திரு. மு.ர்.னு.று.ஆ.ே.டீ. ஹபுஹின்னே ஆகியோருக்கு நன்றி கூறுகின்றோம்.

நாங்கள் அனைத்துச் செயலாளர்கள் மற்றும் தொடர்புடைய அமைச்சுக்கள், குறிப்பாக: புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு, கல்வி அமைச்சு, நிதி அமைச்சு, மீன்பிடி அமைச்சு,

வெளிவிவகார அமைச்சு, சுகாதார அமைச்சு, நீதி அமைச்சு, காணி அமைச்சு, வெகுசன ஊடக அமைச்சு, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு, பொதுச் சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு மற்றும் தொழில்நுட்ப அமைச்சு ஆகியவற்றின் ஒத்துழைப்பை நன்றியுடன் அங்கீகரிக்கின்றோம்.

நாங்கள், கல்விச் சீர்திருத்தங்கள், திறந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் தொலைதூரக் கற்றல் ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சு, பெருந்தோட்ட வீட்டுவசதி மற்றும் சமூக உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சு, உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சு, சுதேச மருத்துவ மேம்பாடு, கிராமிய மற்றும் ஆயுர்வேத மருத்துவமனைகள் மேம்பாடு மற்றும் சமூக சுகாதார இராஜாங்க அமைச்சு, தேசிய பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சு, ஆரம்ப சுகாதார பராமரிப்பு, தொற்றுநோய்கள் மற்றும் கொவிட் நோய்க் கட்டுப்பாட்டு இராஜாங்க அமைச்சு, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் இராஜாங்க அமைச்சு, சமுர்த்தி, வீட்டுப் பொருளாதாரம், நுண்நிதி, சுய வேலைவாய்ப்பு மற்றும் வர்த்தக அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு, மற்றும் திறன் விருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சு ஆகிய இராஜாங்க அமைச்சுக்கள் மற்றும் அவற்றின் செயலாளர்களுக்கு நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம்.

இந்தத் தேசிய செயற்திட்டத்தின் உருவாக்கத்திற்குத் தங்கள் கருத்துகள் மற்றும் பரிந்துரைகள்மூலம் பங்களித்த மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு அனைத்து உறுப்பினர்களுக்கும் நாங்கள் நன்றி தெரிவிக்கின்றோம்.

தேசிய செயற்திட்டத்தை வரைவாக்குவதில் தனது தொழில்நுட்ப நிபுணத்துவத்தை வழங்கியதற்காகவும், மாகாண கலந்தாலோசனைகள், சரிபார்ப்பு நிகழ்ச்சிகள் மற்றும் பிற தொடர்புடைய கூட்டங்களை திருமதி அயோத்யா அபயசிறி, திருமதி கிரிஜா சிவகுமார் மற்றும் திருமதி மேகலா மத்துமபண்டார ஆகியோரின் தொழில்நுட்ப ஆதரவுடன் வசதிப்படுத்துவதற்கும், ஒழுங்குபடுத்துவதற்கும் மற்றும் தொடர்புடைய அனைத்து அறிக்கைகளையும் தொகுப்பதற்கும் உதவிய தேசிய முன்னணி ஆலோசகர் திருமதி தனுஷ்கா மெதவதேயின் அர்ப்பணிப்பை நாங்கள் நன்றியுடன் அங்கீகரிக்கின்றோம். அறிக்கையாளர்களாக ஆதரவளித்த திருமதி ஜெயலட்சுமி, திருமதி பாக்யா மற்றும் திருமதி காயத்திரி ஆகியோருக்கும் நாங்கள் நன்றி தெரிவிக்கின்றோம்.

இறுதியாக, கடந்தகால மற்றும் நிகழ்காலத் தொழில்நுட்ப உதவிகளுக்காகவும், பெண்கள், சமாதானம் மற்றும் பாதுகாப்புத் தொடர்பான தேசிய செயற்திட்டத்தை அதன் ஆரம்பம் முதல் இறுதிவரை ஒருங்கிணைத்தமைக்காகவும் இலங்கை ஐக்கிய நாடுகள் பெண்கள் அமைப்பின் பணியாளர்களுக்கு எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இந்தத் தேசிய செயற்திட்டம் இலங்கையில் பெண்கள், சமாதானம் மற்றும் பாதுகாப்பை மேலும் முன்னேற்றுவதற்கான முதற் படியாக அமையும் என்பது எமது உறுதியான நம்பிக்கையாகும்.

**ஜமுனா பெரேரா**
செயலாளர்,
மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு

# பொருளடக்கம்


**சுருக்கங்கள்** 2

**சுருக்கங்கள்** 5

**அறிமுகம் மற்றும் பின்னணி** 7

- தேசிய செயற்திட்டத்தின் சூழலமைவு 11
- தேசிய செயற்திட்டத்தின் குறிக்கோள்கள் 16
- தேசிய செயற்திட்டத்தை உருவாக்கின்ற செயன்முறை மற்றும் கலந்தாலோசனைகளில் கண்டறியப்பட்ட விடயங்கள் 19

கருப்பொருள் முன்னுரிமை 01:
**சட்டம், கொள்கை மற்றும் நிறுவனச் சீர்திருத்தங்கள்** 25

கருப்பொருள் முன்னுரிமை 02:
**பெண்களால் அனுபவிக்கப்பட்ட இடப்பெயர்வின் தாக்கத்தை நிவர்த்தி செய்தல்** 46

கருப்பொருள் முன்னுரிமை 03:
**இராணுவக் கணவனை இழந்த பெண்கள், முன்னாள் பெண் போராளிகள் மற்றும் பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் பிரச்சினைகளை நிவர்த்தி செய்தல்** 57

கருப்பொருள் முன்னுரிமை 04:
**பெண்களின் பாதுகாப்பு மற்றும் பந்தோபஸ்து** 67

கருப்பொருள் முன்னுரிமை 05:
**பெண்களின் பொருளாதார வலுவூட்டல்** 77

கருப்பொருள் முன்னுரிமை 06:
**சமாதானத்தைக் கட்டியெழுப்புதல், மோதல் தடுப்பு, மோதல் தீர்வு, தீர்மானம் மேற்கொள்ளல் மற்றும் அரசியலில் பெண்களின் பங்களிப்பை ஊக்குவித்தல்** 84

**கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு** 92

- இலக்குகள் மற்றும் குறிகாட்டிகள் 93
- M&E அமுலாக்கல் நுட்பம் 94

**பெண்கள், சமாதானம் மற்றும் பாதுகாப்பு குறித்த தேசிய செயற்திட்டத்தை அமுல்படுத்துவதிலுள்ள சவால்கள்** 98

இணைப்பு 1:
**மாகாண கலந்தாலோசனைகளின் அட்டவணை** 101

# சுருக்கங்கள்

| | |
|---|---|
| **CBOs** | சமுதாயமட்ட நிறுவனங்கள் |
| **CEDAW** | பெண்களுக்கு எதிரான அனைத்துப் பாரபட்சங்களையும் இல்லாதொழிப்பதற்கான சமவாயம் |
| **CRSV** | மோதலுடன் தொடர்புடைய பாலியல் வன்முறை |
| **CSHR** | மனித உரிமை கற்கைக்கான நிலையம் |
| **CSOs** | சிவில் சமூக நிறுவனங்கள் |
| **FGD** | குவிநோக்கு குழுக் கலந்துரையாடல் |
| **FHH** | பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் |
| **GoSL** | இலங்கை அரசாங்கம் |
| **IDPs** | உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் |
| **INGOs** | சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் |
| **IOM** | சர்வதேச புலம்பெயர் அமைப்பு |
| **LTTE** | தமிழீழ விடுதலைப் புலிகள் |
| **M&E** | கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு |
| **NAP** | தேசிய செயற்திட்டம் |
| **WPS** மீதான **NAP** | பெண்கள், சமாதானம் மற்றும் பாதுகாப்பு மீதான தேசிய செயற்திட்டம் |
| **NGOs** | அரச சார்பற்ற நிறுவனங்கள் |
| **OGP** | திறந்த அரசாங்க கூட்டாண்மை |
| **PWDs** | இயலாமைகளை உடைய நபர்கள் |
| **SDGs** | நிலையான அபிவிருத்தி இலக்குகள் |
| **SGBV** | பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகள் |
| **SOPs** | நியம செயற்பாட்டு நடைமுறைகள் |
| **UN Women** | பால்நிலை சமத்துவம் மற்றும் பெண்களின் வலுவூட்டலுக்கான ஐக்கிய நாடுகளின் நிறுவனம் |
| **WDO** | மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் |
| **WPS** | பெண்கள், சமாதானம் மற்றும் பாதுகாப்பு |

# அறிமுகம் மற்றும் பின்னணி

## ஐக்கிய நாடுகள் பாதுகாப்புப் பேரவைத் தீர்மானம் 1325

31 ஒக்டோபர் 2000 அன்று பெண்கள், சமாதானம் மற்றும் பாதுகாப்பு (WPS) தொடர்பான மைல்கல்லான தீர்மானத்தை ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புப் பேரவை மேற்கொண்டது. இது முரண்பாட்டுச் சூழ்நிலைகளின்போதும் பின்னரும் பெண்கள் முகங்கொடுக்கின்ற பிரச்சினைகள் தொடர்பாக உலகம் கவனம் செலுத்துவதற்கு வழிவகுத்தது. அதேநேரத்தில், இது சமாதானம் மற்றும் பாதுகாப்பில் பெண்களின் வகிபாகத்தின் முக்கியத்துவத்தை அங்கீகரித்துள்ளது. எனவே, இந்தத் தீர்மானம், தீர்மானமெடுத்தலில் பெண்களை ஈடுபடுத்துவதற்கும், முரண்பாடுகளுக்கான தீர்வுப் பொறிமுறைகளில் பெண்களின் பங்குபற்றலை அதிகரிப்பதற்கும் அரசாங்கங்கள் நடவடிக்கை எடுப்பதனை மேலும் ஊக்குவிக்கின்றது.

ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புப் பேரவைத் தீர்மானம் (UNSCR) 1325 இன்கீழ் அடையாளங் காணப்பட்ட நான்கு பிரிவுகளின் அடிப்படையில் WPS உலகளாவிய

1. பங்கேற்பு
2. பாதுகாப்பு
3. தடுப்பு
4. நிவாரணம் மற்றும் மீட்பு

UNSCR 1325 இற்கு மேலதிகமாக, WPS நிகழ்ச்சிநிரலை முன்னிறுத்தும் ஒன்பது ஆதரவான தீர்மானங்கள் உள்ளன. அவையாவன:

1. UNSCR 1820
2. UNSCR 1888
3. UNSCR 1889
4. UNSCR 1960
5. UNSCR 2106
6. UNSCR 2122
7. UNSCR 2242
8. UNSCR 2467
9. UNSCR 2493

இந்த UNSCR தீர்மானங்களின்கீழ் பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் இல்லாதொழிப்பதற்கான சமவாயம் மற்றும் பெய்ஜிங் பிரகடனம் மற்றும் Platform for Action ஆகியவை இலங்கைக்கான WPS தொடர்பான தேசிய செயற்திட்டத்தை (NAP) வகுப்பதற்குப் பயன்படுத்தக்கூடிய ஓர் அடித்தளக் கட்டமைப்பை வழங்குகின்றன. மேலும் இலங்கை அரசாங்கத்தின் தேசிய கொள்கைக் கட்டமைப்பு கொண்டுள்ள அடிப்படைக் கட்டமைப்பானது பெண்கள், சிறுவர் விவகார மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு விசேட NAP இன் உருவாக்கத்தினூடாகப் பெண்கள் மீதான மோதல்களின் தாக்கங்கள் குறித்துப் பணியாற்றுவதற்கு வழிசமைத்துள்ளது.

ஆயுத மோதல் முடிவுக்கு வந்தபோதிலும்தேசிய கொள்கை கட்டமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள கொள்கைகளினூடாக இலங்கை அரசாங்கம் மோதல் தொடர்பான குறைதீர்க்கும் பொறிமுறைகளின் மீதான தனது தொடர்ச்சியான அர்ப்பணிப்பைச் சுட்டிக்காட்டுகின்றது.

இந்த NAP இன் உருவாக்கத்தில் UNSCR 1325 தீர்மானத்தில் சுட்டிக்காட்டப்பட்ட குறிப்பிட்ட பிரச்சினையிலிருந்து வழிகாட்டுதல் பெறப்பட்டிருக்கின்றது.

இந்தத் தீர்மானம் அங்கீகரிப்பதாவது:

**அகதிகள் மற்றும் உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்கள் உள்ளிட்ட சிவில் முரண்பாடுகளால் மோசமாகப் பாதிக்கப்பட்டவர்களில் குறிப்பாகப் பெண்கள் மற்றும் சிறுவர்கள், பெரும்பாலானோராக இருப்பதுடன் அவர்கள் அதிகரித்த அளவில் போராளிகள் மற்றும் ஆயுதமேந்திய சக்திகளால் குறிவைக்கப்படுவதுடன், நீடித்த சமாதானம் மற்றும் நல்லிணக்கத்தில் இது கொண்டுள்ள தொடர்ச்சியான தாக்கத்தை அங்கீகரிக்கின்றது.**

தீர்மானம் மேலும் பின்வருவனவற்றை மீள் உறுதிப் படுத்துகின்றது:

**மோதல்களைத் தடுப்பதிலும், தீர்வு காண்பதிலும், சமாதானத்தைக் கட்டியெழுப்புவதிலும் பெண்களின் முக்கிய வகிபாகம், சமாதானம் மற்றும் பாதுகாப்பைப் பேணுதல் மற்றும் மேம்படுத்துவதற்கான அனைத்து முயற்சிகளிலும் அவர்களின் சமமான பங்கேற்பு மற்றும் முழுமையான ஈடுபாட்டின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவது, மற்றும் மோதல் தடுப்பு மற்றும் தீர்வு தொடர்பாகத் தீர்மானமெடுப்பதில் அவர்களின் பங்களிப்பை அதிகரிக்க வேண்டியதற்கான அவசியம்.**

இந்த முடிவுகளை எட்டுவதற்கு, குறித்த தீர்மானம் சமாதானம் மற்றும் பாதுகாப்பைப் பேணுதல் மற்றும் மேம்படுத்தலுடன் தொடர்புடைய அனைத்து நடவடிக்கைகளிலும் பால்நிலைச் சமத்துவம் மற்றும் சமமான பங்களிப்பு மற்றும் பெண்களின் முழு ஈடுபாட்டை ஊக்குவிக்க முயல்கிறது. மேலும், "மோதல்களின்போதும் அதற்குப் பின்னரும் பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளின் உரிமைகளைப் பாதுகாக்கும் முழுமையான சர்வதேச மனிதாபிமான மற்றும் மனித உரிமைச் சட்டத்தை அமுல்படுத்த வேண்டியதன் அவசியத்தை" அது மீண்டும் உறுதிப்படுத்துகிறது. உலகெங்கிலும் உள்ள அரசாங்கங்கள் இந்தத் தேவைகளை அங்கீகரிப்பதற்கு ஊக்குவிக்கப்பட்டிருக்கின்றன. அரசாங்கங்கள் சமாதானம் மற்றும் பாதுகாப்புடன் தொடர்புடைய அனைத்து நடவடிக்கைகளிலும் பால்நிலையை முன்னிலைப்படுத்துவதற்கும் சமாதானம் மற்றும் பாதுகாப்பை மேம்படுத்துவதில் பெண்களின் முழுப் பாதுகாப்பு மற்றும் ஈடுபாட்டை உறுதிப்படுத்துவதற்கான வினைத்திறனுள்ள நிறுவன, சமூக, கொள்கை மற்றும் சட்ட ஏற்பாடுகளை நிறுவுவதற்கும் ஊக்குவிக்கப்பட்டிருக்கின்றன. சுபிட்சத்தின் நோக்கில் வெளிப்படுத்தப்பட்டுள்ள இந்தக் கட்டமைப்பினுள்தான் இலங்கைக்கான பெண்கள், சமாதானம் மற்றும் பாதுகாப்புத் தொடர்பான தேசிய செயற்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

## பெண்கள், சமாதானம் மற்றும் பாதுகாப்புத் தொடர்பான தேசிய செயற்திட்டத்தை வகுப்பதற்கான தேவைப்பாடுகள்

1981 முதல் இலங்கை CEDAW இல் ஒரு தரப்பாக இருந்து வருகிறது. குறிப்பாக மோதல் காலங்களிலும், மோதல்களால் அழிக்கப்பட்ட சமூகங்களிலும் பால்நிலைச் சமத்துவத்திற்கான நிகழ்ச்சிநிரலை முன்னோக்கிக் கொண்டுசெல்வதற்கும், பெண்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுப்பதற்கும், CEDAW மற்றும் UNSCE 1325 ஆகிய இரண்டும் பயனுள்ள கருவிகளாகும்.

கடந்த ஐம்பது வருடங்களில், இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் (LTTE) இடையே இடம்பெற்ற நீடித்த சிவில் மோதலையும், அத்துடன் பிற கிளர்ச்சிகள் மற்றும் கலவரங்களையும் இலங்கை அனுபவித்தது, இவை அனைத்தும் பெண்களின் வாழ்க்கையைப் பாரபட்சமாகப் பாதித்தன. இந்த மோதல்களின் விளைவாக அதிக எண்ணிக்கையிலான பெண்கள் பெண் தலைமைத்துவக் குடும்பங்களாதல், இடப்பெயர்வுக்கு முகங் கொடுத்தல், நிலையான வருமானத்திற்கான வழிகளை இழத்தல், அதிகரித்த வறுமைக்கு முகங்கொடுத்தல், பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (SGBV) அல்லது மோதலுடன் தொடர்புடைய பாலியல் வன்முறை (CRSV) மற்றும் குறிப்பாகப் பெண்களைப் பாதிக்கின்ற ஏனைய வகையான வன்முறை மற்றும் அநீதிகளால் பாதிக்கப்பட்டனர். இவை மறுபுறத்தில், பெண்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுத்தல், பெண்களின் பாதுகாப்பை ஊக்குவித்தல், தீர்மானமெடுக்கும் பதவிகளில் பெண்களின் அதிகரித்த பங்களிப்பை ஊக்குவித்தல் மற்றும் இலங்கை அரசியலமைப்பின் உறுப்புரையில் அடிப்படை உரிமையாகச் சமத்துவம் அங்கீகரிக்கப்பட்டுள்ள நிலையில் முழுமையான பால்நிலைச் சமத்துவத்தை அடைதல் ஆகியவற்றில் அரசுக்குச் சவால்களை ஏற்படுத்துகின்றன. பெண்களின் வாழ்வின் யதார்த்தங்களில் இந்த மோதலின் தொடர்ச்சியான தாக்கம், இலங்கையின் வரலாற்றின் இந்தக் கட்டத்தில் WPS குறித்த NAPயைக் கடைப்பிடிக்க வேண்டிய அவசியத்தை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கையில் ஆயுத மோதல்கள் மற்றும் பிற மோதல்கள் தொடர்பான சூழ்நிலைகள் காரணமாக, மற்றையவற்றுக்கிடையில் பெண்கள் பின்வரும் பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளனர்:

- போரால் விதவைகளாதல்
- பெண்களுக்கு அல்லது அவர்களின் அன்புக்குரியவர்களுக்கு ஏற்படுகின்ற, மோதலுடன் தொடர்புடைய இயலாமைகள்
- அன்புக்குரியவர்களின் மரணம் மற்றும் காணாமற்போதல்
- உளக்காயங்கள் மற்றும் நீண்டகால உளக்காயப் பாதிப்பு அனுபவங்கள்
- சுரண்டல் (பாலியல் மற்றும் வேறு)
- நீதிக்கான அணுகல் தொடர்பான பிரச்சினைகள்
- கட்டமைப்பு ரீதியான ஏற்றத்தாழ்வுகள்
- பால்நிலை அடிப்படையிலான பாகுபாடு
- பால்நிலை கருதாத, பால்நிலை நடுநிலையான அல்லது பால்நிலை உணர்திறனற்ற சட்டங்கள் மற்றும் கொள்கைகள்
- சமூக ஏற்றத்தாழ்வுகள் காரணமாக நலிவுகளை எதிர்கொண்டிருக்கின்ற சமூகப் பிரிவு என்பதற்குப் பதிலாக பெண்களை நலிவடையக்கூடிய குழுவாகக் கருதுவதன்மீது நிறுவப்பட்ட பாதுகாப்புப் பொறிமுறைகளும் அத்தகைய பாதுகாப்புப் பொறிமுறைகளில் உள்ள குறைபாடுகளும்.
- அதிகரித்த வறுமை
- பால்நிலை, இனம், மதம், சாதி, சமூக நிலை, பொருளாதார நிலை மற்றும் கல்வி நிலை ஆகியவற்றிலுள்ள மேற்பொருந்துகின்ற நலிவுகள்
- மோதலைத் திறம்படத் தடுக்கும் நோக்கில் அரச, மாகாண மற்றும் சமூக மட்டக் கொள்கைகளின் ஒருங்கிணைப்புப் பற்றாக்குறை.
- அரசியல் பங்கேற்பு மற்றும் பிரதிநிதித்துவத்திற்கான வாய்ப்புகள் பற்றாக்குறை
- சமூக ஒத்திசைவான கொள்கைகளின் பற்றாக்குறை
- ஆதரவுக் கட்டமைப்புகள் பற்றாக்குறை
- நிலையான வருமானம் ஈட்டும் முறைகள் இல்லாமை
- பொருளாதார ஆதரவுப் பற்றாக்குறை அல்லது இல்லாமை
- ஒத்திசைவற்ற நிவாரண மற்றும் மீட்புச் செயல்முறைகள்
- பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் அதிகரிப்பு (FHH)
- பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (SGBV) அல்லது மோதல் தொடர்பான பாலியல் வன்முறை (CRSV)

இலங்கை அரசாங்கம் 'ஒழுக்கமான, நீதியான சமூகத்தையும், வளமான தேசத்தையும்' உருவாக்க உறுதிபூண்டுள்ளது. இந்த பொதுவான பின்னணியில்தான், பெண்கள், சமாதானம் மற்றும் பாதுகாப்பிற்கான ஒரு செயற்பாட்டுக் கட்டமைப்பை விருத்திசெய்யும் பணியை பெண்கள், சிறுவர் விவகாரம் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு மேற்கொண்டுள்ளது.

# தேசிய செயற்திட்டத்தின் சூழலமைவு

## இலங்கையின் ஆயுத மோதல் மற்றும் அது பெண்களை எவ்வாறு பாதித்தது என்பது குறித்த சுருக்கம்

1983க்கும் 2009க்கும் இடையில், அரச ஆயுதப் படைகளுக்கும் LTTEயின் போராளிகளுக்கும் இடையிலான நீடித்த ஆயுத மோதலுக்குள் இலங்கை சிக்குண்டிருந்ததுடன், அது பொருளாதார, சமூக, அரசியல் மற்றும் இன-மத ரீதியான அழிவுகளை விட்டுச்சென்றது. இது பாரியளவில் உயிரிழப்பு, மோதல் தொடர்பான காணாமற்போதல், பொதுமக்கள் உயிரிழப்பு, மோதலுடன் தொடர்புடைய இயலாமைகள் மற்றும் சொத்து மற்றும் சுற்றுச்சூழலில் பாரிய அழிவை விளைவாக்கியது. ஒரு தசாப்தத்திற்கு முன்னர் ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்தபோதிலும், அதன் தாக்கம் இன்றுவரை தொடர்கிறது.

பெண்கள், சிறுவர் விவகாரம் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு அமைச்சு கடந்தகாலப் பாதிப்புகளை நிவர்த்தி செய்வதோடு, பெண்களின் பால்நிலைச் சமத்துவம் மற்றும் நீடித்த சமாதானம் மற்றும் பாதுகாப்பிற்கான உகந்த சூழலை உருவாக்கும் நோக்கத்தைக் கொண்டுள்ளது. பெண்கள் மீதான ஆயுத மோதலின் தாக்கத்தின் மீதான WPS குறித்த NAP இன் குறிப்பிட்ட கவனத்தை இந்த அர்ப்பணிப்பு உறுதிப்படுத்துவதுடன், இது பெண்களின் உரிமைகள், பாதுகாப்பு மற்றும் வலுவூட்டல் தொடர்பான ஏனைய தேசிய செயற் திட்டங்களின் நோக்கங்களிலிருந்து தனித்துவமாக வேறுபட்டது.

மோதல் சூழல்கள் தொடர்பாக பெண்களின் அனுபவங்கள் ஆண்களின் அனுபவங்களிலிருந்து வித்தியாசமானவையாகும். பெண்கள் மீதான மோதலின் தாக்கமானது பெண்களைத் தொடர்ந்து பாதிக்கப்படக்கூடியவராக்குகின்ற சமூகரீதியான தரநிலைகள் மற்றும் எண்ணங்களால் நுணுக்கப்பட்டு அதிகப்படுத்தப்படுவதுடன், தீர்மானம் மேற்கொள்ளலிலும் ஆளுகையிலும் பெண்களின் முனைப்பான ஈடுபாட்டைத் தொடர்ச்சியாகத் தடுக்கின்றது. இந்த மாறுபட்ட தாக்கங்கள் சமூகத்தில் பெண்களின் வகிபாகத்தை மேலும் சுருக்கிவிட்டன. சட்டங்கள் மற்றும் கொள்கைகள் அவை பதிலளிக்க உத்தேசித்துள்ள சூழ்நிலைகளை வினைத்திறனாக நிவர்த்தி செய்ய வேண்டுமானால், அத்தகைய சமூக நிலைமாற்றங்களைக் கவனத்திற் கொள்வது அவசியமானதாகும்.

இலங்கையின் அரசியலமைப்பு, உறுப்புரை 12(4)ன் அடிப்படையில், பெண்கள், குழந்தைகள் அல்லது இயலாமைகளை உடையவர்களின் முன்னேற்றத்திற்காகச் 'சட்டம், துணையான சட்டம் அல்லது நிறைவேற்று நடவடிக்கை' மூலம் 'விசேட ஏற்பாட்டினை' மேற்கொள்ளலாம் எனக் குறிப்பிடுகின்றது. இது WPS குறித்த NAP ஊடாகப் பெண்களின் முன்னேற்றத்திற்கான குறிப்பான நடவடிக்கைகளை ஏற்றுக்கொள்வதற்கு அனுமதிக்கிறது.

## பெண்களின் பாதுகாப்பு மற்றும் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதில் பங்களிப்பை உறுதிப்படுத்த இலங்கை அரசால் (GoSL) மேற்கொள்ளப்பட்ட உறுதியான நடவடிக்கைகள்

பெண்களின் உரிமை, பாதுகாப்பு மற்றும் வலுவூட்டலை உறுதிசெய்வதற்கு GoSL பல்வேறு விரிவான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. அடிப்படை மட்டங்களில் மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் (WDOs), உளநல ஆலோசனை உத்தியோகத்தர்கள், மகளிர் அபிவிருத்தி கள உதவியாளர்கள், மாவட்ட மற்றும் பிரதேச மட்டத்தில் உளநல ஆலோசனை உதவியாளர்கள், சிறுவர்

உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர்கள், ஆரம்ப குழந்தைப் பருவ அபிவிருத்தி உதவியாளர்கள், சிறுவர் பாதுகாப்பு மற்றும் உளசமூக உத்தியோகத்தர்கள் மற்றும் நிவாரணமளிக்கும் சகோதரிகள் ஆகியோர் பெண்கள் மற்றும் சிறுவர்களின் நலன்கள் பாதுகாக்கப்படுவதை உறுதிசெய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த உத்தியோகத்தர்கள் தங்களின் வகிபாகத்தைப் பால்நிலை உணர்திறனுடன் மேற்கொள்வதை உறுதிப்படுத்துவதற்காக அவர்களுக்குப் பால்நிலை மற்றும் தொழில்நுட்ப விடயங்களில் பயிற்சிகள்[1] வழங்கப்படுகின்றன.

இதற்கு இணையாக, உள்ளூர்ப் பெண்களின் தலைமைத்துவத் திறன்கள், நிதியியல் அறிவு மற்றும் பொதுவாக சமூகத்தில் ஈடுபாடு அதிகரிப்பதை உறுதி செய்வதற்காக இலங்கை அரசாங்கம் கள மட்டத்தில் பல முயற்சிகளை உருவாக்கியுள்ளது. தற்போது, இந்த நடவடிக்கைகளை அமுலாக்குவதற்காக 24 மாவட்ட மகளிர் சமாசங்கள், 330 பிரதேச மகளிர் சமாசங்கள் மற்றும் 12,500 மகளிர் செயற்பாட்டுச் சங்கங்கள் மகளிர் பணியகத்தின்[2] கீழ் செயற்பட்டு வருகின்றன. மேலும், முகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு மகளிர் செயற்பாட்டுச் சங்கங்களிலுள்ள பெண்களின் திறன் விருத்தி மற்றும் பொருளாதார வலுவூட்டலை இலக்காகக்கொண்ட நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுக்க நிதி ஒதுக்கியுள்ளது[3].

மேலும், 2014ஆம் ஆண்டில், வேறுபட்ட உத்தியோகத்தர்களிடையே ஒத்துழைப்பை வலுப்படுத்த மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களில் பெண்கள் மற்றும் சிறுவர் அபிவிருத்திப் பிரிவுகளை[4] GoSL நிறுவியது. அவ்வாறு செய்வதன்மூலம், பணிகள் மீண்டும் மேற்கொள்ளப்படுவதை அரசாங்கம் உறுதியாகத் தடுத்துள்ளதுடன் வேறுபட்ட அதிகாரிகள் மற்றும் நிறுவனங்களுக்கிடையில் ஒருங்கிணைப்பை வசதிப்படுத்தியுள்ளது. இந்தப் பிரிவு 2015இல் மேலும் பலப்படுத்தப்பட்டது[5]. இந்தப் பிரிவுகள் மேலும் தகவல்களைச் சேகரிப்பதற்கான மற்றும் கலந்தாலோசனைக்கான மையங்களை வழங்குகின்றது.

அமைச்சரவை மட்டத்தில், 2013இல் பால்நிலை குவியப்புள்ளிகளை[6] நிறுவுவதற்கு அமைச்சரவை ஒப்புதல் பெறப்பட்டதைத் தொடர்ந்து, இது போன்ற குவியப்புள்ளிகள் தொடர்புடைய அனைத்து அமைச்சுக்களிலும் நிறுவப்பட்டுள்ளன. இந்த குவியப்புள்ளிகள் பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளுக்கு எதிரான பாகுபாட்டை அகற்றுவதற்கு பால்நிலையைப் பிரதானப்படுத்துகின்ற கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை மேம்படுத்துவதை இலக்காகக் கொண்டுள்ளன. பால்நிலை அடிப்படையிலான வன்முறை ஏற்படுவதைக் குறைப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள், அமைப்புகள் மற்றும் நடவடிக்கைகளை வகுக்கவும் பால்நிலைச் சமத்துவத்தை பேணவும் அவர்கள் மேலும் முயல்கின்றனர்.[7]

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பெண்களை வலுவூட்டுவதற்கு இலங்கை அரசாங்கம் குறிப்பிடத்தக்களவில் கவனம் செலுத்திவருகின்றது.

1 மகளிர், சிறுவர் விவகார சமூக பாதுகாப்பு அமைச்சின் 2019ம் ஆண்டுக்கான செயற்திறன் அறிக்கை கிடைக்கின்றது: https://www.parliament.lk/uploads/documents/paperspresented/performance-report-ministry-of-women-child-affairs-2019.pdf இறுதியாக அணுகப்பட்டது 18 பெப்பிரவரி 2021.
2 பெண்கள் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக்கல்வி, பாடசாலை உட்கட்டமைப்பு மற்றும் கல்விச் சேவைகள் இராஜாங்க அமைச்சின் வலைத்தளம்: http://www.childwomenmin.gov.lk/institutes/womens-bureau இறுதியாக அணுகப்பட்டது 18 பெப்பிரவரி 2021.
3 மகளிர், சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சின் 2017ம் ஆண்டுக்கான செயற்திறன் அறிக்கை. கிடைக்கின்றது: https://www.parliament.lk/uploads/documents/paperspresented/performance-report-ministry-of-wom- en-child-affairs-2017.pdf இறுதியாக அணுகப்பட்டது 18 பெப்பிரவரி 2021.
4 சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சின் 2014ம் ஆண்டுக்கான செயற்திறன் அறிக்கை. கிடைக்கின்றது: https://www.parliament.lk/uploads/documents/paperspresented/performance-report-ministry-of-child-development-and-women-affairs-2014.pdf இறுதியாக அணுகப்பட்டது 19 பெப்பிரவரி 2021.
5 பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் 2015ம் ஆண்டுக்கான செயற்திறன் அறிக்கை. கிடைக்கின்றது: https://www.parliament.lk/uploads/documents/paperspresented/performance-report-ministry-of-women-child-affairs-2015.pdf இறுதியாக அணுகப்பட்டது 19 பெப்பிரவரி 2021.
6 பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் 2017ம் ஆண்டுக்கான செயற்திறன் அறிக்கை. கிடைக்கின்றது: https://www.parliament.lk/uploads/documents/paperspresented/performance-report-ministry-of-wom- en-child-affairs-2017 pdf இறுதியாக அணுகப்பட்டது 19 பெப்பிரவரி 2021.

உதாரணமாக, ஆயுத மோதலின் விளைவாக விதவையாக்கப்பட்ட பெண்களுக்கான ஒரு விசேட பாதுகாப்பு முறையை அறிமுகப்படுத்துவதை முக்கிய நோக்காகக் கொண்டு, 13 நவம்பர் 2015 அன்று கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி பிரதேச செயலகத்தில் ஒரு தேசிய நிலையத்தை நிறுவியது. இந்த நிலையம் அத்தகைய பெண்களில் தங்கியிருப்பவர்களை ஆதரிப்பதற்கும் மேலும் முயல்கிறது. இந்த நிலையத்தில் உள்ள இடைவெளிகளை நிவர்த்தி செய்வதற்கும் அதே நேரத்தில் பாதுகாப்பை வழங்குவதற்கும் அதனை அணுகும் பெண்களின் நலனை வசதிப்படுத்துவதற்கும் இயலளவைக் கொண்ட ஒரு நிறுவனமாக அதை மேம்படுத்தவும் அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது.

நிலைமாறுகால நீதிச் செயற்பாட்டின் ஒரு பகுதியாக அமைக்கப்பட்ட பொறிமுறைகளும் முன்னோடியாக பால்நிலைக்குப் பதிலளிக்கக்கூடியவையாகும். உதாரணமாக, இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் கொள்கை மற்றும் வழிகாட்டுதல்கள் (2021) மோதலால் பாதிக்கப்பட்ட பெண்களின் தேவைகள் மற்றும் பாதிப்புகள் தொடர்பில் குறிப்பான குறிப்பை வழங்குவதுடன், இழப்பீடுகளை வழங்குவதில் அத்தகைய பெண்களுக்கு முன்னுரிமை அளிப்பதற்கு பரிந்துரைக்கிறது.

பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளை ஒழிப்பதற்கும், அரச நிறுவனங்களைப் பால்நிலை உணர்திறன் மிக்கதாகவும் அணுகக்கூடியதாகவும் மாற்றுவதற்கான ஒரு படியாக, 2015ஆம் ஆண்டில் நாடு முழுவதும் உள்ள அனைத்துப் பொலிஸ் நிலையங்களிலும் இலங்கை காவல்துறையின் சிறுவர் மற்றும் மகளிர் பணியகத்தை அரசாங்கம் நிறுவியது[8]. இது பாடசாலைகளிடையேயும் அரச நிறுவனங்களிலும் சமூகத்தின் அனைத்து மட்டங்களிலும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளை வெளிப்படுத்தல், தடுத்தல் மற்றும் அகற்றுதலை நோக்காகக் கொண்டு விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணியையும் மேற்கொள்கின்றது. இது பிரதானமாக பயிற்சிபெற்ற பெண் பொலிஸ் உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்படுகின்றது[9]. இது பெண்கள் பொலிஸ் நிலையங்களை அதிகரித்த இலகுத்தன்மையுடனும் நம்பிக்கையுடனும் அணுகச் செய்துள்ளது. மேலும், GoSL பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை சம்பவங்களைக் கையாளும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்குப் பால்நிலை உணர்திறன் குறித்த பயிற்சிகளை வழங்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இத்தகைய பயிற்சியின் ஒருங்கிணைந்த அங்கமாகத் தற்போது பால்நிலையை மையமாகக் கொண்டு வீட்டு வன்முறை தடுப்புச் சட்டத்தில் ஒரு பயிற்சித் தொகுதி தயாரிக்கப்பட்டு வருகிறது. இது பொலிஸ் உத்தியோகத்தர்களின் பங்கைத் தெளிவுபடுத்தவும், வீட்டு வன்முறைச் சம்பவங்களைக் கையாள்வதற்கான வழிகாட்டியாகவும் செயற்பட முற்படுகிறது[10].

சர்ச்சைகளைத் தீர்க்கும் பொறிமுறைகள் உட்பட பொது மற்றும் தேசிய வாழ்வில் பெண்களின் பங்களிப்பை அதிகரிக்க இலங்கை அரசாங்கம் மேலும் நடவடிக்கை எடுத்துள்ளது. இது தொடர்பான இலங்கை அரசாங்கத்தின் மைல்கல் நடவடிக்கைகளில் ஒன்று, 2016 மற்றும் 2017ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் (திருத்தம்) சட்டத்தை உள்ளூராட்சி மட்டத்தில் பெண்களின்

7 பால்நிலையை பிரதானப்படுத்தும் திட்டங்களை அமைச்சரவை மட்டத்தில் மேற்கொள்தல்: கிடைக்கின்றது: https://tbinternet.ohchr.org/Treaties/CEDAW/Shared%20Documents/LKA/INT_CEDAW_RLI_LKA_26729_E.pdf இறுதியாக அணுகப்பட்டது 19 பெப்பிரவரி 2021.

8 பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் 2015ம் ஆண்டுக்கான செயற்திறன் அறிக்கை. கிடைக்கின்றது: https://www.parliament.lk/uploads/documents/paperspresented/performance-report-ministry-of-women-child-affairs-2015.pdf இறுதியாக அணுகப்பட்டது 19 பெப்பிரவரி 2021.

9 பொலிஸ் இணையத்தளத்தை பார்வையிடவும். https://www.police.lk/index.php/police-history இறுதியாக அணுகப்பட்டது 19 பெப்பிரவரி 2021.

10 சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சின் 2014ம் ஆண்டுக்கான செயற்திறன் அறிக்கை. கிடைக்கின்றது: http://www.childwomenmin.gov.lk/institutes/national-committee-women/programs இறுதியாக அணுகப்பட்டது 19 பெப்பிரவரி 2021.

பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்காக, பெண்களின் பிரதிநிதித்துவத்தை 25% வரை அதிகரிக்கும் கொள்கை குறிக்கோளுக்கு இணங்க இயற்றியமையாகும். அரசியலில் ஈடுபடுவதற்கான பெண்களின் திறனை அதிகரிப்பதற்கு தேசிய பெண்கள் குழு மேலும் பணியாற்றியிருக்கின்றது. உதாரணமாக, பேராதனைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து தகுதியான பெண் வேட்பாளர்களுக்காக 2016ஆம் ஆண்டில், சிங்கள மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் ஒரு சான்றிதழ் பாடநெறி ஆரம்பிக்கப்பட்டது.[11]

இலங்கை அரசாங்கம் பெண் மத்தியஸ்தர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான கொள்கைகளையும் செயற்பாடுகளையும்கூட அமுலாக்கியுள்ளது. 2011ஆம் ஆண்டில் மத்தியஸ்த சபைகளில் அரசாங்கம் மதிப்பீடு செய்தபோது பெண் மத்தியஸ்தர்களின் எண்ணிக்கை 14% ஆகும்[12]. இது 2016ஆம் ஆண்டளவில் 20% ஆக அதிகரித்திருப்பது மத்தியஸ்த பொறிமுறைகளில் பெண்களின் ஈடுபாடு படிப்படியாக அதிகரித்திருப்பதைக் காட்டுகின்றது. [13]

இவை இலங்கைக்குள் பெண்கள், சமாதானம் மற்றும் பாதுகாப்பு நிகழ்ச்சிநிரலை முன்னேற்றுவதற்கு இலங்கை அரசாங்கம் உறுதிசெய்த சில பிரதானமான நடவடிக்கைகளாகும். WPS தொடர்பான NAP மூலமாகவும், அதன் அமுலாக்கம் மூலமாகவும், இலங்கைப் பெண்களின் வாழ்க்கையை முன்னேற்றுவதற்கும், மோதல் தீர்வுக்குப் பங்களிப்பதற்கும், நிலையான சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்குமான அபிலாசைகளுடன் அத்தகைய நடவடிக்கைகளை மேலும் வலுப்படுத்துவதற்கும் இலங்கை அரசாங்கம் விரும்புகிறது.

## தற்போதைய நிலைமை மற்றும் எஞ்சியிருக்கின்ற பிரச்சினைகள்

ஆயுத மோதலின் முடிவிலிருந்து, இலங்கையில் நிலையான சமாதானம் மற்றும் நல்லிணக்கத்தை மேம்படுத்துவதற்காக அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டது. குறிப்பாக, தற்போதைய அரசு, தேசிய பாதுகாப்பு பேணப்படும் வகையில் அனைத்துக் குடிமக்களுக்கும் சமாதானமான இலங்கையை உருவாக்க உறுதிபூண்டுள்ளது. இதன் காரணமாக முகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு இலங்கையில் போருக்குப் பின்னரான சூழலில் பால்நிலைப்படுத்தப்பட்ட சவால்களை நிவர்த்திசெய்வதற்கு WPS தொடர்பான NAP ஐ விருத்தி செய்யும் பணியை மேற்கொண்டுள்ளது. சமூகங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை உறுதிப்படுத்துவதற்கும், சமாதானத்தை ஊக்குவிப்பதற்கும், கடந்தகாலப் பாதிப்புகளைத் தீர்ப்பதற்கும் இது அவசியமானது. இலங்கையின் அண்மைய கடந்தகாலம் இன-மத சமூகங்களின் கடும்போக்குவாதக் கூறுகளுக்கிடையிலும் மற்றும் சமூகத்தின் பல்வேறு பிரிவுகளுக்கிடையில் நீடித்த பகைமையிலும் எழுகின்ற வன்முறைக்கான சான்றுகளைக் கொண்டிருக்கிறது. 300 க்கும் மேற்பட்ட உயிர்களைப் பலிகொண்ட மற்றும் பலருக்கு இயலாமைகளை விளைவாக்கிய 'உயிர்த்த ஞாயிறு' பயங்கரவாதத் தாக்குதல்களுக்குப் பின்னர் இந்த யதார்த்தங்கள் குறிப்பாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்த பின்னணியில்தான், 'சுபிட்சத்தின் நோக்கு' எனும் இலங்கை அரசாங்கத்தின் தேசிய கொள்கைக் கட்டமைப்பில், முகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு ஆனது WPS தொடர்பான NAP ஐ

11 சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சின் 2014ம் ஆண்டுக்கான செயற்திறன் அறிக்கை. கிடைக்கின்றது: http://www.childwomenmin.gov.lk/institutes/national-committee-women/programs இறுதியாக புதுப்பிக்கப்பட்டது 19 பெப்பிரவரி 2021.

12 சைரீன் சிறிவர்தன, "இலங்கையில் சமூக மத்தியஸ்த சபைகள் நிகழ்ச்சித் திட்டத்தின் மதிப்பீடு", (நீதி அமைச்சு 2011) கிடைக்கிறது: http://mediation.gov.lk/static/media/publications/en/Evaluation_Community_Mediation.pdf கடைசியாக அணுகப்பட்டது பிப்ரவரி 2021.

13 ரமணி ஜெயசுந்தெரே மற்றும் ரிமாஸ் ரஹ்மான் 'பெண் மத்தியஸ்தர்களைப் புரிந்துகொள்தல்- இலங்கையில் உள்ள சமூக மத்தியஸ்த சபைகளில் உள்ள பெண்கள் பற்றிய ஆழமான ஆய்வு- 2016' ( ஆசியா பவுண்டேசன், 2016). இங்கு கிடைக்கிறது: http://mediation.gov.lk/static/media/publications/en/Understanding_Women_Mediators.pdf கடைசியாக அணுகப்பட்டது 2021 பிப்ரவரி 20 அன்று.

உருவாக்கியுள்ளது.

## செழிப்பு மற்றும் சுபிட்சத்தின் நோக்கு

'செழிப்பு மற்றும் சுபிட்சத்தின் நோக்கு' என்ற தலைப்பில் இந்தத் தேசிய கொள்கைக் கட்டமைப்பு (NPF) ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்சவின் வழிகாட்டுதலின்கீழ் இலங்கை அரசாங்கத்தால் தயாரிக்கப்பட்ட ஒரு குறிப்பிடத்தக்க மற்றும் விரிவான கொள்கைக் கட்டமைப்பாகும். NPF இன் பிரதான நோக்கம், 'நம் மக்களுக்கு கிடைக்கக்கூடிய ஜனநாயக வழிமுறைகளைச் சமரசம் செய்யாமல் தேசிய பாதுகாப்பைப் பேண' புதிய வழிமுறைகளைப் பின்பற்றுவதாகும். NPF நான்கு விளைவுகளை அடைய முனைகின்றது:

(1) உற்பத்தித்திறனான குடிமகன்
(2) ஒரு மகிழ்ச்சியான குடும்பம்
(3) ஒழுக்கமான மற்றும் நியாயமான சமூகம்
(4) ஒரு வளமான நாடு

இலங்கை அரசாங்கம் பத்து முக்கிய கொள்கைகள்மூலம் இந்த நான்கு விளைவுகளையும் அடைய எதிர்பார்க்கிறது. அவையாவன:

(1) தேசிய பாதுகாப்புக்கு முன்னுரிமை
(2) நட்புறவைச் சீர்குலைக்காத வெளியுறவுக் கொள்கை
(3) ஊழலற்ற நிர்வாகம்
(4) மக்களின் விருப்பங்களை நிறைவேற்றும் புதிய அரசியலமைப்பு
(5) உற்பத்தித்திறனான குடிமகன் மற்றும் ஒரு துடிப்பான மனித வளம்
(6) மக்கள் மைய பொருளாதார வளர்ச்சி
(7) தொழில்நுட்ப அடிப்படையிலான சமூகம்
(8) பௌதிக வளங்களின் விருத்தி
(9) நிலையான சுற்றுச்சூழல் முகாமைத்துவம்
(10) ஒழுக்கமான, சட்டத்தை மதிக்கும் மற்றும் விழுமியங்களை

அடிப்படையாகக் கொண்ட சமூகம்

பட்டியலிடப்பட்ட கொள்கைகளில், NAP குறிப்பாக (1), (3), (5), (6), (8), (9) மற்றும் (10) ஆகியவற்றுடன் இணைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள பிரதான கொள்கைகள்கூட NAP இல் பிரதிபலிக்கப்படுகின்றன அல்லது கொள்கையின் பெரிய கட்டமைப்போடு சம்பந்தப்படுவதால் இணைக்கப்பட்டுள்ளன. NAP முதன்மையாக, இலங்கை பெண்களுக்கு இழப்பீடு மற்றும் பிற தேவையான ஆதரவுகளை வழங்குவதன் ஊடாக ஆயுத மோதல்கள் அல்லது பிற மோதல்களுடன் தொடர்புடைய எஞ்சியுள்ள சில பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதை இலக்காகக் கொண்டுள்ளது. இது பெண்களின் வாழ்க்கையை மேம்படுத்தவும், பால்நிலைச் சமத்துவத்தை ஊக்குவிக்கவும், இலங்கையில் நீடித்த சமாதானம் மற்றும் நல்லிணக்கத்திற்குப் பங்களிக்கவும் விரும்புகிறது.

# தேசிய செயற்திட்டத்தின் குறிக்கோள்கள்

UNSCR 1325 இல் முன்வைக்கப்பட்ட WPS தொடர்பான NAP, விளைவுகள் தொடர்பான கட்டமைப்பில் விளக்கமாகக் குறிப்பிடப்பட்ட நடவடிக்கைகளைச் செயற்படுத்துவதன்மூலம் கீழே கொடுக்கப்பட்டுள்ள நோக்கங்களை அடைவதற்குப் பங்களிக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது:

- சமாதானம் மற்றும் பாதுகாப்பைப் பேணுதல் உட்பட தேசிய வாழ்க்கையின் அனைத்து அம்சங்களிலும் பெண்களின் அர்த்தமுள்ள பங்களிப்பை அதிகரித்தல்.
- மோதலின்போதும் பின்னரும் அத்துடன் அனர்த்தம் மற்றும் பெருந்தொற்று போன்ற அவசரகால சூழ்நிலைகளிலும் பெண்களின் தேவைகள், முன்னுரிமைகள் மற்றும் உரிமைகளை நிவர்த்தி செய்வதன்மூலம் அவர்களின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வைப் பாதுகாத்தல்.
- சமூக ஒத்திசைவை ஊக்குவிப்பதற்கும் வன்முறை, பயங்கரவாதம் மற்றும் குற்றங்களைத் தடுப்பதற்கும் சமூகங்களிலும், அரச நிறுவனங்களிலும் இயலளவுகளைக் கட்டியெழுப்பி வலுப்படுத்துதல்.
- மோதல் சூழல்களால் பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளுக்கு நிவாரணம் வழங்கி மீள்வதற்கு உதவுதல்.
- அனைத்து மட்டங்களிலும் உள்ளடங்கலான, பதிலளிக்கக்கூடிய, பங்கேற்புடன் மற்றும் பிரதிநிதித்துவத்துடன் தீர்மானம் மேற்கொள்ளலை உறுதி செய்வதன்மூலம் பாலின சமத்துவம் மற்றும் நிலையான அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடைவதற்குப் பங்களிப்புச் செய்தல்.

## தற்போதுள்ள தேசிய செயற்திட்டங்கள் மற்றும் அவற்றிலுள்ள இடைவெளிகள்

இலங்கைக்கு சமகாலத்தில் பொருந்தக்கூடிய பல தேசிய செயற்திட்டங்கள் (NAPs) மற்றும் கொள்கைகள் உள்ளன. எவ்வாறாயினும், அவை ஏனைய கருப்பொருள் விடயங்களில் கவனஞ்செலுத்துவதுடன் WPS தொடர்பில் குறிப்பாக கவனம் செலுத்துவதில்லை. அதுபோல், இந்த NAP ஆல் முன்மொழியப்பட்ட மூலோபாய நடவடிக்கைகளுக்காக அவை வழங்கப்படவில்லை. தற்போதுள்ள கொள்கைகள் மற்றும் செயற்திட்டங்கள் வரையறுக்கப்பட்ட சூழ்நிலைகளில் WPS பிரச்சினைகளைக் கருதும்போது அதன்நிலை மேற்பரப்பு மட்டத்தில் உள்ளதுடன் ஆழமாக வேரூன்றிய WPS பிரச்சினைகளைத் தீர்க்கத் தவறிவிட்டது. மேலும், WPS இல் நேரடித் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய சில கொள்கைகள் மற்றும் செயற்திட்டங்கள் காலாவதியாகிவிட்டன அல்லது வரைவு நிலையிலேயே உள்ளன அல்லது ஒருபோதும் அமுலாக்கப்படவில்லை.

WPS குறித்த NAP இன் அறிமுகத்தை நியாயப்படுத்தும்பொருட்டு, சமகாலத்தில் பொருந்தக்கூடிய NAPகள் மற்றும் கொள்கைகளின் இடைவெளிகள் கீழே சுருக்கமாக ஆராயப்படுகின்றன:

1. **இலங்கையில் பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளை நிவர்த்தி செய்வதற்கான கொள்கைக் கட்டமைப்பு மற்றும் தேசிய செயற்திட்டம் 2016 - 2020**

   இந்த NAP நெறிமுறை கட்டமைப்பிற்கு ஏற்ப வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் சாதாரண சூழ்நிலைகளில் SGBV ஐ தடுப்பதற்கேற்ற வகையில் விரிவானது என்றாலும், இது

மோதலுடன் தொடர்புடைய பாலியல் வன்முறைகளை விசேடமாகக் கையாளவில்லை. மோதலுடன் தொடர்புடைய பாலியல் வன்முறை குறித்த செயலாளர் நாயகத்தின் அறிக்கையின்படி இது ஒரு தனி குற்றமாகக் கருதப்படவேண்டுமென்பதுடன் விரிவான முறையில் விளக்கப்படவேண்டும் என்பதும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

**2. மனித உரிமைகள் பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டுக்கான தேசிய செயற்திட்டம் 2017 - 2021**

இந்த NAP, நன்கு வடிவமைக்கப்பட்ட விரிவானதொரு NAP என்றாலும், UNSCR 1325 இன் கீழ் உருவகப்படுத்தப்பட்டுள்ளபடி WPS நிகழ்ச்சிநிரலின் முழு அளவையும் உள்ளடக்கியிருக்கவில்லை. NAP மோதல் சூழ்நிலைகளை அனுபவித்த பெண்களால் எதிர்கொள்ளப்பட்ட குறிப்பிட்ட சவால்களை அடையாளப்படுத்தவில்லை. உதாரணமாக, முன்னர் போரால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிலவும் சிறுவயது மற்றும் பராயமடையாத திருமணங்கள், FHHகள் மற்றும் இராணுவக் கணவனை இழந்த பெண்கள் பல்வேறு சேவைகளை அணுக முயற்சிக்கும்போது அனுபவிப்பதாக முறைப்பாடளிக்கப்படும் பாலியல் இலஞ்ச வடிவமான CRSV, கணவர் இயலாமலாக்கப்பட்ட FHHகள் எதிர்கொள்ளும் சிரமங்கள் மற்றும் பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகள் அனுபவிக்கும் மோதலுடன் தொடர்புடைய இயலாமைகள் போன்ற பிரச்சினைகளை இது உள்ளடக்கவில்லை.

தேசிய செயற்திட்டமானது தீர்மானம் மேற்கொள்ளலில் பெண்கள் பங்கேற்பதன் முக்கியத்துவத்தைக் குறிப்பிடுகின்றபோதிலும், அதனுடைய விரிவும் நோக்கமும் பெண்களின் பங்கேற்பை முக்கியத்துவமானதாகவும் அவசியமானதாகவும் குறிப்பிடுகின்ற UNSCR 1325 இன் WPS நிகழ்ச்சி நிரலின்கீழ் கருதப்படுவதைவிடக் குறைவானதாகும். இந்த நுணுக்கங்கள் தற்போதைய WPS குறித்த NAP இல் இணைக்கப்பட்டுள்ளது.

மேலதிகமாக, மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்குமான தேசிய செயற்திட்டத்தின் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுக் கட்டமைப்பில் பலவீனங்கள் காணப்படுகின்றன. இதன் காரணமாக, இதனுடைய பல செயற்பாடுகள் அடையப்படாமலோ அல்லது குறைவாக அடையப்பட்டோ இருக்கின்றன. இந்த NAP வெளியீடுகள், விளைவுகள் மற்றும் அடையும் இலக்குகளை அளவிடுகின்ற வலுவான கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுக் கட்டமைப்பின் ஊடாக இதனைத் திருத்துவதற்கு முயல்கின்றது. இத்தகைய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டைத் தொடர்ந்து, இந்த NAP இனை அமுலாக்குவதில் கண்டறியப்பட்ட யதார்த்தங்களின் வெளிச்சத்தில் வலுப்படுத்தப்படவேண்டிய WPS குறித்த தற்போதைய NAP தொடரப்படலாம் என்று நம்பப்படுகிறது.

**3. பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் குறித்த தேசிய செயற்திட்டம்**

இந்தச் செயற்திட்டம், நேர்மறையான கூறுகளைக் கொண்டிருந்தாலும், பின்பற்றப்படவோ அமுல்படுத்தப்படவோ இல்லை. அது தற்போதுள்ள பிரச்சினைகளைப் பிரதிபலிப்பதற்கு அதனைத் திருத்திய பின்னர் FHH குறித்த NAP ஐ அமுல்படுத்துவதற்கு WPS குறித்த இந்த NAP இனுள் பரிந்துரைக்கப்படுகின்றது.

**4. இலங்கையில் சிறுவர்களுக்கான தேசிய செயற்திட்டம் 2016 - 2020**

இந்த NAPயும் வரைவு நிலையிலேயே உள்ளது. சிறுவர்கள் தொடர்பாக அமுலாக்கப்பட்ட NAP இல்லாமையினால் உருவாக்கப்பட்ட இடைவெளியை நிரப்ப WPS கண்ணோட்டத்திலிருந்து பெண் பிள்ளைகளின் பிரச்சினைகளை WPS குறித்த NAP வெளிப்படுத்துகின்றது.

## 5. திறந்த அரசாங்க கூட்டாண்மை: இலங்கையின் 2வது தேசிய செயற்திட்டம் 2019 - 2021

திறந்த அரசாங்க கூட்டாண்மை குறித்த NAP விரிவானதுடன் பின்வரும் நான்கு அம்சங்களைச் சுற்றி கட்டியெழுப்பப்பட்டுள்ளது:

(1) வெளிப்படைத்தன்மை
(2) பொறுப்புக்கூறல்
(3) பொதுமக்கள் பங்கேற்பு
(4) திறந்த தன்மை மற்றும் பொறுப்புக்கூறலுக்கான தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம்

OGP இன்கீழ் உள்ளடக்கப்பட்டிருக்கின்ற WPS உடன் தொடர்புடைய நடவடிக்கைகள் WPS குறித்த இந்த NAP இல் மீண்டும் உருவாக்கப்படவில்லை அல்லது மீண்டும் செயற்படுத்தப்படவில்லை. எவ்வாறாயினும், OGP குறித்த NAP இன் நோக்கம் மற்றும் எல்லை தனித்துவமானதென்பதுடன் WPS நிகழ்ச்சிநிரலை உள்ளடக்குவதற்கு அது விரிவாக்கப்படவில்லை என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

OGP குறித்த NAP என்பது ஓர் அரசு - சிவில் சமூக ஒருங்கிணைப்பு மாதிரியை உருவாக்குவதாகும். WPS குறித்த NAP ஐச் செயற்படுத்த அரசாங்கத்திற்கு உதவுவதில் நன்மைபயக்கும் என்று தீரமானிக்கப்பட்ட அதே முறைமை, தற்போதைய WPS குறித்த NAP இல் பிரதிபலிக்கப்பட்டுள்ளது. WPS தொடர்பான NAP ஐ நடைமுறைப்படுத்துவதற்கான முதன்மைப் பொறுப்பை இலங்கை அரசாங்கம் ஏற்கும் அதேவேளையில், NAP ஆல் அடையாளப்படுத்தப்பட்ட பிரச்சினைகள் குறித்துப் பணியாற்றுவதில் அதிகளவில் அனுபவத்தைக் கொண்டிருக்கின்ற சிவில் சமூக அமைப்புகளின் உறுப்பினர்களிடமிருந்து தேவையானவிடத்து நிபுணத்துவ ஆலோசனை, உதவி மற்றும் ஆதரவு பெறப்படும்.

OGP தொடர்பான NAP இன் செயற்பாடுகளைச் செயற்படுத்தும் பொறுப்பிற்கு தனிப்பட்ட உத்தியோகத்தர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், WPS தொடர்பான NAP இன் வரைவு கட்டங்களின்போது, தனிநபர்களின் விலகல் NAP இனுடைய அமுலாக்கத்தைப் பாதிக்கக்கூடாது என்பதற்காக, பொறுப்பானது தனிநபரின்மீது செலுத்தப்படுவதற்கு மாறாக நிறுவனமயமாகப்பட்டு குறிப்பிட்ட பதவிநிலைக்கு ஒதுக்கப்படவேண்டுமென அங்கீகரிக்கப்பட்டது. இது WPS தொடர்பான NAP கட்டமைப்பில் பிரதிபலிக்கப்பட்டிருக்கின்றது.

## 6. இலங்கையில் இலஞ்சம் மற்றும் ஊழலை எதிர்த்துப் போராடுவதற்கான தேசிய செயற்திட்டம் 2019 - 2023

இலங்கையில் இலஞ்சம் மற்றும் ஊழலை எதிர்த்துப் போராடுவதில் இந்த NAP இலக்காக்கப்பட்டிருக்கின்றது, ஆனால் இலஞ்சத்தின் சாத்தியமான பொறிமுறையாகப் பாலியல் வன்முறையை அது இன்னமும் உள்ளடக்கியிருக்கவில்லை. 2019இல் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு வெளியிட்ட கையேடு, சட்டமன்றத் திருத்தங்களால் அமுல்படுத்தப்படவேண்டிய சில கொள்கைகளைப் பரிந்துரைக்கின்றது. இலஞ்ச ஒழிப்புச் சட்டத்தினுள் 'பாலியல் இலஞ்சம்' 'வெகுமதியின்' ஒரு வடிவமாகச் சேர்க்கப்பட வேண்டும் என்ற முன்மொழிவை இது உள்ளடக்கியது. இருப்பினும், இதனைச் செயற்படுத்துவதற்கான எதுவிதமான சட்டத் திருத்தமும் நிறைவேற்றப்படாததுடன், இந்த விடயத்தில் WPS தொடர்பான இந்த NAP ஒரு நடவடிக்கையை முன்மொழிகின்றது.

## தேசிய செயற்திட்டத்தை உருவாக்கின்ற செயன்முறை மற்றும் கலந்தாலோசனைகளில் கண்டறியப்பட்ட விடயங்கள்

ஆரம்பத்தில், முகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு WPS தொடர்பான NAP இன் வினைத்திறனான அமுலாக்கத்தை உறுதிப்படுத்துவதற்கு, தொடர்புடைய அனைத்து அமைச்சுக்களின் ஈடுபாடும் ஆதரவும் மற்றும் அங்குள்ள உத்தியோகத்தர்களுக்கு உணர்வூட்டுவதும் அவசியமானது என்பதைப் புரிந்துகொண்டுள்ளது. இவ்வாறு, 16 செப்ரெம்பர் 2019 அன்று, பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் (அன்று அப்பெயரில் காணப்பட்டது) செயலாளர் திருமதி தர்ஷனா சேனாநாயக்கவுடன் இணைந்து ஆலோசகர்கள் குழு, பிரதான அமைச்சுக்களின் பிரதிநிதிகளைச் சந்தித்தனர்.

இந்த நிகழ்ச்சித்திட்டத்தில், WPS குறித்த NAPஐ உருவாக்குவது தொடர்பான பின்னணித் தகவல்கள், NAP இன் எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் அத்துடன் NAPஐ உருவாக்குவதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முறைமை ஆகியன தொடர்பில் அமைச்சுக்களின் பிரதிநிதிகளுக்கு விளக்கப்பட்டது. இது நன்றாக ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன் முகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு இனால் WPS குறித்த NAP இற்காக தொடர்புடைய மற்றைய அமைச்சுக்களின் ஆர்வத்தையும் ஆதரவையும் பெற முடிந்தது.

ஆரம்பத்திலிருந்தே, WPS குறித்த NAP இன் உரிமையானது முகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு க்கு அப்பால் ஏனைய அமைச்சுக்கள், அரச நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் இலங்கையின் பொதுமக்களுக்கும் நீட்டிக்கப்பட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. NAP ஆனது இலங்கைப் பெண்களின் அடிப்படை யதார்த்தங்களைப் பிரதிபலிக்கும் என்றும், குறிப்பாக மோதலால் பாதிக்கப்பட்டவர்கள்மீது கவனம் செலுத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டது. இந்த முடிவை அடைய, இலங்கையின் ஒன்பது (09) மாகாணங்களிலும் மாகாண கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டன. இந்த மாகாண கலந்தாலோசனைகள் இலங்கையின் இருபத்தைந்து (25) நிர்வாக மாவட்டங்களைச் சேர்ந்த பங்குதாரர்களுடன் நடாத்தப்பட்டன[14].

இந்தப் பங்குதாரர்களில் பின்வருவோர் உள்ளடங்குகின்றனர்:

1. கிராம, பிரதேச, மாவட்ட மற்றும் மாகாண மட்டங்களில் பணிபுரியும் அரச உத்தியோகத்தர்கள்
2. சமுதாய மட்ட அமைப்புகளின் CSOக்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் (NGOக்கள்), சர்வதேச அரசு சாரா நிறுவனங்கள் (INGOக்கள்), சமூக அடிப்படையிலான அமைப்புகளின் (CBO க்கள்) பிரதிநிதிகள்
3. மோதலில் பாதிக்கப்பட்டவர்கள், இராணுவக் கணவனை இழந்த மனைவிகள், பெண் தலைமைத்துவக் குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் (FHH), இயலாமைகளை உடைய பெண்கள், பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறைகளில் பாதிக்கப்பட்டவர்கள், விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகள், பெருந்தோட்டத் துறையில் அல்லது மீன்பிடித்துறையில்

14 NAP ஐ உருவாக்குவதற்காக மேற்கொள்ளப்பட்ட கலந்தாலோசனைகளின் அட்டவணைக்கு இணைப்பு 1 ஐப் பார்க்கவும்.

பணிபுரியும் பெண்கள், உடல் இயலாமைகளைக் கொண்டுள்ள வாழ்க்கைத்துணை மற்றும் / அல்லது பிள்ளைகளைப் பராமரிக்கும் பெண்கள்.

மாகாணக் கலந்தாலோசனைக் கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்ட முறைமை GoSL - CSO க்கும் இடையில் ஓர் ஒருங்கிணைப்பைச் சாதகமாக்குவதை இலக்காகக் கொண்டிருந்தது. வேறுபட்டதாகவும் தெளிவாகவும் தரவுகளைச் சேகரிப்பதை உறுதிப்படுத்த, அரச உத்தியோகத்தர்கள் மற்றும் CSO க்களின் பிரதிநிதிகளுடன் தனித்தனியாகக் கலந்தாலோசனைகள் நடாத்தப்பட்டன. NAP இன் கூட்டு அமுலாக்கத்தை நோக்கி இலங்கை அரசாங்கத்துக்கும் CSO க்களுக்குமிடையில் ஒருமித்த கருத்தைக் கட்டியெழுப்புவதற்கு, ஒவ்வொரு குழுவாலும் எழுப்பப்பட்ட பிரச்சினைகள் மற்றைய குழுவினருக்கு கலந்தாலோசனைகளின்போது பகிர்ந்து கொள்ளப்பட்டது. WPS குறித்த NAPஇல் அடையாளம் காணப்பட்ட பல பிரச்சினைகள் மற்றும் அவற்றை நிவர்த்தி செய்ய முன்மொழியப்பட்ட நடவடிக்கைகள் என்பன மாகாண கலந்தாலோசனைகளின்போது பெறப்பட்ட மதிப்புமிக்க கருத்துப் பகிர்விலிருந்து பெறப்பட்டது. இந்தச் செயன்முறைகளின்போது, WPSஇன் தேர்ந்தெடுக்கப்பட்ட அம்சங்களைக் கையாள்வதில் அனுபவமுள்ள குறிப்பிட்ட CSOகள், NAPஇன் ஒத்திருக்கின்ற பகுதிகளைச் செயல்படுத்துவதில் அரசுடன் இணைந்து பணியாற்றுவதற்கான அவர்களின் விருப்பம் குறித்து மேலும் ஆலோசிக்கப்பட்டதுடன், அதன் பதில் பெரும்பாலும் சாதகமாக இருந்தது.

கலந்தாலோசனைகளில், அரச நிறுவனங்களுக்கிடையேயான வினைத்திறனான ஒத்துழைப்பு மற்றும் நிறுவனங்களுக்கிடையேயான கூட்டை மேம்படுத்துதல் ஆகியவை பொதுவான குறிக்கோள்களை அடைவதற்கு அரச நிறுவனங்களுக்கிடையில் பயனுள்ள பங்களிப்புக்கு வழிவகுக்கும் என்பது மட்டுமல்லாமல், இது பணிகள் மீண்டும் மேற்கொள்ளப்படுவதைக் குறைப்பதற்கும் வழிவகுக்கும் எனக் குறிப்பிடப்பட்டது. இதன்மூலம் பல்வேறு நடவடிக்கைகளைச் செயற்படுத்துவதில் குறைந்த செலவுக்கு வழிவகுக்கிறது என்று கூறப்பட்டது. WPS குறித்த NAPஐ உருவாக்குவதில் பலதரப்பட்ட மக்களின் கருத்துக்களைக் கருத்தில் கொள்ள GoSL மேற்கொண்ட முயற்சிகளைப் பங்கேற்பாளர்கள் பாராட்டினர். இந்தக் கலந்தாலோசனைகள் WPS நிகழ்ச்சிநிரலுடன் தொடர்பான தற்போதுள்ள இடைவெளிகளை நிவர்த்தி செய்ய வேண்டும் என்பதுடன் இவை இந்த NAPஇல் செயற்படுத்தக்கூடிய பணிகளாக மாற்றப்பட்டிருக்கின்றன.

NAP இன் ஒட்டுமொத்தக் கட்டமைப்பும் தேசிய கொள்கைக் கட்டமைப்பான செழிப்பு மற்றும் சுபிட்சத்தின் நோக்கிற்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. அவ்வாறு செய்வதன்மூலம், மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு அதன் செயற்பாடுகளை இலங்கை அரசாங்கத்தின் பெரிய கொள்கை கட்டமைப்போடு இணைக்க விரும்புகிறது.

## நுட்பமான கவனம் செலுத்தல் மற்றும் கருப்பொருள் முன்னுரிமைகள்

இலங்கை கடந்த காலங்களில் நீடித்த ஆயுத மோதல்கள், கிளர்ச்சிகள், கலவரங்கள், இன-மத வன்முறை மற்றும் பயங்கரவாதத் தாக்குதல்கள் ஆகியவற்றை அனுபவித்திருக்கின்றது. எனவே தேசிய பாதுகாப்பு, பிராந்திய ஒருமைப்பாடு, இறையாண்மை மற்றும் தனிநபர் சுயாட்சி தொடர்பான கருப்பொருள்கள் இலங்கை விடயங்களில் பிரதானமாக இடம்பெறத் தொடங்கியுள்ளன. 2019இல் இடம்பெற்ற 'உயிர்த்த ஞாயிறு' தாக்குதல்களுக்குப் பின்னர் இது அதிகரித்த அளவில் நிகழ்கிறது. NAP யின் நுட்பமான கவனம் இந்த விடயங்களுடன் தொடர்புபட்ட பெண்களின் பிரச்சினைகளை இலங்கையின் சர்வதேசக் கடமைகள், உள்நாட்டுச் சட்டங்கள் மற்றும் 'சுபிட்சத்தின் நோக்கு' எனப் பெயரிடப்பட்ட தேசிய கொள்கைக் கட்டமைப்பு என்பவற்றிற்கமைவாக ஏற்றுக்கொள்வதையும், தீர்ப்பதையும் மையமாகக் கொண்டுள்ளது.

பெண்களின் பங்கேற்பு மற்றும் வலுவூட்டுதல் என்பன தேசிய பாதுகாப்பு அச்சுறுத்தல்களால் பெண்கள் வன்முறை மற்றும் துன்புறுத்தலுக்கு ஆளாவதால் ஏற்படும் உறுதியற்ற தன்மையைத் தடுப்பதற்கான ஒரு பிரதானமான படியாகும். சமீபத்திய 'உயிர்த்த ஞாயிறு' தாக்குதல்களைத் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்ற பால்நிலை உணர்வற்ற பாதுகாப்புச் சோதனைகள் பாரபட்சமான மற்றும் ஏற்றத்தாழ்வான தாக்கத்தைப் பெண்களுக்கு ஏற்படுத்தியிருக்கலாம் என்று மாகாண

கலந்தாலோசனைகளின்போது சில பங்குதாரர்கள் வாதிட்டனர். சமாதானம் மற்றும் பாதுகாப்பைப் பேணுவதிலும் கட்டியெழுப்புவதிலும் பெண்களின் வினைத்திறனான பங்கேற்பை வசதிப்படுத்துவதற்கான செயன்முறைகளின் பற்றாக்குறை மற்றொரு முக்கிய பிரச்சினையாகச் சுட்டிக்காட்டப்பட்டது. உள்ளூராட்சி அரசு, மாகாண மற்றும் தேசிய அளவிலான பெண்களின் ஈடுபாட்டில் உள்ள இடைவெளிகளைத் தவிர, அத்தகைய இடைவெளிகள் சமூகத்தின் கள மட்டங்களில் ஆழமாக வேரூன்றியுள்ளன என்பது தெளிவாகத் தெரிந்தது. WPS குறித்த NAPஐ உருவாக்குவதில் பால்நிலை ஒரு முக்கிய காரணியாக இருந்தாலும், இலங்கையில் WPS நிகழ்ச்சிநிரலைப் பாதிக்கின்ற பிற காரணிகளும் கருதப்பட்டன. வயது, சமூக-பொருளாதாரப் பின்னணி, இன / மத தொடர்புகள், பால்நிலை அடையாளம், பாலியல் நோக்குநிலை, புவியியல் இருப்பிடம், குடும்ப ஆதரவு அல்லது அதன் பற்றாக்குறை, கல்வி நிலை மற்றும் இயலாமை நிலை ஆகியவை அவற்றில் சிலவாகும்.

GoSL இணையாகவுள்ள மற்றைய NAPகள் மற்றும் கொள்கைகளுடைய இடைவெளிகளை அறிந்துகொண்டுள்ளதுடன், அவற்றை WPS குறித்த NAP மூலம் நிவர்த்தி செய்வதற்குத் தீர்மானித்துள்ளது. இந்த NAP இல் அடையாளம் காணப்பட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்குப் பொறுப்பான நிறுவனங்களை அடையாளம் காண்பது இதனுடைய முக்கியமான பகுதியாகும். புதிய ஆட்சேர்ப்பு அல்லது உத்தியோகத்தர்களின் அதிகமான சுமைகளைத் தடுப்பதற்குத் தொடர்புடைய உத்தியோகத்தர்களின் செயற்பாடுகளை ஏற்கனவே ஒழுங்குபடுத்தும் பணி ஆணைகள் மற்றும் பணி நிபந்தனைகளுக்கு அமைவாக இது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சமாதானம், நல்லிணக்கம் மற்றும் மோதல் தடுப்புப் பொறிமுறைகளில் பெண்களை உள்ளடக்காதது அல்லது அவர்களின் வினைத்திறனான பங்கேற்பு இல்லாதிருப்பது செயல்முறைகளின் நியாயத்தன்மையை இழக்க வழிவகுப்பதுடன் கட்டமைப்புகளையும் பலவீனப்படுத்துகிறது என்பதை இலங்கை அரசாங்கம் ஏற்றுக்கொள்கின்றது. எனவே, அரசின் சமாதானம் மற்றும் பாதுகாப்புக் கொள்கைகள் மற்றும் மூலோபாயங்களின் வினைத்திறனுக்குப் பெண்களின் பங்கேற்பு இன்றியமையாதது என்று இலங்கை அரசாங்கம் கருதுகிறது.

## பெண்கள், சமாதானம் மற்றும் பாதுகாப்பிற்கான அர்ப்பணிப்புக்களின் பொருத்தப்பாடு

UNSCR 1325 இன் முன்னுரை, 'மோதல்களின்போதும் அதற்குப் பின்னரும் பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளின் உரிமைகளைப் பாதுகாக்கும் முழுமையான சர்வதேச மனிதாபிமான மற்றும் மனித உரிமைச் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டிய அவசியம் உள்ளது' என்பதை மீண்டும் உறுதிப்படுத்துகிறது. அத்துடன், CEDAW இன் உறுப்புரை 2, மேலும் அரச தரப்பிடம் பின்வருவனவற்றைக் கோருகின்றன:

- ஆண்கள் மற்றும் பெண்கள் தொடர்பான சமத்துவக் கொள்கையை உருவாக்குங்கள்
- சமத்துவத்தின் நடைமுறையான உணர்தலை சட்டம் மற்றும் பிற பொருத்தமான வழிமுறைகள்மூலம் உறுதிப்படுத்தவும்.
- பெண்களுக்கு எதிரான அனைத்துப் பாகுபாடுகளையும் தடைசெய்யும் பொருத்தமான சட்ட மற்றும் பிற நடவடிக்கைகளைப் பின்பற்றவும்
- பெண்களுக்கு எதிரான பாகுபாட்டைக் கொண்டிருக்கும் சட்டங்கள், ஒழுங்குமுறைகள், பழக்கவழக்கங்கள் மற்றும் நடைமுறைகளை மாற்றியமைக்க அல்லது இரத்துச் செய்ய சட்டம் உட்பட அனைத்துப் பொருத்தமான நடவடிக்கைகளையும் எடுக்கவும்

UNSCR 1325 'பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளுக்கு ஆயுத மோதலின் தாக்கம் பற்றிய புரிதல் மற்றும் அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான சமாதான முன்னெடுப்புகளில் முழுப் பங்களிப்புடன் வினைத்திறனான நிறுவன ஏற்பாடுகள் ஆகியவை சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பைப் பராமரிப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் கணிசமாகப் பங்களிக்கக்கூடும்” என்பதையும் ஏற்றுக்கொள்கின்கிறது. மேலும், 'பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகள்மீது ஆயுத மோதலின் தாக்கம் குறித்த தரவுகளை ஒருங்கிணைக்க வேண்டிய அவசியம் உள்ளது' என்று தீர்மானம் கூறுகிறது. இந்தப் பரந்த நெறிமுறைக் கட்டமைப்பினுள்தான், WPS குறித்த NAPஐ உருவாக்க GoSL முயன்றுள்ளது. எவ்வாறாயினும், இலங்கை அனுபவித்த ஆயுத மோதல்கள் மற்றும் பிற

மோதல் சூழல்களுக்குள் WPS இன் நோக்கம் கட்டுப்படுத்தப்படாது என்றும், இயன்றவரை NAPக்குள் உள்ள WPS நிகழ்ச்சிநிரலைப் பரவலாகக் கருதுவதற்கும் பெண்களின் சமாதானம் மற்றும் பாதுகாப்பை அச்சுறுத்தும் பல பிரச்சினைகளை அறிந்துகொள்வதற்கும் அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் என்றும் கலந்தாலோசனைச் செயற்பாட்டின்போது தீர்மானிக்கப்பட்டது.

UNSCR 1325 இன் முன்னுரை, சமாதானத்தைக் கட்டியெழுப்புதல், மோதல் தடுப்பு மற்றும் மோதல் தீர்வு ஆகியவற்றில் பெண்களின் ஈடுபாட்டின் முக்கியத்துவத்தையும் எடுத்துக்காட்டுகிறது. தீர்மானம் மீண்டும் பின்வருமாறு உறுதிப்படுத்துகிறது என்று கூறுகிறது:

**"மோதல்களைத் தடுப்பதிலும், தீர்வு காண்பதிலும், சமாதானத்தைக் கட்டியெழுப்புவதிலும் பெண்களின் முக்கிய பங்கு, மற்றும் சமாதானத்தையும் பாதுகாப்பையும் பராமரிப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் அனைத்து முயற்சிகளிலும் அவர்களின் சமமான பங்களிப்பு மற்றும் முழு ஈடுபாட்டின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதும் மோதல் தடுப்பு மற்றும் தீர்வு தொடர்பாகத் தீர்மானமெடுப்பதன் பங்கை அதிகரிப்பதுமாகும்."**

மேலும், பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகள் மீதான ஆயுத மோதலின் தாக்கத்தின் புரிதல் மற்றும் சர்வதேச சமாதானம் மற்றும் பாதுகாப்பைப் பேணுவதற்கும் மேம்படுத்துவதற்கும் பங்களிக்கக்கூடிய சமாதான முன்னெடுப்புகளில் முழுமையான பங்களிப்பு மற்றும் அவர்களின் பாதுகாப்பை உறுதிசெய்தல் என்பவற்றைத் தீர்மானம் அங்கீகரிக்கிறது. சர்வதேச சமாதானம் மற்றும் பாதுகாப்பைப் பேணுவதற்கும் ஊக்குவிப்பதற்கும் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புப் பேரவையின் கட்டளைக்கு இணங்க அறிமுக ஏற்பாடுகள் வரைவுசெய்யப்பட்டுள்ள நிலையில், இலங்கையில் சமாதான முன்னெடுப்பு மற்றும் நல்லிணக்கத்தில் பெண்களின் முழுமையான பங்களிப்பை உறுதிசெய்யும் நோக்கில், ஓர் அரசாங்கமாக கடந்தகாலக் குறைகளை நிவர்த்தி செய்யும் வகையிலும், ஆழமாகப் பிளவுபட்டுள்ள சமூகத்தை நல்லிணக்கத்தை நோக்கி நகர்த்தும் நோக்குடனும் NAP இன் இந்தப் பிரிவை அமுலாக்க இலங்கை அரசாங்கம் விரும்புகிறது.

இடம்பெயர்ந்ததாலும், அகதியாக இருப்பதாலும் ஏற்படும் 'நீடித்த தாக்கங்கள்' இருப்பதையும், இந்தக் காரணிகள் நீடித்த சமாதானம் மற்றும் நல்லிணக்கத்தைப் பாதிக்கும் என்பதையும் தீர்மானம் மேலும் ஏற்றுக்கொள்கின்றது. மேலும், தீர்மானத்தின் 12வது பிரிவின்படி, அரச தரப்பினர் "அகதிகள் முகாம்கள் மற்றும் குடியேற்றங்களின் குடியியல் மற்றும் மனிதாபிமானத் தன்மையை மதிக்க வேண்டுமென்பதுடன் பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளின் குறிப்பிட்ட தேவைகளை, அவர்களின் வடிவமைப்பு உட்பட... கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும்". மேலதிகமாக, பல்வேறு காலகட்டங்களில் உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்கள் (IDPs) மற்றும் முகாம்களில் வாழ்ந்தவர்கள் தொடர்பான அரச பொறுப்புகள், தாக்கங்களின் நீடித்த தன்மை காரணமாக மோதலின் பின்னரும் தொடர்கின்றன. எனவே, UNSCR 1325இன் இந்தப் பரந்த அம்சங்கள் WPS குறித்த NAP இன்கீழ் அடையாளம் காணப்பட்ட அர்ப்பணிப்புகளுக்குத் தொடர்ந்து பொருத்தமானவையாகும்.

ஆயுத மோதலின் பின்னணியில், அதேபோல் பல்வேறு இயற்கைப் பேரழிவுகளின்போது, இலங்கை தனது மக்கள் பிரிவுகளின் உள்நாட்டு இடப்பெயர்வை தொடர்ந்து அனுபவித்து வருகிறது. WPS நிகழ்ச்சிநிரல் தொடர்பான பரந்த விவாதங்கள் WPS மற்றும் இயற்கைப் பேரழிவுகளுக்கு இடையே உள்ள ஒருங்கிணைந்த தொடர்பை அங்கீகரிக்கிறது என்பதால், இது இந்த NAP க்குள் கவனிக்கப்பட வேண்டிய மற்றுமோர் அம்சமாகும். உதாரணமாக, 2015இல் வெளியிடப்பட்ட UNSCR 1325 பற்றிய உலகளாவிய ஆய்வு பின்வருமாறு கூறுகிறது:

அதிகரித்த அளவில், அவசரநிலைகள் மற்றும் மனிதாபிமான நெருக்கடிகளுக்கு வழிவகுக்கும் இயற்கை அனர்த்தங்கள் மோதல் மற்றும் பால்நிலைச் சமத்துவமின்மையுடன் சிக்கலான உறவைக் கொண்டுள்ளது. தகவல் மற்றும் ஆதாரங்களுக்கான அணுகல் இல்லாமை, வேரூன்றிய பால்நிலை நிலைப்பாடுகள் மற்றும் சமத்துவமின்மைகள் மற்றும் கலாசாரக் கட்டுப்பாடுகள் ஆகியவை இயற்கை அனர்த்தங்களுக்கு - குறிப்பாக

மோதலால் பாதிக்கப்பட்ட அமைப்புகளில் உள்ள பெண்களையும் பெண் பிள்ளைகளையும் மிகவும் இலகுவாகப் பாதிக்கின்றன. உதாரணமாக, 2004இல் மோதலால் பாதிக்கப்பட்டிருந்த இலங்கையைச் சுனாமி தாக்கியதுடன் இடம்பெயர்ந்த பெண்களில் ஐந்தில் ஒருவரைக் கொன்றது; இது இடம்பெயர்ந்த ஆண்களின் இறப்பு விகிதத்தை விட இரண்டு மடங்கு அதிகமாகும். (ஐக்கிய நாடுகள் பெண்கள் அமைப்பு, 'மோதலைத் தடுத்தல், நீதியை நிலைமாற்றுதல், சமாதானத்தைப் பாதுகாத்தல்: ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபை தீர்மானம் 1325' (2015) இனை நடைமுறைப்படுத்துவது குறித்த உலகளாவிய கற்கை ப. 86)

இந்தத் தொடர்பைக் கருத்திற்கொண்டு, இயற்கை அனர்த்தங்களால் அதிகளவில் பாதிக்கப்படும் பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகள் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் இந்தத் தேசிய செயற்திட்டம் முயல்கிறது.

UNSCR 1325 இன் முன்னுரை, 'பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகள்மீது ஆயுத மோதலின் தாக்கம் குறித்த தரவுகளை ஒருங்கிணைக்க வேண்டிய அவசியம் உள்ளது' என்றும் குறிப்பிடுகிறது. அதனால், WPS குறித்த NAP ஆனது இலங்கை அரசாங்கம் போராளியானமையால் மற்றும் போரினால் கணவனை இழந்தமையால் அல்லது அவர்களது குடும்பம் அல்லது நிறுவன அமைப்புக்கள் காரணமாகப் பல வழிகளில் மோதலால் பாதிக்கப்பட்டிருக்கின்ற பெண்களுக்குக் குறிப்பாக உதவவேண்டும் என்றுகருதுகிறது. மோதலால் நேரடியாகப் பாதிக்கப்படாத FHHகளையும் NAP இன் விரிவாக்கப்பட்ட பகுதி உள்ளடக்குவதுடன் இது ஆயுத மோதலினால் ஏற்படுகின்ற அதிகப்படியான தாக்கத்தால் உருவாக்கப்படும் மறைமுகமான தாக்கத்தை அங்கீகரிப்பதற்காக மேற்கொள்ளப்பட்டது. ஆகவே, சமாதானம் மற்றும் பாதுகாப்புத் தொடர்பான விடயங்களில் பெண்களின் முழுப் பாதுகாப்பையும் முழுப் பங்களிப்பையும் உத்தரவாதம் செய்வதே இந்த NAP இன் பிரதான நோக்காகும்.

WPS குறித்த NAP இன் வரைவு கட்டத்தில், கலந்தாலோசனை நிலையில் வெளிப்படுத்தப்பட்ட கருத்துக்கள், குறைகள் மற்றும் பிரச்சினைகள் என்பன குறிப்பிடத்தக்கவையாகும். சமூகத்தின் பல்வேறு பிரிவுகளுடன் கலந்தாலோசனைகளை நடத்துவதற்கான செயன்முறைகள மட்டத்தில் இலங்கைப் பெண்களின் மேற்பொருந்துகின்ற பிரச்சினைகளின் உள்ளடக்கத்தை உறுதிப்படுத்தியது. இந்தப் பிரச்சினைகளுக்கு நேரடியாகப் பதிலளிக்கும் WPS குறித்த NAP ஐ ஏற்றுக்கொள்வதன்மூலம் இந்த நேரத்தில் தனது சர்வதேசக் கடமைகளை நிறைவேற்றுவதற்கான விருப்பத்தை இலங்கை அரசாங்கம் வெளிப்படுத்துகிறது. UNSCR 1325இன் இந்த முக்கிய அம்சங்களுக்கேற்ப, WPS அர்ப்பணிப்புக்கள் இந்த NAP இல் வகுக்கப்பட்டு இணைக்கப்பட்டுள்ளன.

## வெளிப்படுத்தப்பட்ட முக்கிய பிரச்சினைகள்

இந்த NAPக்குள், பல முக்கிய பிரச்சினைகள் WPS நிகழ்ச்சிநிரலை உள்ளடக்கும் வகையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இந்த முக்கிய பிரச்சினைகள் தேசிய கொள்கை கட்டமைப்பான செழிப்பு மற்றும் சுபிட்சத்தின் நோக்கின் பிரகாரம் வடிவமைக்கப்பட்டுள்ளன. இந்த கருப்பொருள் பகுதிகள் மற்றும் NPF உடனான அவற்றின் தொடர்புகள் கீழே விளக்கப்பட்டுள்ளன.

### 1. சட்டம், கொள்கை மற்றும் நிறுவன சீர்திருத்தங்கள்

இத்தகைய சீர்திருத்தங்கள் 1325ஆம் தீர்மானத்தின் WPS நிகழ்ச்சிநிரலால் ஊக்குவிக்கப்படுகின்றன. இந்த NAPஇல் முன்மொழியப்பட்ட கருப்பொருள் பகுதியின் கீழ் குறிப்பான நடவடிக்கைகள் மாகாண கலந்தாலோசனைகளில் மேற்கொள்ளப்பட்ட கண்டறிவுகளுக்கு ஏற்ப முன்மொழியப்பட்டுள்ளதுடன், இதற்குள் இலங்கை அரசு, மற்றைய விடயங்களுடன் பின்வருவனவற்றை மேற்கொள்ள விரும்புகிறது:

- நாட்டின் சட்ட அமைப்பு சர்வதேசச் சட்டங்களுடன் நன்கு இணங்குகிறது என்பதை உறுதிப்படுத்த வழக்கற்றுப்போன சட்ட நடைமுறைகள் மற்றும் கட்டளைகளைத் திருத்துதல்
- நீதிமன்றங்களுக்குக் கொண்டுசெல்லப்படுவதற்குப் பதிலாக மத்தியஸ்த சபைகளில் சிவில் மோதல்களைத் தீர்ப்பதற்காக மத்தியஸ்தர் சபைச் செயன்முறையை வலுப்படுத்துதல்.
- சம்பந்தப்பட்ட நபர்களுக்குச் சட்ட அமுலாக்க நடைமுறைகள்

மற்றும் பொறிமுறைகள் குறித்த பயிற்சி அளித்தல்

இங்கு WPS குறித்த NAP இல் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள் மற்றும் குறிக்கோள்களின்மூலம் பெண்களின் வலுவூட்டுதல் அடையப்படுவதை உறுதிசெய்ய பால்நிலை சார் பார்வையிலிருந்து இவை வடிவமைக்கப்பட்டுள்ளன.

## 2. பெண்களால் அனுபவிக்கப்பட்ட இடப்பெயர்வின் தாக்கம்

அனைத்துக் குடிமக்களுக்கும் ‘குறிப்பாகப் பெண்கள் மற்றும் பொருத்தமான வீடுகள் மற்றும் தங்குமிடப் பற்றாக்குறை தொடர்பான விடயங்கள் இடம்பெயர்ந்த பெண்கள் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினைகளில் ஒன்றாகும். இந்த NAP தயாரிப்பில், இது தீவிரமாக பரிசீலிக்கப்பட்டு, இடம்பெயர்ந்த பெண்களின் வாழ்க்கையை மிகவும் அர்த்தமுள்ளதாக மாற்றுவதற்கு தொடர்புடைய பிற அம்சங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. மேலும், அத்தகைய பகுதிகளில் உள்ள போரினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வீட்டுவசதி வழங்குவது உட்பட அம்மக்களின் பொருளாதாரத் தரங்களையும் வாழ்வாதாரங்களையும் மேம்படுத்துவதற்கு இலங்கை அரசு உறுதிபூண்டுள்ளது. இவை மேலும் இடப்பெயர்வின் தாக்கத்திற்கு உதவுவதை இலக்காகக்கொண்ட NAP இன் செயற்பாடுகள் மற்றும் நடவடிக்கைகளை வடிவமைப்பதில் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன், அவை மேலும் தீர்மானம் 1325 இன் முக்கிய கருப்பொருளாகவுமுள்ளன.

## 3. பெண்களின் பொருளாதார வலுவூட்டல்

இலங்கையர்களுக்குக் கிடைக்கும் ஜனநாயக இடத்தைச் சமரசம் செய்யாமல் தேசிய பாதுகாப்பை உறுதிசெய்வதில் இலங்கை அரசு உறுதி பூண்டுள்ளது. இந்த அணுகுமுறையில்தான் ஆயுத மோதலால் எந்தவகையிலும் பாதிக்கப்பட்ட அனைவரையும் பற்றிய பொறுப்புகளை நிறைவேற்ற முயற்சிக்கிறது. எனவே இந்தப் பிரிவு இராணுவக் கணவனை இழந்த பெண்கள், முன்னாள் போராளிகள் மற்றும் பெண் தலைத்துவ குடும்பங்களின் பெண்கள், சமாதானம் மற்றும் பாதுகாப்புத் தேவைகளை இந்தப் பொது அணுகுமுறையில் உள்ளடக்குகின்றது.

எனவே, இந்தக் கருப்பொருள் பிரிவுக்குள், இராணுவக் கணவனை இழந்த பெண்கள், முன்னாள் பெண் போராளிகள் அத்துடன் ஏனைய FHH களின் தனித்துவமான பிரச்சினைகளைப் பூர்த்திசெய்வதில் WPS தொடர்பான NAP கவனம் செலுத்துகிறது. பெண்களின் சமாதானம் மற்றும் பாதுகாப்பை உறுதிசெய்ய முடிந்தவரை பல பெண்களுக்குப் பயனளிக்கும் வகையில் கொள்கைகளை விரிவுபடுத்துவது தீர்மானம் 1325 இன் ஒரு குறிக்கோள் என்பதுடன், WPS தொடர்பான NAP இதனைப் பிரதிபலிக்கின்றது.

## 4. பெண்களின் பாதுகாப்பு மற்றும் பந்தோபஸ்து.

அனைத்துக் குடிமக்களுக்கும் தேசிய பாதுகாப்பிற்கான பிரதான முன்னுரிமையாக, பெண்களின் பாதுகாப்பை உறுதிசெய்வதற்கான ஒரு மூலோபாயத்தை இலங்கை அரசு அங்கீகரித்துள்ளது. WPS தொடர்பான NAP இன் பெண்களின் பாதுகாப்பு மற்றும் பந்தோபஸ்தில் கவனம் செலுத்தும் கருப்பொருள் பிரிவு, இலங்கை அரசின் இந்த அர்ப்பணிப்பின் பிரகாரம் வடிவமைக்கப்பட்டுள்ளது. கலந்தாலோசனைகளின்போது எழுப்பப்பட்ட பெண்களின் பிரச்சினைகளுக்கு இணங்க, WPS தொடர்பான NAP மூலம் ஒன்றன்பின் ஒன்றாக மேலும் பலப்படுத்தப்பட்டிருக்கின்ற பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கான பாதுகாப்பின் பல்வேறு அம்சங்களில் NPF கவனம் செலுத்துகிறது.

WPS தொடர்பான NAP, இயலாமை மோதல் சூழல் தொடர்பாக உருவானதா, இல்லையா என்பதைக் கருதாமல் இயலாமைகளையுடைய பெண்கள் மற்றும் சிறுமிகளின் பொதுவான தேவைகளை அங்கீகரிப்பதன்மூலம் இந்தச் செயல்முறையைப் பூர்த்திசெய்ய முயற்சிக்கிறது. அங்கவீனம் பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளைச் சமூக ரீதியாகக் கட்டமைக்கப்பட்ட பாதிப்புகளுக்கு எவ்வாறு வெளிப்படுத்துகிறது என்பதன் மூலம் இந்தப் பரந்த அங்கீகாரம் உத்தரவாதப்படுத்தப்படுகிறது. இயலாமை பெண்களின் சமாதானம் மற்றும் பாதுகாப்பை அச்சுறுத்துகின்ற வகையில் பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளைச் சமூக ரீதியான, கட்டமைக்கப்பட்ட, நிறுவன ரீதியான மற்றும் அவற்றின் ஒன்றிணைந்த வன்முறைகளுக்கு வெளிப்படுத்துகிறது என்பதை WPS தொடர்பான NAP ஏற்றுக்கொள்வதுடன், அதற்கேற்ப இயலாமைகளையுடைய பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்ய NAP முயல்கிறது. கலந்தாலோசனைகளில் பெண்களால் எழுப்பப்பட்ட முக்கிய பிரச்சினைகளில் ஒன்று, குழந்தைப் பராமரிப்பு மற்றும் நெகிழ்வான பணி ஏற்பாடுகளுக்கான வசதிகள் பற்றாக்குறையாக உள்ளதால் அவர்களின் பாதுகாப்பு அச்சுறுத்தப்படுவது பற்றியதாகும். இதற்கிணங்க, WPS தொடர்பான NAP ஆனது பரந்த இலக்குகளை அடைய உதவும் அடையாளம் காணக்கூடிய குறிக்கோள்கள் மற்றும் கண்காணிப்புப் பொறிமுறைகளுடன் கூடிய தனித்துவமான செயற்பாடுகளை உருவாக்கியுள்ளது.

## 5. பெண்களின் பொருளாதார வலுவூட்டல்

கலந்தாலோசனையின்போது, இலங்கையின் அனைத்துப் பகுதிகளிலிருந்தான பெண்களும் பெரும்பாலும் நுண்நிதி நிறுவனங்களிடமிருந்து ஒழுங்கமைக்கப்படாத கடன் நடைமுறைகளால் மிகைப்படுத்தப்படுகின்ற பொருளாதாரச் சிக்கல்களை எதிர்கொண்டுள்ளனர் என்பது சான்றாகிறது. WPS தொடர்பான NAP இந்த பிரச்சினையை நிவர்த்தி செய்ய முயல்கின்றது. இந்த நடவடிக்கை பெண்களின் பொருளாதார மற்றும் சமூக பங்களிப்பு மீதான GoSL இன் அவதானம் மற்றும் பெண் தொழில்முனைவோருக்கு ஆதரவளிக்க வேண்டிய அவசியத்தின் மூலம் ஆதரிக்கப்படுகிறது.

இந்த முடிவை அடைவதற்கு, WPS தொடர்பான NAP பல்வேறு அரசாங்க நிறுவனங்களால் கண்காணிக்கப்பட்டு, மதிப்பீடு செய்யப்பட்டு, பெண்கள் கடன் வாங்கும் நடைமுறைகளை நிர்வகிக்க மற்றும் வெற்றிகரமான தொழில்முனைவோராக மாறுவதற்குத் தகுந்த உதவியை உறுதிசெய்வதன் மூலம் அவர்களின் பொருளாதாரப் பாதுகாப்பு மற்றும் பந்தோபஸ்தை உறுதிசெய்யும் வகையிலான நடவடிக்கைகள் மற்றும் செயற்பாடுகளை வடிவமைத்துள்ளது.

## 6. பெண்களின் பொருளாதார வலுவூட்டல்

இலங்கை அரசாங்கம் அரசியல் தீர்மானமெடுப்பதில் பெண்கள் மற்றும் இளைஞர்களின் பங்களிப்பை அதிகரிக்கும் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. இலங்கையில் அனைத்துமட்ட ஆளுகைகளிலும் தீர்மானமெடுப்பதில் பெண்களின் பங்களிப்பை அதிகரிப்பதை இலக்காகக்கொண்டு பரந்துபட்ட மற்றும் பால்நிலைப்படுத்தப்பட்ட கவனத்துடன் இது WPS தொடர்பான NAP இனுள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இது தீர்மானம் 1325 இனால் ஊக்குவிக்கப்பட்ட அரசியல் உள்ளடக்கம் மற்றும் பால்நிலை உணர்வூட்டுதலால் மேலும் ஆதரிக்கப்படுகிறது.

கிராம அலுவலர் பிரிவில் பெண்கள் பிரதிநிதித்துவத்தை உள்ளடக்கிய மக்களை மையப்படுத்திய மத்தியஸ்த வாரியங்களை வலுப்படுத்துவதில் WPS குறித்த NAP கவனம் செலுத்துகிறது. WPS தொடர்பான NAP இலங்கையின் உள்நாட்டு மற்றும் சர்வதேசக் கடமைகளுக்கு இணங்க, பால்நிலைசார் பார்வை ஊடாக இதனை அர்ப்பணிப்புடன் சரிசெய்கின்றது.

## கருப்பொருள் முன்னுரிமை 01:

# சட்டம், கொள்கை மற்றும் நிறுவனச் சீர்திருத்தங்கள்

**மூலோபாயக் குறிக்கோள்கள்:**

1. தற்போதுள்ள பாராளுமன்றச் சட்டங்களைப் பால்நிலை உணர்திறனுள்ளதாகத் திருத்துதல்
2. பெண்களின் பங்களிப்பை ஊக்குவிக்க நிறுவனங்களின் தற்போதைய நடைமுறைகளை மாற்றியமைத்தல்
3. கள மட்டத்தில் பெண்களுக்குச் சேவைகளை வழங்குவதற்கான அரச ஈடுபாட்டை அதிகரித்தல்.
4. அரசு நிறுவனங்களில் பால்நிலை உணர்திறன் மற்றும் மொழிச் சமத்துவத்தை அதிகரித்தல்.
5. பெண்கள் தொடர்பான பால்நிலைப் பிரச்சினைகள் தொடர்பில் அரச உத்தியோகத்தர்களுக்கு உணர்வூட்டுதல்
6. கள மட்டத்தில் பெண்களுக்குக் கிடைக்கக்கூடிய அரச சேவைகள் தொடர்பிலும் எவ்வாறு அவற்றைச் சிறந்த முறையில் அணுகுவது என்பது பற்றியும் விழிப்புணர்வை ஏற்படுத்துதல்

இலக்குப் பகுதி

# 01

## பால்நிலை அடிப்படையிலான வன்முறை மற்றும் பாகுபாடுகளுக்கு எதிராகப் பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான சட்டம் மற்றும் கொள்கைச் சீர்திருத்தங்கள்

**விளைவு:**

பெண்கள் சட்ட மற்றும் கொள்கைச் சீர்திருத்தங்கள் மூலமாகப் பால்நிலை அடிப்படையிலான வன்முறை மற்றும் பாகுபாடுகளுக்கு எதிரான மேம்படுத்தப்பட்ட பாதுகாப்பைக் கொண்டிருப்பார்கள்

**பொறுப்பான நிறுவனம் / உத்தியோகத்தர்**

- மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்-துகை அமைச்சு
- தலைவர், பெண்கள் தொடர்பான தேசிய குழு (NCW)

| பிரதான செயற்பாடுகள் | குறிகாட்டிகள் | சரிபார்க்கும் வழிகள் | நடைமுறைப் படுத்தும் பிரதான நிறுவனங்கள் | உதவி நிறுவனங்கள் | | கால அளவு | கண்காணிக்கும் நிறுவனம் | ஒதுக்கீடு |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | அரச செயற்பாட்டாளர்கள் | அரச சார்பற்ற செயற்பாட்டாளர்கள் | | | |
| **1.1** தனிப்பட்ட மற்றும் பிராந்திய சட்டங்களில் உள்ள பாரபட்சமான விதிகளை CEDAW இன் உறுப்புரை 2 மற்றும் 1978 இலங்கையின் அரசியலமைப்பின் 12வது உறுப்புரைக்கு ஏற்ப திருத்துதல். | தேர்ந்தெடுக்கப்பட்ட தனிப்பட்ட / பிராந்திய / மதச் சட்டங்களைத் திருத்துவதற்கான நோக்கத்துடன் நடாத்தப்பட்ட கலந்தாலோசனைகளின் எண்ணிக்கை.<br>வரைவாக்கப்பட்டு பாராளுமன்றத்தில் வழங்கப்பட்ட பரிந்துரைகளின் எண்ணிக்கை<br><br>அமுல்படுத்தப்பட்ட திருத்தங்களின் எண்ணிக்கை | சட்ட வரைஞர் திணைக்களம்<br><br>இலங்கை பாராளுமன்றம் | நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீமைப்பு அமைச்சு | பால்நிலை சமநிலை மற்றும் சமத்துவத்திற்கான பாராளுமன்ற தெரிவுக்குழு<br><br>சட்ட வரைஞர் திணைக்களம்<br><br>பாராளுமன்றத்தின் பெண்கள் குழு<br><br>பெண்கள் தொடர்பான தேசிய குழு<br><br>சட்டமா அதிபர் திணைக்களம; | ஐ.நா நிறுவனங்கள்<br><br>CSOs<br><br>ஆய்வு நிறுவனங்கள் | ஜனவரி 2023 – ஒக்ரோபர் 2025 | பெண்கள், சிறுவர் விவகாரம் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு | TBC |

| பிரதான செயற்பாடுகள் | குறிகாட்டிகள் | சரிபார்க்கும் வழிகள் | நடைமுறைப் படுத்தும் பிரதான நிறுவனங்கள் | உதவி நிறுவனங்கள் | | கால அளவு | கண்காணிக்கும் நிறுவனம் | ஒதுக்கீடு |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | அரச செயற்பாட்டாளர்கள் | அரச சார்பற்ற செயற்பாட்டாளர்கள் | | | |
| **1.2**<br>குறைந்தபட்சம் 25 சதவீத பிரதிநிதித்துவத்திற்கு பெண்களுக்கு உத்தரவாதமளிப்பதற்காக 1988ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க மாகாண சபை தேர்தல் சட்டத்தைத் திருத்துதல் | வரைவாக்கப்பட்டு பாராளுமன்றத்தில் வழங்கப்பட்ட பரிந்துரைகளின் எண்ணிக்கை<br><br>அமுல்படுத்தப்பட்ட திருத்தங்களின் சதவிகிதம் | சட்ட வரைஞர் திணைக்களம்<br><br>இலங்கை பாராளுமன்றம் | பொதுநிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள் மற்றும் உள்ளுராட்சி அமைச்சு<br><br>நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீமைப்பு அமைச்சு | பால்நிலை சமநிலை மற்றும் சமத்துவத்திற்கான பாராளுமன்ற தெரிவுக்குழு<br><br>சட்ட வரைஞர் திணைக்களம்<br><br>பாராளுமன்றத்தின் பெண்கள் குழு<br><br>பெண்கள், சிறுவர் விவகாரம் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு<br><br>தேர்தல் ஆணைக்குழு | ஐ.நா நிறுவனங்கள்<br><br>CSOs<br><br>ஆய்வு நிறுவனங்கள் | ஜனவரி 2023 – ஒக்ரோபர் 2025 | பெண்கள், சிறுவர் விவகாரம் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு | TBC |
| **1.3**<br>பாராளுமன்ற மட்டத்தில் பெண்களுக்கு குறைந்தபட்சம் 25% உத்தரவாதமளிக்கப்பட்ட பிரதிநிதித்துவத்தை வழங்க 1981ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்திற்குள் ஏற்பாடுகளை அறிமுகப்படுத்துதல் | வரைவாக்கப்பட்டு பாராளுமன்றத்தில் வழங்கப்பட்ட பரிந்துரைகளின் எண்ணிக்கை<br><br>அமுல்படுத்தப்பட்ட திருத்தங்களின் சதவிகிதம் | சட்ட வரைஞர் திணைக்களம்<br><br>இலங்கை பாராளுமன்றம் | நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீமைப்பு அமைச்சு<br>பெண்கள், சிறுவர் விவகாரம் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு | பால்நிலை சமநிலை மற்றும் சமத்துவத்திற்கான பாராளுமன்ற தெரிவுக்குழு<br><br>சட்ட வரைஞர் திணைக்களம்<br><br>பாராளுமன்றத்தின் பெண்கள் குழு<br><br>பெண்கள், சிறுவர் விவகாரம் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு<br><br>தேர்தல் ஆணைக்குழு | ஐ.நா நிறுவனங்கள்<br><br>CSOs | ஜனவரி 2023 – ஒக்ரோபர் 2025 | பெண்கள், சிறுவர் விவகாரம் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு | TBC |

| பிரதான செயற்பாடுகள் | குறிகாட்டிகள் | சரிபார்க்கும் வழிகள் | நடைமுறைப் படுத்தும் பிரதான நிறுவனங்கள் | உதவி நிறுவனங்கள் | | கால அளவு | கண்காணிக்கும் நிறுவனம் | ஒதுக்கீடு |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | அரச செயற்பாட்டாளர்கள் | அரச சார்பற்ற செயற்பாட்டாளர்கள் | | | |
| **1.4** கடந்த பத்தாண்டுகளில் பாலியல் வன்முறைகள் குறித்து முறைப்பாடளிக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பில் ஒவ்வொரு வழக்கிற்கும் தீர்க்கப்படுவதற்கு எடுக்கப்பட்ட கால அளவைக் கண்டறிவதில் கவனம் செலுத்தி ஓர் ஆய்வினை நடாத்துதல் (அதாவது. 2012 – 2022), (பொலிஸ் முறைப்பாடு மற்றும்/ அல்லது மருத்துவ/சட்டப் பரிசோதனையின் முதல் நிகழ்விலிருந்து நேரம் கணக்கிடப்படும்) | நடாத்தப்பட்ட கற்கைகளின் எண்ணிக்கை | நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு | நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு | இலங்கை சட்ட ஆணைக்குழு<br><br>பெண்கள் தொடர்பான தேசிய குழு | ஐ.நா நிறுவனங்கள்<br><br>CSOs | ஜனவரி 2023 – ஒக்ரோபர் 2025 | பெண்கள், சிறுவர் விவகாரம் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு | TBC |

| பிரதான செயற்பாடுகள் | குறிகாட்டிகள் | சரிபார்க்கும் வழிகள் | நடைமுறைப் படுத்தும் பிரதான நிறுவனங்கள் | உதவி நிறுவனங்கள் | | கால அளவு | கண்காணிக்கும் நிறுவனம் | ஒதுக்கீடு |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | அரச செயற்பாட்டாளர்கள் | அரச சார்பற்ற செயற்பாட்டாளர்கள் | | | |
| **1.5** முதற்தடவை முறைப்பாடு அளிக்கப்படுவதில் இருந்து தள்ளுபடி, வாபஸ் பெறுதல், விடுதலை செய்தல் அல்லது தண்டனையின் மூலம் வழக்கின் தீர்வு வரையிலான காலப்பகுதியைப் பதிவுசெய்யும் விசேட கண்காணிப்பு அமைப்புடன் பாலியல் வன்முறை தொடர்பான தரவை டிஜிட்டல் மயமாக்குதல். | பாலியல் வன்முறைச் சம்பவங்களின் செயன்முறை கண்காணிக்க உருவாக்கப்பட்ட தரவுத் தளங்களின் எண்ணிக்கை | பொலிஸ் சிறுவர் மற்றும் பெண்கள் பணியகம்<br><br>நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீமைப்பு அமைச்சு | பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு | இலங்கை சட்ட ஆணைக்குழு<br>தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை (NCPA)<br><br>சட்ட உதவி ஆணைக்குழு | ஐ.நா நிறுவனங்கள்<br><br>CSOs | ஜனவரி 2023 – ஒக்ரோபர் 2025 | பெண்கள், சிறுவர் விவகாரம் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு | TBC |

| பிரதான செயற்பாடுகள் | குறிகாட்டிகள் | சரிபார்க்கும் வழிகள் | நடைமுறைப் படுத்தும் பிரதான நிறுவனங்கள் | உதவி நிறுவனங்கள் | | கால அளவு | கண்காணிக்கும் நிறுவனம் | ஒதுக்கீடு |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | அரச செயற்பாட்டாளர்கள் | அரச சார்பற்ற செயற்பாட்டாளர்கள் | | | |
| 1.6 தப்பிப்பிழைத்தவரை மையமாகக் கொண்ட அணுகுமுறையைப் பயன்படுத்தி பால்நிலை-உணர்திறனான மற்றும் துலங்கலுடைய வகையில் நீதிமன்றச் செயன்முறைகளை விரைவுபடுத்துவதற்கு நியம செயற்பாட்டு நடைமுறைகளை (SOPs) விருத்தி செய்தல்[15]. | விருத்திசெய்யப்பட்டு பின்பற்றப்பட்ட நியம செயற்பாட்டு நடைமுறைகளின் எண்ணிக்கை<br>பெண்கள் மற்றும் சிறுவர்கள் தொடர்பான நீதிமன்ற வழக்குகளைத் தீர்ப்பதற்குப் பிரத்தியேகமான அமைப்பை ஏற்படுத்திய மாவட்ட நீதிமன்றங்களைக் கொண்ட மாவட்டங்களின் எண்ணிக்கை | பொலிஸ் சிறுவர் மற்றும் பெண்கள் பணியகம்<br><br>நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீமைப்பு அமைச்சு | பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு | இலங்கை சட்ட ஆணைக்குழு<br><br>சட்ட உதவி ஆணைக்குழு | ஐ.நா நிறுவனங்கள்<br><br>CSOs | ஜனவரி 2023 – ஒக்ரோபர் 2025 | பெண்கள், சிறுவர் விவகாரம் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு | TBC |

15 இந்த நடவடிக்கைகள் தாமதங்களைத் தவிர்ப்பதற்காக நீதித்துறை அமைப்பில் டிஜிட்டல் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்த முன்மொழிகின்ற NPF உடன் இணங்குகின்றன.

| பிரதான செயற்பாடுகள் | குறிகாட்டிகள் | சரிபார்க்கும் வழிகள் | நடைமுறைப் படுத்தும் பிரதான நிறுவனங்கள் | உதவி நிறுவனங்கள் | | கால அளவு | கண்காணிக்கும் நிறுவனம் | ஒதுக்கீடு |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | அரச செயற்பாட்டாளர்கள் | அரச சார்பற்ற செயற்பாட்டாளர்கள் | | | |
| **1.7**<br>பாலியல் வன்புணர்வின் அனைத்து வடிவங்களுக்கும் குற்றவாளிகளுக்கும் எதிராக முழுமையான பாதுகாப்பை உறுதி செய்வதற்கும், சிறுவர்களின் போதுமான பாதுகாப்பை உறுதி செய்வதற்கும், திருமண ரீதியான கற்பழிப்பை உள்ளடக்குவதற்கும், பாலியல் வன்புணர்விற்கு ஆளானவர்கள் மற்றும் குற்றவாளிகள் மீதான பால்நிலை கட்டுப்பாடுகளை நீக்குவதற்குமாக தண்டனைக் கோவையின் பிரிவு 363 இனை சீர்திருத்துதல். | தேர்ந்தெடுக்கப்பட்ட ஏற்பாடுகளைத் திருத்துவதற்கான நோக்கத்துடன் நடாத்தப்பட்ட கலந்தாலோசனைகளின் எண்ணிக்கை. வெளியிடப்பட்டு பொதுவில் கிடைக்கக்கூடியதாக உள்ள கலந்தாலோசனை தொடர்பான அறிக்கை<br><br>வரைவாக்கப்பட்டு பாராளுமன்றத்தில் வழங்கப்பட்ட பரிந்துரைகளின் எண்ணிக்கை<br><br>அமுல்படுத்தப்பட்ட திருத்தங்களின் சதவிகிதம் | சட்ட வரைஞர் திணைக்களம்<br><br>இலங்கை பாராளுமன்றம் | நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு | பால்நிலை சமநிலை மற்றும் சமத்துவத்திற்கான பாராளுமன்ற தெரிவுக்குழு<br><br>சட்ட வரைஞர் திணைக்களம்<br><br>பெண்கள், சிறுவர் விவகாரம் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு | ஐ.நா நிறுவனங்கள்<br><br>ஆய்வு நிறுவனங்கள்<br><br>CSOs | பெப்ரவரி 2023 – ஜனவரி 2025 | பெண்கள், சிறுவர் விவகாரம் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு | TBC |
| **1.8**<br>அனர்த்த முகாமைத்துவ மற்றும் அனர்த்த தணிப்பு தொடர்பான தேசிய கட்டமைப்பின் பால்நிலை உணர்திறன் தொடர்பான மீளாய்வை நடாத்துதல் | தேசிய அனர்த்த முகாமைத்துவக் கட்டமைப்பின் பால்நிலை உணர்திறன் மீது நடாத்தப்பட்ட மீளாய்வுகள் மற்றும் அறிக்கைகளின் எண்ணிக்கை | பாதுகாப்பு அமைச்சு<br><br>அனர்த்த முகாமைத்துவ நிலையம் | பாதுகாப்பு அமைச்சு<br><br>அனர்த்த முகாமைத்துவ நிலையம் | பெண்கள், சிறுவர் விவகாரம் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு | CSOs | பெப்ரவரி 2023 – ஓகஸ்ட் 2024 | பெண்கள், சிறுவர் விவகாரம் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு | TBC |

இலக்குப் பகுதி

# 02

**நிறுவன ரீதியான சீர்திருத்தங்கள் பால்நிலையை உள்ளடக்கியதாகவும் பால்நிலைக்கு துலங்கலுடைய பாதீட்டைக் கொண்டதாகவும் மற்றும் இலங்கையில் பெண்கள், சமாதானம் மற்றும் பாதுகாப்பு நிகழ்ச்சிநிரலை விரைவுபடுத்துவதற்காகப் பணியாளர்களின் இயலளவுகளை அதிகரிக்கும் தன்மை கொண்டதாகவும் இருக்கவேண்டும்**

| விளைவு: | பொறுப்பான நிறுவனம் / உத்தியோகத்தர் |
|---|---|
| கள மட்டத்தில் உள்ள பெண்கள் பால்நிலை உணர்திறன் கொண்ட அரச ஆதரவு வளங்கள் மற்றும் சேவைகளுக்கான அணுகலை மேம்படுத்தியுள்ளனர் | • முகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்-துகை அமைச்சு |

| பிரதான செயற்பாடுகள் | குறிகாட்டிகள் | சரிபார்க்கும் வழிகள் | நடைமுறைப் படுத்தும் பிரதான நிறுவனங்கள் | உதவி நிறுவனங்கள் | | கால அளவு | கண்காணிக்கும் நிறுவனம் | ஒதுக்கீடு |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | அரச செயற்பாட்டாளர்கள் | அரச சார்பற்ற செயற்பாட்டாளர்கள் | | | |
| **2.1** அமைப்புகள் (டிஜிட்டல் அமைப்புகள் உட்பட) மற்றும் அரச நிறுவனங்களின் உட்கட்டமைப்பு ஆகியவை பால்நிலை உணர்திறனான முறையில் பெண்களுக்கு அணுகக்கூடியதாக இருப்பதை உறுதி செய்வதற்கான பொறிமுறைகளை அமுல்படுத்துதல் | உருவாக்கப்பட்ட வழிகாட்டுதல்களின் எண்ணிக்கை<br><br>அரசாங்க நிகழ்நிலை அமைப்பை அணுகும் பெண்களின் சதவிகிதம்<br><br>இயலாமைகளை உடைய நபர்கள் (PWDs) அணுகக்கூடியதாக உள்ள வளாகங்களைக் கொண்ட அரச அலுவலங்களின் சதவிகிதம் | பொதுச் சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு<br><br>பிரதேச செயலகங்கள் | பெண்கள், சிறுவர் விவகாரம் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு<br><br>பொதுநிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு | அனைத்து அரச நிறுவனங்களும் | ஐ.நா நிறுவனங்கள்<br><br>ஆய்வு நிறுவனங்கள் | ஜனவரி 2023 – ஓகஸ்ட் 2027 | பொதுநிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு | TBC |

| பிரதான செயற்பாடுகள் | குறிகாட்டிகள் | சரிபார்க்கும் வழிகள் | நடைமுறைப் படுத்தும் பிரதான நிறுவனங்கள் | உதவி நிறுவனங்கள் | | கால அளவு | கண்காணிக்கும் நிறுவனம் | ஒதுக்கீடு |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | அரச செயற்பாட்டாளர்கள் | அரச சார்பற்ற செயற்பாட்டாளர்கள் | | | |
| **2.2**<br>பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு இயலளவு மற்றும் பால்நிலை உணர்திறனான WDOக்களைப் போதுமான எண்ணிக்கையில் ஆட்சேர்ப்பு செய்தல்/ ஒதுக்குதல் | மாவட்ட அளவில் உருவாக்கப்பட்ட WDOக்கள் தொடர்பான கொள்கைகள் மற்றும் பாதீட்டுத் தீர்மானங்களின் எண்ணிக்கை<br><br>ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட புதிய WDOக்களின் எண்ணிக்கை | பொதுநிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு<br><br>பிரதேச செயலகங்கள் | பொதுநிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு<br><br>பெண்கள், சிறுவர் விவகாரம் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு | இலங்கை பெண்கள் பணியகம்<br><br>பொது நிதித் திணைக்களம் | ஐ.நா நிறுவனங்கள்<br><br>CSOs<br><br>ஆய்வு நிறுவனங்கள் | ஜனவரி 2023 – ஓகஸ்ட் 2027 | பொதுநிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு | TBC |
| **2.3**<br>போதியளவான தமிழ் பேசும் உத்தியோகத்தர்களை நியமித்தல். (உதவிச்சேவைப் பிரிவு மற்றும் பிரதேச மற்றும் மாவட்டச் செயலகங்களில் உள்ள உத்தியோகத்தர்கள் தாய்மொழியில் தகைமையைக் கொண்டிருப்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும்) | நியமிக்கப்பட்ட தமிழ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை<br><br>பால்நிலை மற்றும் மொழி பன்முகத்தன்மைக்கேற்பத் தரம்பிரிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் சதவிகிதம் | பொதுநிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு<br><br>மாவட்டச் செயலகம் | பொதுநிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு<br><br>பெண்கள், சிறுவர் விவகாரம் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு | இலங்கை பெண்கள் பணியகம்<br><br>பொது நிதித் திணைக்களம்<br><br>பெண்கள் தொடர்பான தேசிய குழு<br><br>தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை | ஐ.நா நிறுவனங்கள்<br><br>CSOs<br><br>ஆய்வு நிறுவனங்கள் | ஜனவரி 2023 – ஓகஸ்ட் 2027 | பொதுநிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு | TBC |

| பிரதான செயற்பாடுகள் | குறிகாட்டிகள் | சரிபார்க்கும் வழிகள் | நடைமுறைப் படுத்தும் பிரதான நிறுவனங்கள் | உதவி நிறுவனங்கள் | | கால அளவு | கண்காணிக்கும் நிறுவனம் | ஒதுக்கீடு |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | அரச செயற்பாட்டாளர்கள் | அரச சார்பற்ற செயற்பாட்டாளர்கள் | | | |
| **2.4** பாடசாலைகளில் மும்மொழித் திறனை வசதிப்படுத்துகின்ற விதிமுறைகளை அறிமுகப்படுத்தி அமுலாக்குதல்[16] | விதிமுறைகள் வினைத்திறனாகப் பின்பற்றப்படும் பாடசாலைகளின் எண்ணிக்கை<br><br>ஆங்கிலம், சிங்களம் மற்றும் தமிழை எல்லா மாணவர்களுக்கும் கற்பிக்கும் பாடசாலைகளின் சதவிகிதம்<br><br>இரண்டாம் மொழிகள் கற்பித்தல் தொடர்பான பயிற்சி நெறிகள் மற்றும் வழிகாட்டுதல்களின் எண்ணிக்கை<br><br>ஆசிரியர்களுக்கிடையில் தமிழ் மற்றும் சிங்களத்தில் திறமையை ஊக்குவிப்பதை ஒழுங்குபடுத்தல்<br><br>கிடைக்கக்கூடிய ஆங்கிலம், தமிழ் மற்றும் சிங்கள மொழி தொடர்பான டிஜிட்டல் கற்றல் தொகுதிகளின் எண்ணிக்கை | கல்வி அமைச்சு | கல்வி அமைச்சு | அரச கரும மொழிகள் திணைக்களம்<br><br>பரீட்சைத் திணைக்களம்<br><br>கல்வி வெளியீட்டுத் திணைக்களம் | ஐ.நா நிறுவனங்கள் | ஜனவரி 2023 நீண்ட காலம் | கல்வி அமைச்சு | TBC |

16 அதிகரித்த வள ஒதுக்கீடு, மொழித்திறன் ஆசிரியர்களின் ஆட்சேர்ப்பை அதிகப்படுத்துதல், இரண்டாம் மொழிகளைக் கற்பிப்பதற்கான வழிகாட்டுதல்கள் மற்றும் ஆசிரியர்களுக்குப் பயிற்சியளித்தல், இருமொழித் திறன்களை ஊக்குவிப்பதற்காக ஆசிரியர் பதவி உயர்வுத் திட்டங்களை மேம்படுத்துதல் மற்றும் மொழி கற்றலின் டிஜிட்டல் தொகுதிகளை மேம்படுத்துதல், அணுகலை வலுப்படுத்துதல் ஆகியவற்றின் மூலம் இதனை மேற்கொள்ளலாம்.

| பிரதான செயற்பாடுகள் | குறிகாட்டிகள் | சரிபார்க்கும் வழிகள் | நடைமுறைப் படுத்தும் பிரதான நிறுவனங்கள் | உதவி நிறுவனங்கள் | | கால அளவு | கண்காணிக்கும் நிறுவனம் | ஒதுக்கீடு |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | அரச செயற்பாட்டாளர்கள் | அரச சார்பற்ற செயற்பாட்டாளர்கள் | | | |
| **2.5** அனைத்து நிர்வாகத் திணைக்களங்களும் அலுவலகங்களும் அரசியலமைப்பு மற்றும் பிற சட்ட உத்தரவாதங்களின்படி மும்மொழிச் சேவைகளை (சிங்களம், தமிழ், ஆங்கிலம்) வழங்குகின்றன என்பதை உறுதிப்படுத்தல் | மும்மொழியிலான சேவைகளை வழங்குகின்ற நிர்வாகத் திணைக்களங்களின் சதவிகிதம்<br><br>சிங்களம் மற்றும் தமிழில் மட்டும் சேவைகளை வழங்குகின்ற நிர்வாகத் திணைக்களங்களின் சதவிகிதம் | பொதுநிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள் மற்றும் உள்ளுராட்சி அமைச்சு | பொதுநிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள் மற்றும் உள்ளுராட்சி அமைச்சு | அரச கரும மொழிகள் திணைக்களம் | ஐ.நா நிறுவனங்கள் | ஜனவரி 2023 – நீண்ட காலம் | பொதுநிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள் மற்றும் உள்ளுராட்சி அமைச்சு | TBC |
| **2.6** இலங்கையினுடைய WPS குறித்த NAP இனை செயற்படுத்துவது குறித்து அரச உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சிநெறி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் | விருத்தி செய்யப்பட்ட பயிற்சித் தொகுதிகளின் எண்ணிக்கை<br><br>நடாத்தப்பட்ட பயிற்சிகளின் எண்ணிக்கை | பெண்கள், சிறுவர் விவகாரம் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு | பெண்கள், சிறுவர் விவகாரம் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு | இந்தத் தேசிய செயற்திட்டத்தில் பட்டியலிடப்பட்டுள்ள அனைத்து அமுலாக்க மற்றும் ஆதரவளிக்கும் நிறுவனங்கள் | ஐ.நா நிறுவனங்கள்<br><br>ஆய்வு நிறுவனங்கள் | ஜனவரி 2023 – ஒகஸ்ட் 2027 | பெண்கள், சிறுவர் விவகாரம் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு | TBC |

17 மத்திய மாகாணத்தில் நடைபெற்ற கலந்தாலோசனையில் இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. இந்த அளவீடு இயல்பாக இரட்டைப் பயன்பாட்டைக் கொண்டிருக்கும் என்று பரிந்துரைக்கப்பட்டது. முதலாவதாக, HRCSL தனது ஊழியர்களின் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய முடியும். இரண்டாவதாக, இது சட்டப் படிப்பில் ஈடுபட்டுள்ள பல்கலைக்கழக மாணவர்களுக்கு அவர்களின் நடைமுறைத் திறன்களை மேம்படுத்தி, மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் பணிபுரியும் HRCSL மற்றும் பிற நிறுவனங்களுக்கு நிரந்தர ஊழியர்களாக ஆட்சேர்ப்பு செய்வதற்குப் பொருத்தமான நபர்களை உருவாக்குகிறது.

| பிரதான செயற்பாடுகள் | குறிகாட்டிகள் | சரிபார்க்கும் வழிகள் | நடைமுறைப் படுத்தும் பிரதான நிறுவனங்கள் | உதவி நிறுவனங்கள் | | கால அளவு | கண்காணிக்கும் நிறுவனம் | ஒதுக்கீடு |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | அரச செயற்பாட்டாளர்கள் | அரச சார்பற்ற செயற்பாட்டாளர்கள் | | | |
| **2.7** பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் சமீபத்திய பட்டதாரிகளை தேசிய பல்கலைக்கழகங்களிலிருந்தான மூன்று மாத உள்ளகப் பயிற்சியில் இணைத்து அவர்களுக்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் (HRCSL இன்)பணிகள் குறித்து ஒரு வாரகால தீவிர பயிற்சி வழங்கும் அதேநேரம் அவர்களின் திறன்களைப் பயன்படுத்தி விழிப்புணர்வை ஏற்படுத்த தெரிவு செய்தல்.[17] | இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவால் விழிப்புணர்வு மேற்கொள்ளப்பட்ட மாவட்டங்களின் எண்ணிக்கை | இலங்கை மனித உரிமை ஆணைக்குழு | இலங்கை மனித உரிமை ஆணைக்குழு | சட்டம் கற்பிக்கின்ற அரச நிறுவனங்கள் | இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் பிராந்திய அலுவலகத்தில் உள்ள சிவில் சமூக அமைப்புகளின் ஒருங்கிணைப்புக் குழு.<br><br>ஆய்வு நிறுவனங்கள் | ஜனவரி 2023 – ஓகஸ்ட் 2027 | பெண்கள், சிறுவர் விவகாரம் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு | TBC |
| **2.8** அனைத்துப் பொலிஸ் நிலையங்களிலும் இரு மொழியிலான சேவை வழங்கலுக்கான[18] இயலளவை உறுதிப்படுத்தல். | இரண்டு தேசிய மொழிகளிலும் பதிலளிக்கக்கூடிய மற்றும் முறைப்பாடுகளைப் பதிவு செய்யக்கூடிய பொலிஸ் நிலையங்களின் எண்ணிக்கை | தேசிய பொலிஸ் ஆணைக்குழு<br><br>பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு<br><br>பொதுநிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு<br><br>இலங்கை பொலிஸ் | இலங்கை பொலிஸ் | இலங்கை பொலிஸ் கல்லூரி<br><br>இலங்கை மனித உரிமை ஆணைக்குழு | ஆய்வு நிறுவனங்கள் | ஜனவரி 2023 – ஓகஸ்ட் 2027 | தேசிய பொலிஸ் ஆணைக்குழு<br><br>பெண்கள், சிறுவர் விவகாரம் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு | TBC |

18 ஆலோசனையில் கலந்துகொண்ட பங்குதாரர்கள், தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களிலிருந்து இந்த உத்தியோகத்தர்களைப் பணிக்கமர்த்துவதன் அவசியத்தைக் குறிப்பிட்டனர்.

| பிரதான செயற்பாடுகள் | குறிகாட்டிகள் | சரிபார்க்கும் வழிகள் | நடைமுறைப் படுத்தும் பிரதான நிறுவனங்கள் | உதவி நிறுவனங்கள் | | கால அளவு | கண்காணிக்கும் நிறுவனம் | ஒதுக்கீடு |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | அரச செயற்பாட்டாளர்கள் | அரச சார்பற்ற செயற்பாட்டாளர்கள் | | | |
| **2.9** சைகை மொழியில் உரையாடும் பொலிஸ் உத்தியோகத்தர்களை நியமித்தல் / தேர்ந்தெடுக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு சைகை மொழிப் பயிற்சிகளை வழங்குதல். | நியமிக்கப்பட்ட அல்லது / மற்றும் பயிற்றுவிக்கப்பட்ட சைகை மொழியில் உரையாடக்கூடிய பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை<br>வழங்கப்பட்ட சைகை மொழிப் பயிற்சிகளின் எண்ணிக்கை | பொதுச் சேவை ஆணைக்குழு<br><br>பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு<br><br>பொதுநிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு<br><br>இலங்கை பொலிஸ் | இலங்கை பொலிஸ் | இலங்கை பொலிஸ் கல்லூரி<br><br>இயலாமையை உடையவர்களுக்கான (PWDs) தேசிய பேரவை மற்றும் தேசிய செயலகம்<br><br>இலங்கை மனித உரிமை ஆணைக்குழு<br><br>சமூக சேவைகள் திணைக்களம் | CSOs<br><br>ஆய்வு நிறுவனங்கள் | ஜனவரி 2023 – ஓகஸ்ட் 2027 | பொதுச் சேவை ஆணைக்குழு<br><br>பெண்கள், சிறுவர் விவகாரம் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு | TBC |
| **2.10** பொலிஸ் மற்றும் முப்படையில் ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வுகளில் பால்நிலை சமத்துவத்தை உறுதிசெய்தல். | ஆண்டுதோறும் முப்படையில் சேர்க்கப்படுகின்ற ஆண்கள் மற்றும் பெண்களின் எண்ணிக்கை<br><br>ஆண்டுதோறும் உயர் பதவிகளுக்குப் பதவி உயர்த்தப்படும் ஆண்கள் மற்றும் பெண்களின் எண்ணிக்கை<br><br>பால்நிலை தரம்பிரிக்கப்பட்ட அதிகாரிகளின் எண்ணிக்கை பதிவுகளுடன் பொதுவில் கிடைக்கும் அறிக்கைகளின் எண்ணிக்கை<br><br>நியமிக்கப்பட்ட பெண் உத்தியோகத்தர்களின் சதவிகிதம்<br><br>பதவி உயர்வு வழங்கப்பட்ட பெண் உத்தியோகத்தர்களின் சதவிகிதம் | பாதுகாப்பு அமைச்சு<br><br>பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு | பாதுகாப்பு அமைச்சு<br><br>பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு | பொருத்தமற்றது | பொருத்தமற்றது | ஜனவரி 2023 – நீண்ட காலம் | பாதுகாப்பு அமைச்சு | TBC |

| பிரதான செயற்பாடுகள் | குறிகாட்டிகள் | சரிபார்க்கும் வழிகள் | நடைமுறைப் படுத்தும் பிரதான நிறுவனங்கள் | உதவி நிறுவனங்கள் | | கால அளவு | கண்காணிக்கும் நிறுவனம் | ஒதுக்கீடு |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | அரச செயற்பாட்டாளர்கள் | அரச சார்பற்ற செயற்பாட்டாளர்கள் | | | |
| **2.11** ஓம்புட்ஸ்மேன் மூலமான முறைப்பாடளித்தல் பொறிமுறையை வலுப்படுத்துதல் மற்றும் ஓம்புட்ஸ்மேனால் வழங்கப்பட்ட சேவைகளை எவ்வாறு அணுகுவது என்பது குறித்துப் பெண்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துதல் | ஓம்புட்ஸ்மனால் பெறப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை<br><br>பெண்களுக்காக நடாத்தப்பட்ட விழிப்புணர்வை அதிகரிக்கும் பிரச்சாரங்கள் / பயிற்சிநெறிகளின் எண்ணிக்கை | ஓம்புட்ஸ்மேன் (நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர்) அலுவலகம் | ஓம்புட்ஸ்மேன் (நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர்) அலுவலகம் | ஜனாதிபதி செயலகம் | CSOs<br><br>ஐ.நா நிறுவனங்கள் | ஜனவரி 2023 – ஒகஸ்ட் 2024 | ஜனாதிபதி செயலகம் | TBC |

| பிரதான செயற்பாடுகள் | குறிகாட்டிகள் | சரிபார்க்கும் வழிகள் | நடைமுறைப் படுத்தும் பிரதான நிறுவனங்கள் | உதவி நிறுவனங்கள் | | கால அளவு | கண்காணிக்கும் நிறுவனம் | ஒதுக்கீடு |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | அரச செயற்பாட்டாளர்கள் | அரச சார்பற்ற செயற்பாட்டாளர்கள் | | | |
| **2.12** அனைத்துப் பொலிஸ் நிலையங்களிலும் பெண் பொலிஸ் உத்தியோகத்தர்கள் போதுமானளவு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதையும், பணிக்கு அமர்த்தப்படுவதையும் உறுதிசெய்து, அத்தகைய பெண் பொலிஸ் உத்தியோகத்தர்கள் சேவையில் தக்கவைக்கப்படுவதையும் பொலிஸ் துறையின் பதவியுயர்வு மற்றும் தீர்மானம் எடுக்கும் இயலளவு ஆகியவற்றில் சமமான வாய்ப்புகள் வழங்கப்படுவதையும் உறுதிசெய்தல். | பணிக்கமர்த்தப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை<br><br>ஒவ்வொரு பொலிஸ் நிலையத்திலும் தங்கவைக்கப்பட்டுள்ள பெண் பொலிஸ் உத்தியோகத்தர்களின் சதவீதம்<br><br>பொலிஸ் பிரிவின் முதல் 3 அதிகாரப்பூர்வ பதவிகளில் பணியாற்றும் பெண் பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை.<br><br>2023 மற்றும் 2027 க்கு இடையில் பணியமர்த்தப்பட்ட பெண் பொலிசாரின் எண்ணிக்கையைக் கண்டறிய நடத்தப்பட்ட வருடாந்த ஆய்வுகளின் எண்ணிக்கை<br><br>5, 10, 15, 20, 25 ஆண்டுகளுக்கும் மேலாகப் பணியில் இருக்கும் பெண் பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையைக் கண்டறிய நடாத்தப்பட்ட கணக்கெடுப்புகளின் எண்ணிக்கை. | இலங்கை தேசிய பொலிஸ் ஆணைக்குழு<br><br>இலங்கை பொலிஸ் | பொதுச்சேவை ஆணைக்குழு<br><br>இலங்கை தேசிய பொலிஸ் ஆணைக்குழு<br><br>இலங்கை பொலிஸ் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு | பொதுச்சேவை ஆணைக்குழு<br><br>இலங்கை பொலிஸ் கல்லூரி<br><br>நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீமைப்பு அமைச்சு மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு | ஆய்வு நிறுவனங்கள் | ஜனவரி 2023 – ஒகஸ்ட் 2027 | இலங்கை தேசிய பொலிஸ் ஆணைக்குழு<br><br>பெண்கள், சிறுவர் விவகாரம் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு | TBC |

| பிரதான செயற்பாடுகள் | குறிகாட்டிகள் | சரிபார்க்கும் வழிகள் | நடைமுறைப் படுத்தும் பிரதான நிறுவனங்கள் | உதவி நிறுவனங்கள் | | கால அளவு | கண்காணிக்கும் நிறுவனம் | ஒதுக்கீடு |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | அரச செயற்பாட்டாளர்கள் | அரச சார்பற்ற செயற்பாட்டாளர்கள் | | | |
| **2.13** முன்பள்ளிக் கல்வி உட்பட - சிவில் பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் மேற்பார்வை மற்றும்/ அல்லது கல்வி நிர்வாகத்திற்கு இடையே உள்ள ஆணைகளின் தற்போதைய பிரிவை அமுலாக்கல்.[19] | முன்னர் மோதலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வியை சீரமைப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் எண்ணிக்கை | கல்வி அமைச்சு | கல்வி அமைச்சு | சிவில் பாதுகாப்பு திணைக்களம்<br><br>பாதுகாப்பு அமைச்சு<br><br>மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம் | CSOs | ஜனவரி 2023 – ஓகஸ்ட் 2023 | கல்வி அமைச்சு<br><br>பெண்கள், சிறுவர் விவகாரம் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு | TBC |
| **2.14** பெண்கள் மற்றும் இன-மத சிறுபான்மையினர் மதிக்கப்படுகின்ற நெறிமுறையான அறிக்கையிடலை உறுதி செய்வதற்கான அறிவுறுத்தல்களுடன் ஐக்கிய நாடுகள்வின் ரபாத் திட்டம் போன்ற சர்வதேச தரநிலைகள் மற்றும் பகுதி 1 இன் பிரிவு 10 (1) 1981ஆம் ஆண்டு அக்டோபர் 14ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி இல: 162/5A போன்ற தேசிய தரநிலைகளுக்கு ஏற்ப ஊடகவியலாளர்களுக்கான நடத்தை கோவையை அறிமுகப்படுத்துதல்.[20,21] | விருத்தி செய்யப்பட்டுப் பின்பற்றப்பட்ட நடத்தை நெறிமுறைகளின் எண்ணிக்கை | வெகுசன ஊடக அமைச்சு | வெகுசன ஊடக அமைச்சு | மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு<br><br>வெகுசன ஊடக, உயர்கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்<br><br>தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை | ஐ.நா நிறுவனங்கள்<br><br>ஆய்வு நிறுவனங்கள்<br><br>ஊடக நிறுவனங்கள் | ஜனவரி 2023 – நீண்ட காலம் | வெகுசன ஊடக அமைச்சு | TBC |

19 இது சமுதாயங்களின் முக்கிய பிரச்சினையாக இருப்பதாக கலந்தாலோசனைகள் சுட்டிக்காட்டின.

20 இந்த விதி பின்வருமாறு கூறுகிறது: ‘ஒரு பத்திரிகையாளர் சமுதாய அல்லது மத முரண்பாடு அல்லது வன்முறையை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் எந்தவொரு விடயத்தையும் அறிக்கையிடவோ அல்லது அச்சிடவோ அல்லது வெளியிடவோ கூடாது.

21 ஊடக அறிக்கையிடல் பெரும்பாலும் பெண்கள் அல்லது சிறுபான்மை/இன-மத சமூகங்களின் நபர்கள்மீது கவனம் செலுத்துவதுடன், மற்றும்/அல்லது தனியுரிமை மீறல் போன்றவற்றை வெளிப்படுத்துகிறது என்று கலந்தாலோசனைகள் சுட்டிக்காட்டுகின்றன.

| பிரதான செயற்பாடுகள் | குறிகாட்டிகள் | சரிபார்க்கும் வழிகள் | நடைமுறைப் படுத்தும் பிரதான நிறுவனங்கள் | உதவி நிறுவனங்கள் | | கால அளவு | கண்காணிக்கும் நிறுவனம் | ஒதுக்கீடு |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | அரச செயற்பாட்டாளர்கள் | அரச சார்பற்ற செயற்பாட்டாளர்கள் | | | |
| **2.15**<br>அனைத்துப் பொது உத்தியோகத்தர்களுக்குமான அறிமுக நிகழ்வுகளில் பால்நிலை தொடர்பான ஒரு கற்றல் தொகுதியை உள்ளடக்கி, WPS நிகழ்ச்சிநிரலின் அம்சங்களைச் சுற்றியதான உள்ளகப் பரப்புரைப் பிரச்சாரங்களை விருத்தி செய்தல். | அரச உத்தியோகத்தர்களுக்கான பால்நிலை உணர்திறன் பயிற்சிகளின் எண்ணிக்கை இதுபோன்ற நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும் பால்நிலை ரீதியாகத் தரம்பிரிக்கப்பட்ட அரச உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை<br><br>பால்நிலை சார்பு குறித்து அரச உத்தியோகத்தர்களுடன் நடாத்தப்பட்ட மதிப்பீடுகளின் எண்ணிக்கை<br>திட்டத்தில் கலந்து கொண்ட 6 மாதங்களுக்குப் பிறகு அரசு உத்தியோகத்தர்களுடன் நடாத்தப்பட்ட மதிப்பீடுகளின் எண்ணிக்கை | பெண்கள், சிறுவர் விவகாரம் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு | நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு<br><br>பொதுநிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு<br><br>பொதுச்சேவை ஆணைக்குழு | இலங்கை<br><br>பெண்கள், சிறுவர் விவகாரம் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு<br><br>SLIDA | ஐக்கிய நாடுகள் நிறுவனங்கள் | மே 2023 – ஓகஸ்ட் 2023 | பெண்கள், சிறுவர் விவகாரம் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு | TBC |

## கருப்பொருள் முன்னுரிமை 02:

# பெண்களால் அனுபவிக்கப்பட்ட இடப்பெயர்வின் தாக்கத்தை நிவர்த்தி செய்தல்

**மூலோபாயக் குறிக்கோள்கள்:**

1. தற்போதுள்ள கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கு ஆதரவளித்தல்
2. உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்கள் / அகதிகளாக மீளத் திரும்பி வருபவர்களின் தொடர்ச்சியான தேவைகளுக்கு பால்நிலை உணர்திறன் கொண்ட ஆணையுடன் பதிலளித்தல்
3. இடர் முகாமைத்துவத்தில் பெண்களின் பிரச்சினைகளுக்கான பால்நிலை உணர்திறனை மேம்படுத்துதல் மற்றும் அதிகரித்தல்
4. பெண்களை மையமாகக்கொண்டு மோதலால் பாதிக்கப்பட்ட நபர்கள் தொடர்பாக உணர்திறனை வலுப்படுத்தல்.

இலக்குப் பகுதி

# 03

**மோதல் தொடர்பான இடப்பெயர்வினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான சேவை வழங்கல்[22]**

| விளைவு: | பொறுப்பான நிறுவனம் / உத்தியோகத்தர் |
|---|---|
| மோதலால் பாதிக்கப்பட்டு இடப்பெயர்விற்கு ஆளான பெண்களுக்கு பால்நிலை உணர்திறனுள்ள, அரசால் வழங்கப்படுகின்ற உளநல-சமூக சேவைகள் மற்றும் நிலையான தீர்வுகள் கிடைத்தல் | • முகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்-துகை அமைச்சு |

| பிரதான செயற்பாடுகள் | குறிகாட்டிகள் | சரிபார்க்கும் வழிகள் | நடைமுறைப் படுத்தும் பிரதான நிறுவனங்கள் | உதவி நிறுவனங்கள் | | கால அளவு | கண்காணிக்கும் நிறுவனம் | ஒதுக்கீடு |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | அரச செயற்பாட்டாளர்கள் | அரச சார்பற்ற செயற்பாட்டாளர்கள் | | | |
| **3.1** பால்நிலையை உள்ளடக்கிய முறையில் மோதல் பாதிப்பால் ஏற்பட்ட இடப்பெயர்வுக்கான[23] நீடித்த தீர்வுகள் குறித்த தேசியக் கொள்கையை அமுல்படுத்துதல். | மோதல் பாதிப்பால் ஏற்பட்ட இடப்பெயர்வுகளுக்கான நீடித்த தீர்வுகள் குறித்த தேசியக் கொள்கையை முழுமையாக அமுல்படுத்துதல் | பொதுநிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள் மற்றும் உள்ளுராட்சி அமைச்சு | தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலகம் | நிதி மற்றும் பொருளாதார உறுதிப்பாடு தேசிய கொள்கைகள் அமைச்சு<br><br>சுற்றுலா மற்றும் காணி அமைச்சு | ஐக்கிய நாடுகள் நிறுவனங்கள் | பெப்ரவரி 2023 – ஓகஸ்ட் 2023 | நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு | TBC |

22 தேசிய செயற்திட்டத்தின் சூழலில், மோதலுடன் தொடர்புடைய இடப்பெயர்வு அகதிகள், உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்கள் மற்றும் அகதிகளாக மீளத்திரும்பியவர்களை உள்ளடக்குகின்றது.

23 மோதலால் பாதிக்கப்பட்ட இடப்பெயர்விற்கான நீடித்த தீர்வுகள் குறித்த தேசியக் கொள்கை என்பது நன்கு கருதப்பட்ட கொள்கையாகும், இது மோதல் தொடர்பான இடப்பெயர்வுடன் தொடர்புடைய அனைத்துப் பிரச்சினைகளுக்கும் திறம்படப் பதிலளிக்கும் திறன் கொண்டது. எனவே, இந்தக் கொள்கையின்கீழ் மேற்கொள்ளப்பட்ட அர்ப்பணிப்புக்கள் இந்த NAP இல் மீண்டும் உருவாக்கப்படவில்லை.

| பிரதான செயற்பாடுகள் | குறிகாட்டிகள் | சரிபார்க்கும் வழிகள் | நடைமுறைப் படுத்தும் பிரதான நிறுவனங்கள் | உதவி நிறுவனங்கள் | | கால அளவு | கண்காணிக்கும் நிறுவனம் | ஒதுக்கீடு |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | அரச செயற்பாட்டாளர்கள் | அரச சார்பற்ற செயற்பாட்டாளர்கள் | | | |
| **3.2** மோதலுடன் தொடர்புடைய இடம்பெயர்வுகளால் பாதிக்கப்பட்ட பெண்களிடையே அவர்களின் தற்போதைய மற்றும் தொடர்ச்சியான உள-சமூகத் தேவைகளை மதிப்பிடுவதற்காக ஆண்டு ரீதியாக மதிப்பீடுகளை நடாத்துதல். | மோதல் காரணமாக இடம்பெயர்ந்த பெண்களின் உள-சமூகத் தேவைகளை மதிப்பிடுவதற்கு நடாத்தப்பட்ட கணக்கெடுப்புகளின் எண்ணிக்கை<br><br>தொடர்ச்சியான மற்றும் தற்போது இருக்கும் உள-சமூகத் தேவைகளை மதிப்பிடுவதற்கான கணக்கெடுப்பில் பங்கேற்ற பெண்களின் எண்ணிக்கை<br><br>கணக்கெடுப்புக்களைத் தொடர்ந்து உள-சமூக சேவைகள் / உதவியை நாடும் பெண்களின் எண்ணிக்கை. | சுகாதார அமைச்சு | பணிப்பாளர் - உளநல சுகாதாரப் பணிமனை, சுகாதார அமைச்சு | பிரதேச செயலகங்கள்<br><br>பெண்கள், சிறுவர் விவகாரம் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் சிறுவர் மற்றும் பெண்கள் அபிவிருத்தி பிரிவின் உள-சமூக உத்தியோகத்தர்கள் மற்றும் பெண்கள் அபிவிருத்தி கள உத்தியோகத்தர்கள் | ஐக்கிய நாடுகள் நிறுவனங்கள்<br><br>ஆய்வு நிறுவனங்கள் | பெப்ரவரி 2023 – ஒகஸ்ட் 2027 | சுகாதார அமைச்சு<br><br>பெண்கள், சிறுவர் விவகாரம் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு | TBC |

| பிரதான செயற்பாடுகள் | குறிகாட்டிகள் | சரிபார்க்கும் வழிகள் | நடைமுறைப் படுத்தும் பிரதான நிறுவனங்கள் | உதவி நிறுவனங்கள் | | கால அளவு | கண்காணிக்கும் நிறுவனம் | ஒதுக்கீடு |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | அரச செயற்பாட்டாளர்கள் | அரச சார்பற்ற செயற்பாட்டாளர்கள் | | | |
| **3.3** மோதல் தொடர்பான இடப்பெயர்வால் பாதிக்கப்பட்ட பெண்களின் வாழ்வாதாரத் திறன்கள் மற்றும் தேவைகளை மதிப்பிடுதல் மற்றும் வாழ்வாதாரத்தை அணுகுவதற்கான ஆதரவை வழங்குதல். | இடப்பெயர்வால் பாதிக்கப்பட்ட பெண்கள் மத்தியில் வாழ்வாதாரத்தை உருவாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற பெண்களின் திறன்கள், விருப்பம், உடல் மற்றும் உள ஆரோக்கியத்தின் அளவைக் கண்டறிவதற்காக மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகளின் எண்ணிக்கை<br><br>மதிப்பீட்டிற்கு ஏற்றவாறு வாழ்வாதாரத்தை உருவாக்க பெண்களின் திறன்களை விருத்தி செய்வதற்காக நடாத்தப்படும் பயிற்சிநெறிகளின் எண்ணிக்கை | பெண்கள், சிறுவர் விவகாரம் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு | பெண்கள், சிறுவர் விவகாரம் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு | இலங்கை பெண்கள் பணியகம்<br><br>பிரதேச செயலகங்கள்<br><br>மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் | ஐக்கிய நாடுகள் நிறுவனங்கள | பெப்ரவரி 2023 – நவம்பர் 2024 | பெண்கள், சிறுவர் விவகாரம் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு | TBC |

| பிரதான செயற்பாடுகள் | குறிகாட்டிகள் | சரிபார்க்கும் வழிகள் | நடைமுறைப் படுத்தும் பிரதான நிறுவனங்கள் | உதவி நிறுவனங்கள் | | கால அளவு | கண்காணிக்கும் நிறுவனம் | ஒதுக்கீடு |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | அரச செயற்பாட்டாளர்கள் | அரச சார்பற்ற செயற்பாட்டாளர்கள் | | | |
| **3.4** பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் தகவல் உதவிச் சேவையை (மும்மொழி மற்றும் சைகை மொழிச் சேவைகள் வழங்கப்படும்) நிறுவுவதுடன் பிறப்புச் சான்றிதழ்கள், குடியுரிமைச் சான்றிதழைப் பெறுவதற்குப் பின்பற்றபட வேண்டிய பொருத்தமான நிர்வாகச் செயன்முறைகளைத் தெரிவிப்பதன் மூலம் அகதிகளாக மீளத் திரும்பியவர்களுக்கு ஆதரவளிக்கும் வகையில் தலைமைக் குடிவரவு உத்தியோகத்தர் மற்றும் குடிவரவு உத்தியோகத்தர்களின் திறன்களை விருத்தி செய்தல்.[24] | விமான நிலையத்தில் நிறுவப்பட்ட தகவல் உதவிச் சேவைகளின் எண்ணிக்கை<br><br>தகவல் உதவிச் சேவையில் பணியமர்த்தப்பட்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை<br><br>வருடாந்தம் அகதிகளாக மீளத் திரும்பியவர்களின் எண்ணிக்கை<br><br>தகவல் உதவிச் சேவையிலிருந்து சேவைகளைப் பெறுகின்ற, அகதிகளாக மீளத் திரும்பியவர்களின் எண்ணிக்கை | குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம் | குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம் | பதிவாளர் திணைக்களத்தின் பிறப்பு பதிவுப் பிரிவு | ஐக்கிய நாடுகள் நிறுவனங்கள | ஜனவரி 2023 – நீண்ட காலம் | பொதுநிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு | LKR 119,000 |

24 கலந்தாலோசனைகளில் பங்கேற்பாளர்கள் குறிப்பாக குழந்தைகளுடன் திரும்பும் பெண் குடும்பத் தலைவர்களுக்கு ஆதரவாக இதனைச் செய்யவேண்டும் என்று முன்மொழிந்தனர்.

| பிரதான செயற்பாடுகள் | குறிகாட்டிகள் | சரிபார்க்கும் வழிகள் | நடைமுறைப் படுத்தும் பிரதான நிறுவனங்கள் | உதவி நிறுவனங்கள் | | கால அளவு | கண்காணிக்கும் நிறுவனம் | ஒதுக்கீடு |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | அரச செயற்பாட்டாளர்கள் | அரச சார்பற்ற செயற்பாட்டாளர்கள் | | | |
| **3.5** அகதிகளாக மீளத் திரும்பியவர்கள் தங்களது அகதிக் காலத்தில் ஏனைய நாடுகளில் பெற்றுள்ள கல்வி மற்றும் தொழில் தகைமைகளை, தரப்படுத்தப்பட்ட வழிகாட்டுதல்களை விருத்தி செய்வதன்மூலம் தகைமை மதிப்பீட்டினைத் தரப்படுத்தல்.[25] | பின்பற்றப்பட்ட கல்வி மற்றும் தொழில் தகைமைகளுக்கான தரப்படுத்தல் வழிகாட்டல்களின் எண்ணிக்கை<br><br>ஒவ்வோர் ஆண்டும் தரப்படுத்தப்பட்ட கல்வி மற்றும் / அல்லது தொழில் தகைமைகளைக் கொண்ட விண்ணப்பிக்கும் அகதிகளாக மீளத் திரும்பியவர்களின் எண்ணிக்கை | கல்வி அமைச்சு | கல்வி அமைச்சு | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு<br><br>பரீட்சைத் திணைக்களம் | ஐக்கிய நாடுகள் நிறுவனங்கள் | பெப்ரவரி 2023 – ஒக்ரோபர் 2024 | கல்வி அமைச்சு<br><br>பெண்கள், சிறுவர் விவகாரம் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு | TBC |

25 கலந்தாலோசனைகளில் கலந்துகொண்ட பங்கேற்பாளர்கள் எழுப்பிய பிரச்சினைகளுக்குப் பதிலளிக்கும் வகையில் இந்தச் செயற்பாடு சேர்க்கப்பட்டுள்ளது. இந்தியாவில் மற்றும் பிற நாடுகளில் அகதிகள் பெற்ற தகுதிகள் இலங்கையில் உள்ள தகுதிகளுக்குச் சமமானதா என்பதை மதிப்பீடு செய்ய இலங்கையில் எந்த வழிமுறையும் இல்லை என்று சில பங்கேற்பாளர்கள் குறிப்பிட்டனர். இது அகதிகளாக மீளத் திரும்பி வரும் சிலருக்கான வேலைவாய்ப்பு மற்றும் / அல்லது திரும்பியவுடன் அவர்களின் கல்வியைத் தொடரக்கூடிய திறனைப் பாதிக்கும் என்று கருதப்பட்டது. எனவே, இலங்கைத் தகுதிகளுடன் ஒப்பிடுகையில் அத்தகைய தகுதிகள் எங்கு உள்ளன என்பதைக் கண்டறியும் வகையில் தகுதி மதிப்பீட்டின் தரப்படுத்தல் இருக்கவேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

26 "கல்விக்கான இரண்டாம் வாய்ப்பு" என்ற சொல் குறிப்பாக கலந்தாலோசனைகளின்போது பரிந்துரைக்கப்பட்டது. இடப்பெயர்வு மற்றும்/அல்லது மோதலால் பாதிக்கப்படுவதால் கல்வியைத் துறக்கவேண்டிய பெண்களுக்குக் கல்வியில் இரண்டாவது வாய்ப்பு வழங்கப்படவேண்டும் என்பது வாதமாகும்.

| பிரதான செயற்பாடுகள் | குறிகாட்டிகள் | சரிபார்க்கும் வழிகள் | நடைமுறைப் படுத்தும் பிரதான நிறுவனங்கள் | உதவி நிறுவனங்கள் | | கால அளவு | கண்காணிக்கும் நிறுவனம் | ஒதுக்கீடு |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | அரச செயற்பாட்டாளர்கள் | அரச சார்பற்ற செயற்பாட்டாளர்கள் | | | |
| **3.6**<br>பெண் பிள்ளைகளின் கல்விக்கு விசேட முக்கியத்துவம் மற்றும் பெண்களுக்கு கல்விக்கான இரண்டாம் வாய்ப்பு[26] ஆகியவற்றுடன் மோதல் தொடர்பான இடப்பெயர்வுகளால் பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளுக்குக் கல்வி வசதிகளை வழங்குதல். | கல்வி வசதிகளை அணுகும் மோதல் தொடர்பான இடப்பெயர்வுகளால் பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளின் எண்ணிக்கை<br><br>கல்விக்கான இரண்டாம் வாய்ப்பை அணுகும் மோதல் தொடர்பான இடப்பெயர்வுகளால் பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளின் எண்ணிக்கை | தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலகம் | கல்வி அமைச்சு | பெண்கள், சிறுவர் விவகாரம் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு | ஐக்கிய நாடுகள் நிறுவனங்கள் | பெப்ரவரி 2022 – நீண்ட காலம் | நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு<br>கல்வி அமைச்சு<br><br>பெண்கள், சிறுவர் விவகாரம் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு | TBC |
| **7.2**<br>நுண்கடன் வழங்கும் அரச சார்பற்ற நிறுவனங்கள் உட்பட நுண்நிதி நிறுவனங்களால் பேணப்படும் தற்போதைய கடன் வட்டி விகிதங்கள் மற்றும் போட்டி விகிதத்தில் கடன்களை அணுகும் பெண்களின் திறன் குறித்த அறிக்கையைத் தொகுத்தல். | அரையாண்டிற்கு ஒருமுறை வெவ்வேறு நிறுவனங்களால் பேணப்படும் வட்டி விகிதங்கள் குறித்துத் தொகுக்கப்பட்ட அறிக்கைகளின் எண்ணிக்கை | பணிப்பாளர் - இலங்கை மத்திய வங்கி (CBSL) - வங்கி சாரா நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம் | நிதி அமைச்சு பொருளாதாரக் கொள்கை மற்றும் திட்ட அமுலாக்க அமைச்சு | CBSL<br><br>பணிப்பாளர் - CBSL வங்கி சாரா நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம்<br><br>அரச சார்பற்ற நிறுவனங்களின் செயலகம் | சர்வோதயம் | ஜனவரி 2023 – ஒக்ரோபர் 2024 | நிதி அமைச்சு பொருளாதார கொள்கை மற்றும் திட்ட அமுலாக்க அமைச்சு<br><br>முகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை | TBC |
| **7.3**<br>தற்போது உருவாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற நுண் நிதி மற்றும் கடன் ஒழுங்குபடுத்தும் சட்டமூலத்தைப் பின்பற்றலும் அமுலாக்கலும். | வெளியிடப்பட்ட மற்றும் அமுலாக்கப்பட்ட தொடர்புடைய சட்டங்களின் எண்ணிக்கை<br><br>புதிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளின் கீழ் பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை அனைத்து நிலைகளிலுமுள்ள அரச உத்தியோகத்தர்களை உணர்வூட்ட நடாத்தப்பட்ட அமர்வுகளின் எண்ணிக்கை (சட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டதும்) | நிதி அமைச்சு | நிதி அமைச்சு | நிதி அமைச்சு<br><br>பொருளாதாரக் கொள்கை மற்றும் திட்ட அமுலாக்க அமைச்சு<br><br>CBSL<br><br>முகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு | சர்வோதயம் | ஜனவரி 2023 – ஒக்ரோபர் 2024 | நிதி அமைச்சு<br><br>முகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு | TBC |

| பிரதான செயற்பாடுகள் | குறிகாட்டிகள் | சரிபார்க்கும் வழிகள் | நடைமுறைப் படுத்தும் பிரதான நிறுவனங்கள் | உதவி நிறுவனங்கள் | | கால அளவு | கண்காணிக்கும் நிறுவனம் | ஒதுக்கீடு |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | அரச செயற்பாட்டாளர்கள் | அரச சார்பற்ற செயற்பாட்டாளர்கள் | | | |
| **7.4**<br>கள மட்டத்தில் உள்ள பெண்களுக்கு அறிவூட்டுவதற்காக மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு நிதி முகாமைத்துவம் குறித்து பயிற்சியாளர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தை நடாத்துதல். | நடத்தப்பட்ட பயிற்சித் திட்டங்களின் எண்ணிக்கை<br>பயிற்சி பெற்ற WDOஇன் எண்ணிக்கை<br>கள மட்டத்தில் பயிற்சி பெற்ற WDOஆல் நடத்தப்படும் பயிற்சிகளின் எண்ணிக்கை | நிதி அமைச்சு<br><br>பொருளாதாரக் கொள்கை மற்றும் திட்ட அமுலாக்க அமைச்சு | நிதி அமைச்சு பொருளாதாரக் கொள்கை மற்றும் திட்ட அமுலாக்க அமைச்சு<br><br>சமுர்த்தி, வீட்டுப் பொருளாதார, நுண்நிதி, சுயதொழில் மற்றும் வியாபார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு<br><br>சமுர்த்தி திணைக்களம் | முகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு | பெண்களின் கைத்தொழில் மற்றும் வர்த்தக சங்கம்<br><br>Centre for Poverty Analysis (CEPA)<br><br>கிராமிய அபிவிருத்தி நிதியம் | ஜனவரி 2023 – நீண்ட காலம் | நிதி அமைச்சு பொருளாதாரக் கொள்கை மற்றும் திட்ட அமுலாக்க அமைச்சு | TBC |

| பிரதான செயற்பாடுகள் | குறிகாட்டிகள் | சரிபார்க்கும் வழிகள் | நடைமுறைப் படுத்தும் பிரதான நிறுவனங்கள் | உதவி நிறுவனங்கள் | | கால அளவு | கண்காணிக்கும் நிறுவனம் | ஒதுக்கீடு |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | அரச செயற்பாட்டாளர்கள் | அரச சார்பற்ற செயற்பாட்டாளர்கள் | | | |
| **7.5**<br>அனைத்து மாவட்டங்களிலும் பெண்களின் நிதியியல் முகாமைத்துவ மற்றும் நிதியியல் அறிவை மேம்படுத்தலும், கிராம மட்டத்தில் பெண்களுக்கு விழிப்புணர்வு மற்றும் நிதி முகாமைத்துவத் திறன் விருத்திப் பிரசாரங்களை நடாத்துதலும். | நடத்தப்பட்ட கள மட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை<br><br>அத்தகைய நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும் பெண்களின் எண்ணிக்கை<br>நுண்கடன் பெறும் பெண்களின் சதவீத குறைவு<br>மாவட்ட வாரியாகத் தரம் பிரிக்கப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி முகாமைத்திறன் கொண்ட பெண்களின் எண்ணிக்கை<br>“அதிக கடன்பட்டவர்கள்“ என வகைப்படுத்தப்படாத பெண்கள் மற்றும் குடும்பங்களின் சதவீதம் (8.1 இல் கணக்கெடுப்பின் அடிப்படையில் மதிப்பிடப்பட்டது)[44] | முகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு<br><br>நிதி அமைச்சு<br><br>பொருளாதாரக் கொள்கை மற்றும் திட்ட அமுலாக்க அமைச்சு | பணிப்பாளர்-இலங்கை மத்திய வங்கியின் தொடர்பாடல் திணைக்களம்<br><br>பிராந்திய அபிவிருத்திக்கான திணைக்களம்-இலங்கை மத்திய வங்கி | நிதி அமைச்சு<br><br>பொருளாதார கொள்கை மற்றும் திட்ட அமுலாக்க அமைச்சு<br><br>முகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு<br><br>வங்கிக் கற்கைகளுக்கான நிலையம், இலங்கை மத்திய வங்கி | பெண்களின் கைத்தொழில் மற்றும் வர்த்தக சங்கம்<br><br>UN Women<br><br>UNDP<br><br>FAO | பெப்ரவரி 2023 – நீண்ட காலம் | நிதி அமைச்சு பொருளாதார கொள்கை மற்றும் திட்ட அமுலாக்க அமைச்சு<br><br>முகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு | TBC |

44 கண்காணிப்புக் கட்டமைப்பின் ஒரு பகுதியாக அளவீட்டு திட்டம் (குறைந்த கடன், நடுத்தர அளவிலான கடன் மற்றும் அதிக கடன்) உருவாக்கப்பட வேண்டும்.

| பிரதான செயற்பாடுகள் | குறிகாட்டிகள் | சரிபார்க்கும் வழிகள் | நடைமுறைப் படுத்தும் பிரதான நிறுவனங்கள் | உதவி நிறுவனங்கள் | | கால அளவு | கண்காணிக்கும் நிறுவனம் | ஒதுக்கீடு |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | அரச செயற்பாட்டாளர்கள் | அரச சார்பற்ற செயற்பாட்டாளர்கள் | | | |
| **7.6** மும்மொழி ஊடகப் பிரச்சாரத்தின் மூலமாக நுண்-கடன் நிறுவனங்களின் சாத்தியமான நன்மைகள் மற்றும் தீமைகள் மற்றும் பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்களைச் சுட்டிக்காட்டி நுண்கடன் தொடர்பான தகவலறிந்த முடிவுகளை எடுப்பது, பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல். | தொலைக்காட்சி, செய்தித்தாள், வானொலி, சமூக ஊடகங்கள் மற்றும் சமூக அளவிலான குழுக்களின் மூலம் நடாத்தப்பட்ட ஊடகப் பிரச்சாரங்களின் எண்ணிக்கை சென்றடைந்த நபர்களின் எண்ணிக்கை (மொழிமூலத்தால் தரம்பிரிக்கப்பட்ட) | வெகுசன ஊடக அமைச்சு பணிப்பாளர்- இலங்கை மத்திய வங்கியின் தொடர்பாடல் திணைக்களம் | நிதி அமைச்சு<br><br>பொருளாதாரக் கொள்கை மற்றும் திட்ட அமுலாக்க அமைச்சு<br><br>இலங்கை மத்திய வங்கி | மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு<br><br>மாவட்டச் செயலகங்கள்<br><br>பிரதேச செயலகங்கள் | கிராமிய அபிவிருத்தி நிதியம்<br><br>மேலும் பரிந்துரைக்கப்படுகிறது: கிராம பொருளாதார அபிவிருத்தி நிறுவனம் | பெப்ரவரி 2023 – நீண்ட காலம் | நிதி அமைச்சு<br><br>பொருளாதாரக் கொள்கை மற்றும் திட்ட அமுலாக்க அமைச்சு<br><br>மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு | TBC |

45 ஆவணங்களை ஆதரிப்பது, கடன் வழங்கும் செயல்முறையை எளிதாக்குதல், கிராமப்புறங்களில் உள்ள பெண்களுக்கான அணுகலை வலுப்படுத்துதல் ஆகியவற்றில் நெகிழ்வான கொள்கைகளைப் பின்பற்றுவதன்மூலம் இதனை மேற்கொள்ளலாம்.

| பிரதான செயற்பாடுகள் | குறிகாட்டிகள் | சரிபார்க்கும் வழிகள் | நடைமுறைப் படுத்தும் பிரதான நிறுவனங்கள் | உதவி நிறுவனங்கள் | | கால அளவு | கண்காணிக்கும் நிறுவனம் | ஒதுக்கீடு |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | அரச செயற்பாட்டாளர்கள் | அரச சார்பற்ற செயற்பாட்டாளர்கள் | | | |
| **7.7** முறைசார் நிறுவனங்கள் (உதா: வங்கிகள்) மூலம் கடன் வசதிகளுக்கான பெண்களின் அணுகலை வலுப்படுத்துதல்[45] | முறைசார் நிறுவனங்கள் மூலம் கடன் பெறும் பெண்களின் எண்ணிக்கை கடன் வசதிகள் மீதான கொள்கைகளை மாற்றியமைத்த முறைசார் கடன் நிறுவனங்களின் எண்ணிக்கை | நிதி அமைச்சு<br><br>பொருளாதாரக் கொள்கை மற்றும் திட்ட அமுலாக்க அமைச்சு<br><br>இலங்கை மத்திய வங்கி | நிதி அமைச்சு<br><br>பொருளாதாரக் கொள்கை மற்றும் திட்ட அமுலாக்க அமைச்சு<br><br>இலங்கை மத்திய வங்கி | முகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு<br><br>சமுர்த்தி, வீட்டுப் பொருளாதார, நுண்நிதி, சுயதொழில் மற்றும் வியாபார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு | UN Women | பெப்ரவரி 2023 – நீண்ட காலம் | நிதி அமைச்சு<br><br>பொருளாதாரக் கொள்கை மற்றும் திட்ட அமுலாக்க அமைச்சு<br><br>முகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு | TBC |
| **7.8** பெண்கள் குழுக்கள், கூட்டுறவுகள் மற்றும் முறைசாரா சமூகம் சார்ந்த பொருளாதார வளங்களில் பெண்களின் அணுகல் மற்றும் தலைமைத்துவத்தை வலுப்படுத்துதல் | பெண்கள் குழுக்கள், கூட்டுறவுகள் மற்றும் முறைசாரா சமூகம் சார்ந்த பொருளாதார வளங்களில் பெண்களின் அணுகல் மற்றும் தலைமைத்துவத்தை மேம்படுத்துவதற்காகப் பின்பற்றப்பட்ட பொறிமுறைகளின் எண்ணிக்கை. முறைசாரா சேமிப்புத் திட்டங்களை அணுகும் பெண்களின் எண்ணிக்கை (திட்டத்தின் வகை மற்றும் மாவட்டத்தின் அடிப்படையில் தரம்பிரிக்கப்பட்டுள்ளனர்) | முகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு | முகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு<br><br>சமுர்த்தி, வீட்டுப் பொருளாதார, நுண்நிதி, சுயதொழில் மற்றும் வியாபார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு | கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்<br><br>மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்கள் | சர்வோதயம்<br><br>UN Women<br><br>மேலும் பரிந்துரைக்கப்படுகிறது: அக்டெட் ரஜரட்ட பிரஜா கேந்திரய | யூன் 2022 – நீண்ட காலம் | முகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு | TBC |

## கருப்பொருள் முன்னுரிமை 06:

# சமாதானத்தைக் கட்டியெழுப்புதல், மோதல் தடுப்பு, மோதல் தீர்வு, தீர்மானம் மேற்கொள்ளல் மற்றும் அரசியலில் பெண்களின் பங்களிப்பை ஊக்குவித்தல்

**மூலோபாயக் குறிக்கோள்கள்:**

1. சமாதானத்தைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகள், மோதல் தடுப்பு மற்றும் மோதல் தீர்வு ஆகியவற்றை ஊக்குவித்து முன்னெடுத்தல்.
2. அனைத்து மட்ட ஆளுகைகளிலும் தீர்மானமெடுப்பவர்களாக அதிகமான பெண்களை ஈடுபடுத்துதல்.
3. பெண்களின் அரசியல் பங்கேற்பை அதிகரித்தல்.
4. சமாதானத்தைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகள், மோதல் தடுப்பு மற்றும் மோதல் தீர்வு நடவடிக்கைகளில் பெண்களை மிகவும் சமத்துவமாக ஈடுபடுத்துதல்.
5. கட்சிப் பிரதிநிதித்துவங்களில் பால்நிலை சமநிலையை அடைவதற்கு அரசியல் கட்சிகள் உறுதியளிப்பதனை ஊக்குவித்தல்.

இலக்குப் பகுதி

# 08

**இலங்கையின் சமூகங்களிடையே சமாதானத்தைக் கட்டியெழுப்புதல், சமாதானத்தைப் பேணுதல் மற்றும் நல்லிணக்கத்தை ஊக்குவித்தல்**

**விளைவு:**

சமாதானத்தைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகள், மோதல்-தடுப்பு மற்றும் மோதல் தீர்வு ஆகியவற்றில் பெண்களின் சமமான ஈடுபாடு மற்றும் ஆளுகை மற்றும் அரசியலின் தீர்மானமெடுக்கும் மட்டங்களில் பெண்களின் ஈடுபாட்டின்மூலம் இலங்கைச் சமூகத்தின் ஜனநாயக விழுமியங்களை மேம்படுத்துதல்

**பொறுப்பான நிறுவனம் / உத்தியோகத்தர்**

- முகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு
- நீதி அமைச்சு

| பிரதான செயற்பாடுகள் | குறிகாட்டிகள் | சரிபார்க்கும் வழிகள் | நடைமுறைப் படுத்தும் பிரதான நிறுவனங்கள் | உதவி நிறுவனங்கள் | | கால அளவு | கண்காணிக்கும் நிறுவனம் | ஒதுக்கீடு |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | அரச செயற்பாட்டாளர்கள் | அரச சார்பற்ற செயற்பாட்டாளர்கள் | | | |
| **8.1** குறிப்பாக சமுதாயங்களின் குடிப்பரம்பல் சமநிலை 70% ஐ விட அதிகரித்த பகுதிகளில், ஆனால் அவற்றிற்கு மட்டும் மட்டுப்படுத்தாமல், சமூக ஒற்றுமையை மேம்படுத்துவதற்காக சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் மற்றும் மோதல் தீர்வு ஆகியவற்றில் பெண்களின் அர்த்தமுள்ள பங்கேற்பை மையமாகக் கொண்ட பிரதேச அளவிலான சமாதானத்தைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல். | சமுதாயங்களுக்கிடையில் ஊடாட்டத்தை முன்னெடுப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட சமாதானத்தைக் கட்டியெழுப்பும் செயற்பாடுகளின் எண்ணிக்கை<br>அத்தகைய திட்டங்கள் நடத்தப்படும் பகுதிகளில் நடத்தப்பட்ட நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை<br>சமாதானத்தைக் கட்டியெழுப்பும் திட்டங்களில் கலந்துகொள்ளும் பெண்களின் எண்ணிக்கை<br>ஒவ்வொரு கிராம சேவைப் பிரிவிலும் ஸ்தாபிக்கப்பட்ட மக்கள் மையச் சபையினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பெண்களின் எண்ணிக்கை | ONUR | ONUR | முகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு<br>பொதுச்சேவை, மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சு<br>வெகுசன ஊடக அமைச்சு<br>பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு<br>உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சு | சமாதானத்தைக் கட்டியெழுப்பல் மற்றும் நல்லிணக்கத்திற்கான நிலையம்<br>NPC<br>AWAW<br>UN Women | ஜனவரி 2023 – நீண்ட காலம் | முகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு | TBC |

| பிரதான செயற்பாடுகள் | குறிகாட்டிகள் | சரிபார்க்கும் வழிகள் | நடைமுறைப் படுத்தும் பிரதான நிறுவனங்கள் | உதவி நிறுவனங்கள் | | கால அளவு | கண்காணிக்கும் நிறுவனம் | ஒதுக்கீடு |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | அரச செயற்பாட்டாளர்கள் | அரச சார்பற்ற செயற்பாட்டாளர்கள் | | | |
| **8.2**<br>சமாதானத்தைக் கட்டியெழுப்புதல், கூட்டுத் தலைமைத்துவம் மற்றும் சமூகங்களில் பெண்களின் ஈடுபாடு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு சமூகங்களுக்கிடையிலான உரையாடல்களை நடாத்துதல். | ஒவ்வொரு மாவட்டத்திலும் நடத்தப்பட்ட உரையாடல்களின் எண்ணிக்கை<br>உரையாடலில் பங்கேற்கும் பெண்களின் எண்ணிக்கை<br>சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் மற்றும் மோதலைத் தீர்ப்பதில் அதிகரித்த புரிதலுடன் உள்ள பங்கேற்பாளர்களின் சதவிகிதம்<br>உரையாடல்களின் முடிவுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் பின்தொடர் செயற்பாடுகளின் எண்ணிக்கை | முகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு | முகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு | முகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு<br><br>பெண்கள் பணியகம்<br><br>புத்தசாசன, சமய கலாசார அமைச்சு<br><br>பொதுச்சேவை, மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சு<br><br>மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்கள்<br><br>உள்ளூராட்சிச் சபைகள் | சமாதானத்தைக் கட்டியெழுப்பல் மற்றும் நல்லிணக்கத்திற்கான நிலையம்<br><br>UN Women | ஜனவரி 2023 – நீண்ட காலம் | முகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு | TBC |
| **8.3**<br>பெண் சமாதானத்தைக் கட்டியெழுப்பவர்களை ஆதரிப்பதில் குறிப்பிட்ட கவனம் செலுத்தி சமாதானத்தைக் கட்டியெழுப்புபவர்களின் வலையமைப்புகளை அபிவிருத்தி செய்யும் அதேசமயம் மேலதிக சமூக உரையாடல்களுக்காக மதங்களுக்கிடையான குழுக்கள் போன்ற தற்போதைய வலையமைப்புகளுடனான தொடர்புகளை வலுப்படுத்துதல். | விருத்தி செய்து அமுல்படுத்தப்பட்ட வலையமைப்பு நடவடிக்கைகளின் எண்ணிக்கை<br><br>வலையமைப்புகளால் கூட்டப்பட்ட கூட்டங்களின் எண்ணிக்கை<br><br>தற்போதுள்ள வலையமைப்புகள்/ குழுக்களுடன் இணைந்து நடாத்தப்பட்ட கூட்டு நடவடிக்கைகள் / கலந்துரையாடல்கள் | முகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு | முகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு | முகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு<br><br>மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்கள்<br><br>மதங்களுக்கிடையிலான குழுக்கள் | CEJ<br><br>சமாதானத்தைக் கட்டியெழுப்பல் மற்றும் நல்லிணக்கத்திற்கான நிலையம்<br><br>UN Women<br><br>UNICEF | ஜனவரி 2023 – நீண்ட காலம் | முகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு | TBC |

| பிரதான செயற்பாடுகள் | குறிகாட்டிகள் | சரிபார்க்கும் வழிகள் | நடைமுறைப் படுத்தும் பிரதான நிறுவனங்கள் | உதவி நிறுவனங்கள் | | கால அளவு | கண்காணிக்கும் நிறுவனம் | ஒதுக்கீடு |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | அரச செயற்பாட்டாளர்கள் | அரச சார்பற்ற செயற்பாட்டாளர்கள் | | | |
| **8.4** சூழ்நிலை மற்றும் வரலாற்று விவரிப்புகள் பற்றிய முழுமையான புரிதலுடன், ஆளுமை மற்றும் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதில் தலைமைத்துவ வகிபாகங்களை வகிக்க இளம் பெண்களை விருத்தி செய்து பயிற்சியளித்தல். | அறிமுக, இடைநிலை மற்றும் உயர்தர பாட நிலைகளில் உருவாக்கப்பட்ட கற்றல் தொகுதிகளின் எண்ணிக்கை<br><br>பாடநெறியை நடத்துவதற்கு அரச பல்கலைக்கழகங்கள் மற்றும் மையங்களுடன் மேற்கொள்ளப்பட்ட பங்காண்மைகளின் எண்ணிக்கை<br><br>பயிற்சிபெற்ற இளம் பெண்களின் எண்ணிக்கை<br><br>தலைமைத்துவத் திறன்கள் மற்றும் சூழ்நிலை மற்றும் வரலாற்று விவரிப்புகளின் புரிதலில் ஏற்பட்ட முன்னேற்றத்தின் சதவிகிதம் | கல்வி அமைச்சு<br><br>முகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு | முகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு | கல்வி அமைச்சு | CSHR<br><br>கொழும்புப் பல்கலைக்கழகம்<br><br>பால்நிலை கற்கைகளுக்கான நிலையம், களனிப் பல்கலைக்கழகம்<br><br>திறந்த மற்றும் தொலைதூர கற்கை நிலையம், யாழ் பல்கலைக்கழகம்<br><br>UN Women | ஜனவரி 2023 – நீண்ட காலம் | முகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு | TBC |

இலக்குப் பகுதி

# 09

**பெண்களின் அரசியல் பங்கேற்பை ஊக்குவித்தல் மற்றும் தீர்மானமெடுக்கும் பதவிகளில் அதிகமான பெண்களை ஈடுபடுத்துதல்**

| விளைவு: | பொறுப்பான நிறுவனம் / உத்தியோகத்தர் |
|---|---|
| சமுதாயத்தில் தீர்மானமெடுப்பதில் அனைத்து மட்ட ஆளுகைகளிலும் பெண்களின் சமமான மற்றும் அதிகரித்த ஈடுபாடு | • முகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு |

| பிரதான செயற்பாடுகள் | குறிகாட்டிகள் | சரிபார்க்கும் வழிகள் | நடைமுறைப் படுத்தும் பிரதான நிறுவனங்கள் | உதவி நிறுவனங்கள் | | கால அளவு | கண்காணிக்கும் நிறுவனம் | ஒதுக்கீடு |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | அரச செயற்பாட்டாளர்கள் | அரச சார்பற்ற செயற்பாட்டாளர்கள் | | | |
| **9.1** ஓரங்கட்டப்பட்ட மற்றும் சலுகை குறைந்த துறைகள்/ சமூகங்கள் மீது குறிப்பிட்ட கவனம் செலுத்தி, துறை சார்ந்த கூட்டுக்களில் அதிகளவான பெண் தலைமைத்துவம் மற்றும் நிர்வாகத்திற்காக பரப்புரையாற்றல்.[46] | களமட்ட சமூகங்களில் தலைமைப் பதவிகள் / தீர்மானமெடுக்கும் நிலைகளை எடுக்கும் பெண்களின் எண்ணிக்கை (WDO களால் சேகரிக்கப்பட்ட தரவுமூலம் மதிப்பிடப்படும்)<br><br>பெண்களின் ஈடுபாட்டின் முக்கியத்துவத்தைச் சுட்டிக்காட்ட, துறை சார்ந்த கூட்டுக்களுக்குள் மேற்கொள்ளப்படும் உணர்திறன் திட்டங்களின் எண்ணிக்கை | பிரதேச செயலகங்கள் | செயலாளர், பெருந்தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சு | முகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு<br><br>WDOs<br><br>பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நிதியம் | சமூக அபிவிருத்தி நிலையம், கண்டி | ஜனவரி 2023 – நீண்ட காலம் | முகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு | TBC |

46 இந்தச் சமூகங்களில் தோட்டச் சமூகங்கள், மீனவ சமூகங்கள் ஆகியன உள்ளடங்கும், ஆனால் அவை மட்டும் அல்ல. உதாரணமாக, கலந்தாலோசனைகளின்போது, தோட்டங்களில் வாழும் மற்றும் பணிபுரியும் சமூகங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் பெரும்பாலும் 'தலைவர்' என்று குறிப்பிடப்படும் ஆண் சமூகத் தலைவர்கள்மூலம் கலந்துரையாடப்படுவதாகப் பங்கேற்பாளர்கள் குறிப்பிட்டனர். பெண்களைத் 'தலைவி' ஆவதற்கு ஊக்குவிப்பதன் அவசியத்தில் கலந்துரையாடல் கவனம் செலுத்தியது - இது ஒரு பெண் சமூகத் தலைவரைக் குறிக்கப் பயன்படுத்தப்படும் சொல்.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **9.2**<br>சமுதாய நிலைக் கட்டமைப்புக்கள் / சங்கங்கள் / அமைப்புக்களில் தலைமைப் பதவிகள் மற்றும் தீர்மானம் மேற்கொள்ளும் பதவிகளை வகிப்பதற்குப் பெண்களை ஊக்குவித்தல் மற்றும் வசதிப்படுத்தல்[47,48] | 30 ஜனவரி 2023 நிலவரப்படி கிராம மட்ட சங்கங்கள் / அமைப்புக்களில தலைமைப் பதவிகளில் உள்ள பெண்களின் எண்ணிக்கை. அத்தகைய சங்கங்களில் வருடாந்த ரீதியாக தலைமைப் பதவிகளைப் பெறும் பெண்களின் எண்ணிக்கை மதிப்பீட்டுக் காலத்தின் முடிவில் அத்தகைய சமூகங்களில் தலைமைப் பதவிகளில் உள்ள பெண்களின் எண்ணிக்கையின் சதவிகித அதிகரிப்பு. | பிரதேச செயலகங்கள் | பணிப்பாளர், பெண்கள் பணியகம், முகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு | WDOs<br>மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்கள் | சூர்யா பெண்கள் அபிவிருத்தி நிதியம்<br>UN Women | பெப்ரவரி 2023 – ஜனவரி 2026 | முகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு | TBC |
| **9.3**<br>அதிவிசேட வர்த்தமானி வெளியீட்டின்மூலம் மத்தியஸ்த சபைகளில் பெண்களின் சமமான பிரதிநிதித்துவத்தை உறுதிசெய்து ஊக்குவித்தல். | மத்தியஸ்த சபைகளில் பெண்களுக்குச் சமமான பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்துவதற்கு அதிவிசேட வர்த்தமானியை வெளியிடுதல் | முகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு | செயலாளர்- மத்தியஸ்தர் சபை ஆணைக்குழு | முகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு | AWAW<br>மேலும் பரிந்துரைக்கப்படுகிறது: ஆசிய மன்றம் | ஜனவரி 2023 – நீண்ட காலம் | முகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு | TBC |

47 சமூக மட்டப் பங்கேற்பாளர்கள் பெண்களுடன் மட்டுப்படுத்தப்படாத சமூகங்கள் / சங்கங்களில் பெண்களின் தீர்மானமெடுக்கும் பாத்திரங்களின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தனர்.
48 இவை 'பிரஜா மண்டலய', 'காந்தா பல மண்டலய' ஆகியவற்றை உள்ளடக்குவதுடன் இவற்றிற்கு மட்டும் மட்டுப்படுத்தப்படவில்லை.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **9.4** அனைத்து மத்தியஸ்த சபைகளுக்கும் பால்நிலைக்குப் பதிலளிக்கும் மத்தியஸ்தம் குறித்த பயிற்சியை உறுதி செய்தல். | மாவட்ட வாரியாகப் பிரிக்கப்பட்ட பயிற்சித் திட்டங்களின் எண்ணிக்கை<br><br>மாவட்டம் மற்றும் பால்நிலையின் அடிப்படையில் பிரிக்கப்பட்டுள்ள பயிற்சிபெற்ற மற்றும் திறன்பெற்ற மத்தியஸ்த குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை.<br><br>பால்நிலை சமத்துவப் பிரச்சினைகளில் அதிகரித்த புரிதலை அறிக்கையிடும் மத்தியஸ்த குழு உறுப்பினர்களின் சதவீதம். | முகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு | செயலாளர்-மத்தியஸ்தர் சபை ஆணைக்குழு | முகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு | AWAW | ஜனவரி 2023 – நீண்ட காலம் | முகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு | TBC |
| **9.5** பெண் மத்தியஸ்தர்களின் தேசிய வலையமைப்பை உருவாக்குதல் மற்றும் தேசிய மற்றும் பிராந்தியங்களுக்கிடையிலான பரிமாற்றங்களை ஊக்குவித்தல். | மாவட்ட வாரியாகப் பிரிக்கப்பட்டுள்ள பெண் மத்தியஸ்தர்களின் எண்ணிக்கை<br><br>ஆண்டுதோறும் நடத்தப்படும் கூட்டங்கள் மற்றும் பரிமாற்றங்களின் எண்ணிக்கை<br><br>பகிரப்பட்டுத் தொகுக்கப்பட்டுள்ள சிறந்த நடைமுறை மற்றும் கற்றுக்கொண்ட பாடங்களின் எண்ணிக்கை | முகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு | செயலாளர்-மத்தியஸ்தர் சபை ஆணைக்குழு | முகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு | AWAW<br><br>UN Women | ஜனவரி 2023 – நீண்ட காலம் | முகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு | TBC |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **9.6**<br>தேசிய அளவிலான அரசியலில் பெண்களை உள்ளடக்கிய பிரதிநிதித்துவத்தை மேம்படுத்துவதற்காக ஒவ்வொரு கட்சியின் மனுத்தாக்கலிலும் குறைந்தது 25% பெண்களுக்கு வழங்கப்படுவதை உறுதிசெய்தல். | தேசிய அளவிலான அரசியலில் நுழையும் பெண்களின் எண்ணிக்கையில் சதவிகித அதிகரிப்பு. பாராளுமன்றத் தேர்தல்கள் மூலம் தேசிய அளவிலான அரசியலில் நுழையும் பெண்களின் எண்ணிக்கை. தேசிய தேர்தல்களுக்குப் பரிந்துரைக்கப்பட்ட அரசியல் கட்சி ரீதியாகத் தரம் பிரிக்கப்பட்ட பெண் வேட்பாளர்களின் எண்ணிக்கை | இலங்கைப் பாராளுமன்றம் | பாராளுமன்றப் பெண்கள் குழு | முகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு | UN Women | பெப்ரவரி 2023 – ஜனவரி 2026 | முகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு | TBC |
| **9.7**<br>ஆதரவையும் வழிகாட்டுதலையும் உறுதி செய்வதற்காக, தேசிய மற்றும் துணைதேசிய மட்டங்களில் அரசியலில் பெண்களின் கட்சிகளுக்கிடையிலான வலைப்பின்னல்களை முறைப்படுத்துதல் மற்றும் வலுப்படுத்துதல். | அரசியலில் உள்ள பெண்களில் வலைப்பின்னல்களின் ஒரு பகுதியாக இருக்கும் பெண்களின் எண்ணிக்கை<br><br>தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்குப் பெண்களின் வலுவூட்டல் மற்றும் தலைமைத்துவம் தொடர்பில் வழங்கப்பட்ட பயிற்சிகளின் எண்ணிக்கை | முகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு | முகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு<br><br>பாராளுமன்றப் பெண்கள் குழு | பொதுச்சேவை, மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சு<br><br>மாவட்ட அளவிலான பெண் பிரதிநிதிகளின் குழுக்கள் | கிறிசாலிஸ்<br><br>UN Women | பெப்ரவரி 2023 – ஜனவரி 2026 | முகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு | TBC |

# கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு

NAP இல் கோடிட்டுக் காட்டப்பட்ட விளைவுகளின் வெற்றிகரமான அடைவானது, வினைத்திறனான அமுலாக்கத்தை அறிவிப்பதற்காகவும், திட்டமிடப்பட்ட மற்றும் எதிர்கால WPS பணிகளுக்கான வளங்களை விளைதிறனாகப் பயன்படுத்துவதற்காகவும் மற்றும் பொறுப்புக்கூறல், அதிகரித்த நிலையிலான விளைவுகளை அடைவதற்காக நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை நிறைவேற்றுவதை உறுதிசெய்வதற்கான வலுவான கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு (M&E) பொறிமுறையுடன் உள்ளார்ந்த முறையில் இணைக்கப்பட்டுள்ளது. செயற்பாட்டு மற்றும் அமுல்படுத்தலுக்கான செயன்முறை அணுகுமுறையை எளிதாக்கும் பொருட்டு, பங்களிப்பு நடவடிக்கைகளுடன் விளைவு நிலை முடிவுகளைக் கண்காணிப்பதற்காக ஒவ்வோர் அர்ப்பணிப்பின்கீழும் ஒரு கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுக் கட்டமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. முன்னர் கூறப்பட்ட ஒவ்வோர் அர்ப்பணிப்பின்கீழும் விவரிக்கப்பட்ட நடவடிக்கைகளும் அந்தந்த நடவடிக்கைகள் பிரதிநிதித்துவப்படுத்தும் நேரடி விளைவுகளான உயர் அளவான நிறுவன ரீதியான மற்றும் நடத்தை மாற்றங்களை உணர்ந்துகொள்வதற்காக அந்தந்த அரச தரப்பினராலே மேற்கொள்ளப்படுகின்றன. தலையீடுகளின் நீண்டகால திட்டமிடப்பட்ட மற்றும் திட்டமிடப்படாத முயற்சிகள் இறுதியில், சிவில் சமூகம் மற்றும் அபிவிருத்திப் பங்காளர்கள் போன்ற அரச மற்றும் அரச சார்பற்ற தரப்பினரின் கூடுதலான கூட்டு முயற்சிகள்மூலம், மோதல், சமூக-பொருளாதார, கலாசார, நிறுவன மற்றும் பிற காரணிகளால் பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளின் நிலை மற்றும் நிலைமைகளில் உயர்மட்ட மாற்றங்களுக்குப் பங்களிப்பதுடன் அவை அந்தந்தப் பிரிவுகளின் கீழாக, கீழே குறிப்பிடப்பட்டுள்ளபடி இடைக்கால மற்றும் இறுதி மதிப்பீடுகளால் சரிபார்க்கப்படும்.

## இலக்குகள் மற்றும் குறிகாட்டிகள்

NAP இற்கான கண்காணிப்பு கட்டமைப்பு SDGக்கள் மற்றும் கள மட்டக் கலந்தாலோசனைகளில் பல்வேறு பங்குதாரர்களிடமிருந்து பெறப்பட்ட உள்ளீடுகள் ஆகியவற்றிற்குள் உருவாக்கப்பட்டது. இந்த இலக்குகள் தொடர்புடைய SDG க்கிணங்கப் பின்வரும் SDG க்கள் உள்ளிட்ட ஆனால் அவை மட்டுமின்றித் தொடர்புடைய பிற SDGக்களுக்கு[49] இணங்கவும் வகுக்கப்பட்டுள்ளன. SDG 5: பால்நிலைச் சமத்துவத்தை அடைதல் மற்றும் அனைத்துப் பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளை வலுவூட்டுதல் மற்றும் SDG 16: நிலையான வளர்ச்சிக்கு சமாதானமான மற்றும் உள்ளடக்கிய சமூகங்களை ஊக்குவித்தல், அனைவருக்கும் நீதிக்கான அணுகலை வழங்குதல் மற்றும் அனைத்து மட்டங்களிலும் வினைத்திறனான பொறுப்புக்கூறலுடைய அனைவரையும் உள்ளடக்கிய நிறுவனங்களைக் கட்டியெழுப்புதல்.

SDGக்களை அடைவதிலும், உலகளாவிய குறிகாட்டிகளைத் தரவரிசைப்படுத்துவதிலும் இலங்கையின் செயற்திறன், அதாவது உலகளாவிய பால்நிலை இடைவெளிக் குறிகாட்டி, இலக்குகளை அடைவதை நோக்கிய பிரதான முன்னேற்றத்திற்கான அமுலாக்கத்தின்போது சரியான கால இடைவெளியில் மதிப்பீடு செய்யப்பட வேண்டும். ஒவ்வோர் அர்ப்பணிப்பின்கீழும் விளைவாகும் முடிவுகள் குறிப்பிட்ட செயற்பாடுகளுடன் பொருத்தப்பட்டதுடன் அவை அந்தந்த அர்ப்பணிப்புக்கள் மற்றும் பங்களிப்பு நடவடிக்கைகளைச் செயற்படுத்துவதற்கும் ஒத்துழைப்பதற்கும் நியமிக்கப்பட்ட முன்னணி அரச நிறுவனங்களைக் கணக்கிடுகின்ற தனித்தனிக் கட்டமைப்பில் இணைக்கப்பட்டன. இந்த M&E கட்டமைப்பில் செயற்பாடுகள், அவற்றின் சரிபார்ப்பு வழிமுறைகள், கால அளவு, கண்காணிப்பு நிறுவனம், துணை நிறுவனங்கள், அரச மற்றும் அரசார்பற்ற தரப்பினர் மற்றும் பாதீடு ஆகியவற்றைக் கண்காணிப்பதற்கான குறிகாட்டிகளும் அடங்கும்.

---

49 **SDG 1** - எல்லா இடங்களிலும் வறுமையை முடிவுக்குக் கொண்டுவருதல்.
**SDG 3** - ஆரோக்கியமான வாழ்க்கையை உறுதிசெய்து, எல்லா வயதினருக்கும் நல்வாழ்வை ஊக்குவித்தல்.
**SDG 4** - உள்ளடங்கல் மற்றும் சமத்துவமான தரமான கல்வியை உறுதிசெய்து அனைவருக்கும் வாழ்நாள் முழுவதும் கற்றல் வாய்ப்புகளை ஊக்குவித்தல்.
**SDG 5** - பாலின சமத்துவத்தை அடைதல் மற்றும் அனைத்துப் பெண்கள் மற்றும் சிறுமிகளை வலுவூட்டல்.
**SDG 8** - நீடித்த, உள்ளடங்கலான மற்றும் நிலையான பொருளாதார வளர்ச்சி, முழுமையானதும் உற்பத்தித்திறனானதுமான வேலைவாய்ப்பு மற்றும் அனைவருக்கும் பொருத்தமான வேலை என்பவற்றை ஊக்குவித்தல்.
**SDG 9** - நெகிழ்தன்மையான உட்கட்டமைப்பை உருவாக்குதல், உள்ளடங்கலான மற்றும் நிலையான கைத்தொழில்மயமாக்கலை மற்றும் புத்தாக்கங்களை வளர்ப்பதனை ஊக்குவித்தல்.
**SDG 10** - நாடுகளுக்குள்ளும் இடையிலும் சமத்துவமின்மையைக் குறைத்தல்
**SDG 16** - நிலையான அபிவிருத்திக்காக அமைதியான மற்றும் உள்ளடங்கல் சமூகங்களை ஊக்குவித்தல், அனைவருக்கும் நீதிக்கான அணுகலை வழங்குதல் மற்றும் அனைத்து மட்டங்களிலும் பயனுள்ள, பொறுப்புணர்வுள்ள மற்றும் உள்ளடங்கலான நிறுவனங்களைக் கட்டியெழுப்புதல்.

# M&E அமுலாக்கல் நுட்பம்

WPS குறித்த NAP ஐ செயற்படுத்துவதற்கு ஒவ்வோர் அர்ப்பணிப்பையும் உறுதியான முடிவுகளாக வினைத்திறனாக மாற்றுவதற்குப் பல அரச மற்றும் அரச சார்பற்ற தரப்பினரின் கூட்டு முயற்சிகள் தேவைப்படுகின்றது. சம்பந்தப்பட்ட பலதரப்பட்ட பங்காளிகள் மற்றும் பங்குதாரர்களின் அடிப்படையில், நடவடிக்கைகளுக்கு இணையாக முக்கிய M&E பொறுப்புகளை மேற்பார்வையிடுவதற்கும் நிறைவேற்றுவதற்குமாக இரண்டு பல்நிறுவன மற்றும் பங்குதாரர் ஒருங்கிணைப்பு அமைப்புகள் - நிறுவனங்களுக்கிடையான ஒருங்கிணைப்பு மற்றும் மதிப்பீட்டுக் குழு மற்றும் தேசிய வழிகாட்டல் குழு ஆகியவை - நிறுவப்படும். கண்காணிப்புச் செயன்முறைகள் தொடர்புடைய திட்டங்களின் பிரகாரம் அமுலாக்கங்கள் இடம்பெறுகின்றதா என்பதை மதிப்பிடுவதில் அரசாங்கத்திற்கு உதவுவதுடன், மதிப்பீட்டுச் செயன்முறைகள் கள மட்டத்தில் உள்ள சவால்கள் மற்றும் வாய்ப்புகளுக்குப் பதிலளிக்கும் வகையில் WPS தலையீடுகளைக் கற்பதற்கும் மாற்றியமைப்பதற்கும் உதவும். பங்கேற்புடனான M&E அணுகுமுறை பகிரப்பட்ட உரிமைத்துவம் மற்றும் பொறுப்புக்கூறலை ஊக்குவிப்பதுடன் தேசிய, துணைத் தேசிய மற்றும் சர்வதேச தீர்மானமெடுக்கும் களங்களில் NAP இன் பொருத்தத்தையும் அமுல்படுத்தும் தன்மையையும் வலுப்படுத்த, குறிப்பாக சிவில் சமூகத்தின் நிபுணத்துவத்தை மேம்படுத்துகிறது.

பின்வரும் பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள M&E வழிமுறைகள் மீண்டும் மீண்டும் கலந்தாலோசனைகளில் வெளிப்படுத்தப்பட்டதைப்போல், செயற்படுத்தல் திட்டங்களை அமுல்படுத்துவதிலும் M&E கட்டமைப்பிலும் உள்ளூர் அரசு மற்றும் சிவில் சமூகத்தின் கணிசமான ஈடுபாட்டைச் செயற்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. அதில் அமைக்கப்பட்ட கட்டமைப்புகள் மற்றும் செயற்பாடுகள் அனைத்துப் பங்குதாரர்களின் ஒருங்கிணைப்பு மற்றும் ஈடுபாட்டை எளிதாக்குவது மட்டுமல்லாமல், அடையாளம் காணப்பட்ட அனைத்துப் பங்குதாரர்களின் கூட்டுப் பங்களிப்புகளையும் தனிப்பட்ட பாத்திரங்கள் மற்றும் பொறுப்புகளையும் முன்னிலைப்படுத்துவதன்மூலம் NAP ஐ முகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு இனுடைய ஒரே முன்னுரிமையாகக் கருதப்படுவதைத் தடுக்கும்.

## நிறுவனங்களுக்கிடையிலான ஒருங்கிணைப்பு மற்றும் மதிப்பீட்டுக் குழு

இலங்கை அரசாங்கம் குறிப்பாக முகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு பால்நிலைச் சமத்துவம் மற்றும் WPS நிகழ்ச்சிநிரலை முன்னேற்றுவதில் உறுதியாக உள்ளது. அரச மற்றும் அரச சார்பற்ற தரப்பினரைக் கொண்ட நிறுவனங்களுக்கிடையிலான ஒருங்கிணைப்பு மற்றும் மதிப்பீட்டுக் குழுக்களை நிறுவுவது தேவையான அரசியல் விருப்பத்தையும், NAP நோக்கங்களை அடைவதற்கான பிரச்சாரத்தையும் ஊக்குவிப்பதற்கான முக்கிய வழிமுறைகளாக அரசாங்கத்தால் கருதப்படுகிறது. இலங்கை மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும், NAP தலையீடுகளை ஊக்குவிப்பதற்கும் அரச சார்பற்ற தரப்பினர், அதாவது சமுதாய மட்ட அமைப்புகள் பங்களிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஒவ்வோர் அர்ப்பணிப்புக்குமென அடையாளம் காணப்பட்ட பிரதான அமுலாக்க நிறுவனம் அந்தந்த M&E முயற்சிகளை மேற்கொள்ள ஓர் ஒருங்கிணைப்பு மற்றும் மதிப்பீட்டுக் குழுவை அமைப்பதற்கான முயற்சி ஏற்றுக்கொள்ளப்படும். ஒருங்கிணைக்கின்ற அரச நிறுவனமானது NAP இன் கீழ் தலைமைதாங்கி செயற்படுகின்ற நிறுவனமாக உத்தியோகபூர்வமாக அடையாளப்படுத்தப்படவேண்டியதாக எதிர்பார்க்கப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட பதவி அடையாளம் காணப்படாத சந்தர்ப்பங்களில், குறிப்பிட்ட நிர்வாக நிறுவனம் அவர்களின் நிர்வாகக் கட்டமைப்புகளுக்குள் ஒரு மூத்த அதிகாரியை பிரதான அமுலாக்க நிறுவனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முகவராக நியமிக்கும். அத்தகைய ஒருங்கிணைப்பாளர், முகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு இலிருந்து இல்லையென்றால், அவர் அமைச்சுடன் நெருக்கமாகத் தொடர்புகொள்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அடையாளம் காணப்பட்ட ஒவ்வோர் அரச தரப்பிடமிருந்தும், அரச சார்பற்ற தரப்பிடமிருந்தும் குறைந்தபட்சம் ஓர் உறுப்பினராவது குழுவைப் பிரதிநிதித்துவப்படுத்தப்படுவதை

உறுதிசெய்வது ஒருங்கிணைப்பு முகவரின் பொறுப்பாகும்.

## குழுவின் அமைப்பு

ஒவ்வோர் ஒருங்கிணைப்பு மற்றும் மதிப்பீட்டுக் குழுவும் குறைந்தது ஐந்து நபர்களைக் கொண்டதாக பத்து நபர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருக்கும். அதிகப்படியான பெரிய அல்லது சிறிய ஒருங்கிணைப்பு அமைப்புகள் அத்தகைய அமைப்புக்களின் வினைத்திறனான செயற்பாட்டைத் தடுக்காது என்பதை உறுதிப்படுத்தவே குறைந்தபட்ச மற்றும் அதிகபட்ச உறுப்பினர் வரம்புகள் இங்கு அமைக்கப்பட்டுள்ளன.

## ஒருங்கிணைப்பு மற்றும் மதிப்பீட்டுக் குழுவின் உறுப்புரிமை

குறைந்தபட்சம், பின்வரும் பணியாளர்களை உறுப்பினர்களாகக் கருதவேண்டும்:

(i) பிரதான அமுலாக்க நிறுவனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒருங்கிணைப்பு முகவர்.
(ii) பிரதான அமுலாக்க நிறுவனத்தின் மற்றுமோர் உறுப்பினர்.
(iii) உடன் தொடர்புடைய செயற்பாடுகளுக்காக அடையாளம் காணப்பட்ட ஒவ்வொரு கூடுதல் அரச தரப்பிலிருந்தும் குறைந்தபட்சம் ஒரு பிரதிநிதியாவது.
(iv) தொடர்புடைய செயற்பாட்டிற்காக அடையாளம் காணப்பட்ட ஒவ்வோர் அரச சார்பற்ற தரப்பிலிருந்தும் குறைந்தபட்சம் ஒரு பிரதிநிதியாவது.
(v) மேலே உள்ளவை மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு இன் பிரதிநிதியைக் கொண்டிருக்காத சந்தர்ப்பங்களில் மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு இலிருந்து குறைந்தபட்சம் ஒரு பிரதிநிதி.
(vi) திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்திலிருந்து குறைந்தபட்சம் ஒரு பிரதிநிதியாவது.
(vii) மற்றைய குழு உறுப்பினர்களால் கூட்டாக அடையாளம் காணப்பட்டு ஒரு நிபுணர் நியமிக்கப்படுகிறார்.

2026 ஆம் ஆண்டில் இந்த NAP காலாவதியாகும் வரை ஒருங்கிணைப்பு முகவரும் குழுத் தலைவரும் தங்கள் விதிமுறைகளைத் தொடர்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மற்றைய உறுப்பினர்கள் குறைந்தது இரண்டு ஆண்டுகளுக்குத் தங்கள் உறுப்புரிமையைத் தொடர்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. குழுவிலிருந்து தன்னைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதியை மாற்றுவதற்கு மற்றொரு முகவரைப் பரிந்துரைப்பதும் ஒவ்வொரு நிறுவனத்தினதும் பொறுப்பாகும்.

## கால எல்லை, பங்கேற்பு மற்றும் பிரதிநிதித்துவம்

ஒருங்கிணைப்பு மற்றும் மதிப்பீட்டுக் குழுக்கள் காலாண்டுக்கு ஒருமுறை கூடுவதுடன், தீர்மானமெடுப்பதற்கான குறைந்தபட்ச பங்கேற்பு அதில் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட அனைத்து உறுப்பினர்களில் 75 சதவீதமாக இருக்க வேண்டும், அதில் 50 சதவீதத்திற்கும் அதிகமான பெண் உறுப்பினர்கள் கலந்துகொள்ள வேண்டும். குழுக்கள் குறைந்தது 70 சதவீத பெண்களைக் கொண்டிருக்கும். பெண் உறுப்பினர்களுக்கு முன்னுரிமை வழங்கி உறுப்பினர்களிடையே தலைவர்

தேர்ந்தெடுக்கப்படுவார். எவ்வாறாயினும், பிரதான அமுல்படுத்தும் நிறுவனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முகவர் தொடர்ந்து உறுப்பினராக இருக்க வேண்டும்.

## குழுவின் முக்கிய செயற்பாடுகள்

### கண்காணித்தல்

(i) WPS தொடர்பான NAP இற்காக தரவு முகாமைத்துவ அமைப்பை நிறுவுதல்

(ii) ஒவ்வோர் அர்ப்பணிப்பின் கீழும் குறிகாட்டி அடிப்படைகளையும் இலக்குகளையும் பராமரித்தல் மற்றும் புதுப்பித்தல் - தற்போது அடிப்படைத் தரவுகளில் இடைவெளி இருப்பதால் இது ஒரு முதன்மைப் பணியாகக் கருதப்படுகிறது.

(iii) ஒழுங்கான முன்னேற்ற மீளாய்வுகளை நடாத்தி அரையாண்டுக் கண்காணிப்பு அறிக்கைகளைப் பிரதான அமுலாக்க நிறுவனத்திற்கும் முகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு மற்றும் விளைவு மற்றும் வெளியீட்டு நிலையில் அடையாளம் காணப்பட்ட தரவு மூலங்கள், கண்காணிப்பு நிறுவனங்களுக்கும் சமர்ப்பிப்பதுடன் இலங்கையில் 2016ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க தகவல் உரிமைச் சட்டத்தின்படி பொதுமக்கள் இந்த விவரங்களை அணுகுவதை உறுதி செய்வதற்காக மத்திய இணையவழி மற்றும் இணையத் தொடர்பற்ற தரவுத்தளத்தைப் பேணுவதற்கு முகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு எதிர்பார்க்கிறது.

(iv) WPS மற்றும் பிற தொடர்புடைய முயற்சிகளில் சான்று அடிப்படையிலான தீர்மானமெடுக்கும் தகவலைத் தெரிவிக்க மற்றும் உதவுவதற்கு குழுக்கள் மற்றும் வெளிப் பங்குதாரர்களிடையே உள்ள கண்டுபிடிப்புகள் ஒருங்கிணைப்பு மற்றும் தகவல்தொடர்பு மேற்பார்வை செய்தல்.

### மதிப்பீடு

(i) CSOக்கள் மற்றும் பிற பங்குதாரர்களின் பரந்த வலைப்பின்னல்களுடன் இணைந்து NAP WPS செயற்படுத்தப்பட்ட 3 ஆண்டுகளுக்குப் பிறகு இடைக்கால மதிப்பீட்டைத் தொடங்கி முகாமை செய்வதுடன் முறையான மதிப்பீட்டின் மூலமாக நம்பகரமான கண்டுபிடிப்புக்களை அறிய இறுதி மதிப்பீடுகளை WPS தொடர்பான NAP இன் முழுமையான அமுலாக்க காலத்திற்குப் பின்பு தொடங்கவும். WPS குறித்த NAP ஐப் பயன்படுத்துவதற்கான காலத்தின் முடிவில் ஒரு விரிவான மதிப்பீட்டு அறிக்கையைத் தொகுப்பதற்கான நடவடிக்கைகளைப் பின்பற்றுதல் - அந்த அறிக்கையில் ஆழமான, கடுமையான பகுப்பாய்வு மற்றும் அந்தந்தக் குழுக்கள் வழங்கிய சான்றுகள் இருக்க வேண்டும்.

(ii) இடைக்கால மற்றும் இறுதி மதிப்பீட்டு அறிக்கைகளில் சிறப்பிக்கப்பட்டுள்ள முக்கிய பகுதிகளை உள்ளடக்கி கற்றுகொண்ட பாடம் தொடர்பான அறிக்கையைத் தொகுத்து, WPS குறித்த NAP இன் அடுத்த மீள் செய்கையில் இவை கவனிக்கப்படுவதை உறுதிசெய்ய வரையறைகளையும் பரிந்துரைகளையும் அமைக்கவும்.

M&E வழிமுறைகளை வினைத்திறனாகச் செயற்படுத்துவதற்கான தொடர்புடைய உத்தியோகத்தர்களின் இயலளவுகளில் உள்ள இடைவெளிகளை நிவர்த்தி செய்வதற்கான உத்திகளைக் கண்டறிந்து

செயற்படுத்துவதற்கும், SDGக்களை பற்றி அறிக்கையிடுவதில் ஒத்துழைப்பை உறுதிசெய்தல் மற்றும் M&E முயற்சிகளில் ஒவ்வோர் அர்ப்பணிப்பின்கீழும் பிரிக்கப்படாத தரவைச் சேகரிப்பதனூடாகப் பால்நிலை உணர்திறன் மற்றும் உள்ளடக்கம் ஆகியவற்றை ஒழுங்குபடுத்துதலுக்கும் குழுக்கள் கூட்டாகப் பொறுப்பேற்க வேண்டும்.

## வழிநடத்தல் குழு

ஒவ்வோர் ஒருங்கிணைப்பு மற்றும் மதிப்பீட்டுக் குழுவின் உறுப்பினர்களால் உருவாக்கப்பட்ட வழிநடத்தல் குழுவின் செயற்பாடு, அனைத்து M&E முயற்சிகளையும் ஒன்றிணைத்து ஒருங்கிணைப்பதும், அத்தகைய முயற்சிகளின் தரம் மற்றும் பொறுப்புணர்வை உறுதி செய்வதுமாகும். வழிநடத்தல் குழுவின் உறுப்பினர்கள் பின்வருமாறு:

(i) முகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு இன் செயலாளர் (வழிநடத்தல் குழுவின் தலைவராகச் செயற்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது)

(ii) நீதி அமைச்சின் செயலாளர்

(iii) செயலாளர், நிதி அமைச்சு

(iv) செயலாளர், வெளியுறவுத் தொடர்பு அமைச்சு

(v) பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்

(vi) தலைவர் - பெண்கள் தொடர்பான தேசிய குழு

(vii) பணிப்பாளர்-இலங்கை மகளிர் பணியகம்

(viii) பணிப்பாளர் - சிறுவர் செயலகம்

(ix) பணிப்பாளர் நாயகம், தொகைமதிப்பு புள்ளிவிவரவியல் திணைக்களம்

(x) பொலிஸ் சிறுவர்கள் மற்றும் பெண்கள் பணியகத்தின் பிரதிநிதி

(xi) பெண்களின் உரிமைகள் குறித்த ஐந்து நிபுணர்கள்

(xii) CSO களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஏழு பிரதிநிதிகள்

வழிநடத்தல் குழுவானது மொத்தமாக இருபத்தைந்து உறுப்பினர்களைக் கொண்டிருப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. இந்தக் குழு நான்கு மாதங்களுக்கு ஒருமுறை கூடுவதுடன், இந்தக் கூட்டங்களின் முடிவுகளாகத் தயாரிக்கப்படும் விரிவான குறிப்புகள் / அறிக்கைகள் / தீர்மானங்கள் மற்றும் / அல்லது அத்தகைய ஆவணங்கள் முகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு ஆல் பேணப்படுவதுடன் அந்த முடிவுகளுக்கு இணங்கச் செயல்பட எதிர்பார்க்கப்படும் பிற நிறுவனங்களுக்கு அவை அனுப்பப்படும். கூட்டங்கள் செல்லுபடியாகும் என்று கருதப்படுவதற்கு, பட்டியலிடப்பட்ட அமைச்சுக்களின் நான்கு செயலாளர்களை உள்ளடக்கியதாகக் குறைந்தது 12 உறுப்பினர்களாவது கலந்துகொள்ள வேண்டும். ஒருங்கிணைப்பு மற்றும் மதிப்பீட்டுக் குழுக்கள் சமர்ப்பித்த அனைத்து அறிக்கைகள் / ஆவணங்களைக் குழு மதிப்பாய்வு செய்து, அது தொடர்பான தேவையான முடிவுகளை எடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. குழுவின் மையப் புள்ளியாக, தேவையான நடவடிக்கைகளுக்காக வழிநடத்தல் குழுவின் முடிவுகளை ஒருங்கிணைப்பு மற்றும் மதிப்பீட்டுக் குழுக்களுக்குத் தெரிவிக்கும் பொறுப்பு முகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு இன் செயலாளருக்கு உரியதாக இருக்கும். அமைச்சரவை உட்பட, ஆனால் அவை மட்டுமின்றி, அரசாங்கத்தின் உயர்மட்டத் தீர்மானமெடுப்பவர்களுடன் தொடர்புகொள்வதற்கும், பெண்கள், சமாதானம் மற்றும் பாதுகாப்புத் தொடர்பான விடயங்களில் தொடர்புடைய உத்தியோகத்தர்களுக்குக் கொள்கைப் பரிந்துரைகளை வழங்குவதற்கும் வழிநடத்தல் குழு பொறுப்பாகும்.

# பெண்கள், சமாதானம் மற்றும் பாதுகாப்பு குறித்த தேசிய செயற்திட்டத்தை அமுல்படுத்துவதிலுள்ள சவால்கள்

WPS தொடர்பான NAP நிறைவுசெய்யும் கட்டத்தில் - NAP அமுல்படுத்தப்படுவதற்கு அச்சுறுத்தல்களை ஏற்படுத்தக்கூடிய ஏழு முக்கிய சவால்கள் அடையாளங் காணப்பட்டுள்ளன. அவை பின்வருமாறு:

1. நிதி மற்றும் வளங்களின் கிடைக்கும் தன்மை - கூறப்பட்ட அர்ப்பணிப்புகளைத் திருப்திகரமாகச் செயற்படுத்துவதை உறுதிசெய்வதற்கான பொறுப்பு, தற்போதுள்ள வேலை விளக்கங்களின்கீழ் இதேபோன்ற பணிகளைச் செய்வதற்கு ஏற்கனவே பொறுப்பேற்றுள்ள உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்படுவதை உறுதிசெய்வதற்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், பல அர்ப்பணிப்புகளுக்கு குறிப்பிடத்தக்க அளவு அரச நிதி தேவைப்படுகிறது. போதுமான நிதி கிடைப்பது தொடர்பாக GoSL எதிர்கொள்ளும் சிரமங்கள் காரணமாக, WPS குறித்த NAP ஐ செயல்படுத்துவதிலான இலங்கையின் முதல் முயற்சிக்குச் சர்வதேச சமூகம் உதவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

2. சம்பந்தப்பட்ட பங்குதாரர்களின் அர்ப்பணிப்பு - அர்ப்பணிப்பைச் செயற்படுத்துவதை உறுதிசெய்வதற்கான பொறுப்புணர்வை ஏற்க NAP இன் கீழ் தற்போது ஒரு குறிப்பிட்ட பதவியை வைத்திருக்கும் ஒரு குறிப்பிட்ட நபர் தேவை என்பதை உறுதிசெய்வதற்கான ஒரு வழியாக இந்த NAP இல் பொறுப்பான அரச நிறுவனங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இருப்பினும் இதன் வெற்றி பொறுப்பான நிறுவனம் / நிறுவனங்கள் மற்றும் பிற அரசு தரப்பினர் மற்றும் அரச சார்பற்ற தரப்பினருக்கு இடையிலான ஒருங்கிணைப்பு மற்றும் ஒத்துழைப்பைப் பொறுத்ததாகும்.

3. பல பங்குதாரர்களை ஒருங்கிணைப்பதிலுள்ள சிரமம் - வெவ்வேறு கடமைகளைச் செயற்படுத்தப் பல பங்குதாரர்களை ஒருங்கிணைக்கும்போது சில சவால்கள் மற்றும் சிரமங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. மேலும், பொறுப்பான உத்தியோகத்தர்கள், மற்றைய அரச தரப்பினர் மற்றும் சில அரச சார்பற்ற தரப்பினர் என குறிப்பிடப்பட்டுள்ள சில உத்தியோகத்தர்கள் உட்படச் சில பங்குதாரர்களிடம் ஒன்றுக்கொன்று இணையாகச் செயற்படுத்தப்படும் பல பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இது நேரக் கடமைகள் தொடர்பான சில சவால்களை ஏற்படுத்தக்கூடும்.

4. மனிதவள மேம்பாடு - பல்வேறு வகையான பயிற்சிகள் / கருத்தரங்குகள்மூலம் மனிதவள மேம்பாடு ஏற்படுத்தப்பட்டால் மட்டுமே சில கடமைகளை வெற்றிகரமாகச் செயற்படுத்த முடியும். இத்தகைய கடமைகளை நிறைவேற்ற, பல்வேறு துறைகளிலுள்ள நிபுணர்களின் ஆதரவும் அர்ப்பணிப்பும் GoSL க்குத் தேவைப்படும்.

5. மனித வளங்களின் பற்றாக்குறை – குறிப்பிடப்பட்ட சில கடமைகளை வெற்றிகரமாகச் செயற்படுத்துவது புதிய ஆட்சேர்ப்புகள் அல்லது இருக்கும் உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சி அளிப்பதில் தங்கியுள்ளது. இந்த நடவடிக்கைகள் கிடைக்கும் மனித வளத்தினைப் பெரிதும் சார்ந்துள்ளது. மனித வளங்கள் கிடைப்பது தொடர்பாகச் சில சவால்களை ஊகிக்க வேண்டும்.

6. சில சமூகங்களிலிருந்து தயக்கம் மற்றும் பின்னடிப்பு - குறிப்பாக பெண்களின் சமாதானம் மற்றும் பாதுகாப்பை அச்சுறுத்தும் சில பாரபட்சமான சட்டங்கள் அல்லது பால்நிலை ஒரே மாதிரியான நடைமுறைகளை மாற்ற அரசு முயற்சிகளை மேற்கொள்ளும்போது, சில சமூகங்களிலிருந்து தொடர்ந்து கட்டுப்பாடுகள் உள்ளன. இந்தச் சவால்களை ஊகிக்க வேண்டும். எவ்வாறாயினும், இலங்கையின் அரசியலமைப்பு மற்றும் குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கை, பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கை மற்றும் CEDAW சமவாயத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்ட சர்வதேச பொறுப்புகளுக்கு ஏற்ப பெண்களுக்குச் சமத்துவம் வழங்கப்படுவதை உறுதிசெய்ய அரசு முயல்கிறது.

7. உலகளாவிய தொற்றுநோயின் தொடர்ச்சியான தாக்கம் - உலகளாவிய பெருந்தொற்றான சார்ஸ்-கோவ் 2 அல்லது கொவிட் -19 இன் தொடர்ச்சியானது சரியான நேரத்தில் NAP இன் கீழ் பட்டியலிடப்பட்ட செயற்பாடுகளை அமுல்படுத்துவதில் தடையாக இருக்கலாம். அத்தகைய சூழலில், பிரதான அமுலாக்க முகவர் நிறுவனங்கள் ஒரு 'புதிய இயல்பான' சூழலில் இலக்குகளை அடைவதற்கு ஏற்றவாறான காலத்தை நியாயமாக நிர்ணயிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

8. சரியான நேரத்தில் அமுல்படுத்துதல் - WPS குறித்த NAP இல் கூறப்பட்டுள்ள காலக்கெடு 2022 - 2026 முதல் ஐந்து ஆண்டுகளின் கட்டமைப்பிற்குள் உருவகம் செய்யப்படுகிறது. சில கடமைகள் குறுகியகாலக் கடமைகளாவதுடன் மற்றவை நீண்ட கால அவகாசம் கொண்டவை. WPS குறித்த NAP இன் ஐந்தாண்டுக் காலம் கழிந்த பின்னரும் தொடர அரசு மேற்கொள்வதற்கான அர்ப்பணிப்புக்களாக மற்றொரு தொகுதி அர்ப்பணிப்புக்கள் உருவகப்படுத்தப்பட்டுள்ளன.

இலங்கை அரசுக்கு முன்பு எதிர்பார்க்கப்பட்ட சவால்கள் இருந்தபோதிலும்கூட, WPS தொடர்பான இந்த NAP இல் கூறப்பட்டுள்ள அர்ப்பணிப்புக்கள் இலங்கையில் பெண்கள் சமூகத்தின் அனைத்து மட்டங்களிலும் மோதல் தடுப்பு, மோதல் தீர்வு, சமாதானத்தை கட்டியெழுப்புதல், தீர்மானமெடுத்தல் மற்றும் அரசியலில் ஈடுபட்டுள்ளனர் என்பதை உறுதிப்படுத்த முடிந்தவரை முழுமையாகச் செயற்படுத்தப்படுவதை உறுதிசெய்ய அரசு முயல்கிறது. தேசிய செயற்திட்டத்தின் அடிப்படைக் கொள்கையானது இலங்கைப் பெண்களுக்கான நியாயமான, சுதந்திரமான, சமமான, சமத்துவமான சமூகத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது.

# இணைப்பு 1:
# மாகாண கலந்தாலோசனைகளின் அட்டவணை

| திகதி | மாகாணம் | பிரதிநிதித்துவ மாவட்டங்கள் | சமுகமளித்தோர் |
|---|---|---|---|
| 24 செப் 2019 | மத்திய மாகாணம் | கண்டி, மாத்தளை, நுவரெலியா | அரச உத்தியோகத்தர்கள் |
| 25 செப் 2019 | | | CSOக்கள் / NGOக்கள் / இராணுவக் கணவனை இழந்த பெண்கள் / பெருந்தோட்டத் துறையில் பணியாற்றும் பெண்கள் / FHH / இயலாமைகளையுடைய குடும்ப உறுப்பினர்களைப் பராமரிக்கும் பெண்கள் |
| 27 செப் 2019 | மேல் மாகாணம் | கொழும்பு மற்றும் கம்பஹா | அரச உத்தியோகத்தர்கள் |
| 28 செப் 2019 | | | CSOக்கள் / NGOக்கள் / CBO க்கள் / சுயாதீன ஆலோசகர்கள் / மனித உரிமைகளை முன்னிறுத்துவதற்காகப் பணியாற்றும் கல்வி நிறுவனங்களின் பிரதிநிதிகள் |
| 30 செப் 2019 | கிழக்கு மாகாணம் | அம்பாறை மற்றும் மட்டக்களப்பு | CSOக்கள் / NGOக்கள் / FHH / முன்னாள் LTTE போராளிகளின் குடும்ப உறுப்பினர்கள் / இயலாமைகளையுடைய பெண்கள் |
| 01 ஒக் 2019 | | | அரச உத்தியோகத்தர்கள் |
| 02 ஒக் 2019 | கிழக்கு மாகாணம் | திருகோணமலை | CSOக்கள் / NGOக்கள் / CBO க்கள் / பெண்களின் கல்விக்காகப் பணியாற்றும் நிறுவனங்கள் / அகதியாகி மீளத் திரும்பியோர் |
| 03 ஒக் 2019 | | | அரச உத்தியோகத்தர்கள் |
| 04 ஒக் 2019 | ஊவா மாகாணம் | மொனராகலை மற்றும் பதுளை | அரச உத்தியோகத்தர்கள் |
| 05 ஒக் 2019 | | | CSOக்கள் / NGOக்கள் / CBO க்களின் பிரதிநிதிகள் |

| திகதி | மாகாணம் | பிரதிநிதித்துவ மாவட்டங்கள் | சமுகமளித்தோர் |
|---|---|---|---|
| 08 ஒக் 2019 | வட மாகாணம் | யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு | அரச உத்தியோகத்தர்கள் |
| 09 ஒக் 2019 | | | CSOக்கள் / NGOக்கள் / INGO க்கள் / CBO க்களின் பிரதிநிதிகள் / FHH / இயலாமைகளையுடைய பெண்கள் / முன்னாள் போராளிகள் / மோதலுடன் தொடர்புடைய பாலியல் வன்முறையில் பாதிக்கப்பட்டவர்கள் (CRSV) / காணாமற்போதலில் பாதிக்கப்பட்டோரின் மனைவியர் மற்றும் தாய்மார் |
| 08 ஒக் 2019 | தென் மாகாணம் | மாத்தறை மற்றும் ஹம்பாந்தோட்டை | அரச உத்தியோகத்தர்கள் |
| 09 ஒக் 2019 | | | CSOக்கள் / NGOக்கள் / CBO க்களின் பிரதிநிதிகள் / விதவைகள் / FHH / காணாமற்போனோரின் மனைவியர் |
| 10 ஒக் 2019 | வட மாகாணம் | மன்னார் மற்றும் வவுனியா | CSOக்கள் / NGOக்கள் / INGO க்கள் / CBO க்களின் பிரதிநிதிகள் / FHH / இயலாமைகளையுடைய பெண்கள் / முன்னாள் போராளிகள் / மரணம் அல்லது காணாமற்போதலினால் அன்புக்குரியவர்களை இழந்த முதிய பெண்கள் |
| 11 ஒக் 2019 | | | அரச உத்தியோகத்தர்கள் |
| 11 ஒக் 2019 | மேல் மாகாணம் | களுத்துறை | அரச உத்தியோகத்தர்கள் |
| 12 ஒக் 2019 | | | CSOக்கள் / NGOக்கள் / CBO க்களின் பிரதிநிதிகள் |
| 15 ஒக் 2019 | வட மத்திய மாகாணம் | அனுராதபுரம் மற்றும் பொலன்னறுவை | அரச உத்தியோகத்தர்கள் |
| 16 ஒக் 2019 | | | CSOக்கள் / NGOக்கள் / CBO க்களின் பிரதிநிதிகள் / இராணுவக் கணவரை இழந்த பெண்கள்/ FHH / இயலாமைகளையுடைய பெண்கள் |
| 15 ஒக் 2019 | தென் மாகாணம் | காலி | அரச உத்தியோகத்தர்கள் |
| 16 ஒக் 2019 | | | CSOக்கள் / NGOக்கள் / CBO க்களின் பிரதிநிதிகள் / இராணுவக் கணவரை இழந்த பெண்கள்/ FHH / காணாமற்போனோரின் தாய்மார் மற்றும் சகோதரியர் |
| 18 ஒக் 2019 | வட மத்திய மாகாணம் | குருநாகல் மற்றும் புத்தளம் | அரச உத்தியோகத்தர்கள் |
| 19 ஒக் 2019 | | | சிவில் சமூக நிறுவனப் பிரதிநிதிகள் |
| 22 ஒக் 2019 | சப்ரகமுவ மாகாணம் | இரத்தினபுரி மற்றும் கேகாலை | அரச உத்தியோகத்தர்கள் |

